35

35

கர்மம்பற்றிய குறிப்புகள் கொச்சி

புலவர்க்கு

நோய் வரும் நாடி நிதானமும், கால விந்தையும்
பாகம் III } 255 பக்கங்கள்

பாடலுக்கு உரை
எழுதவும்.

14/9

ஆய்வுக்கு எடுத்த நாள் :- 7/9/2001.

புலவர்க்கு

1. இத்துடன் குறிப்பிட்டுள்ள உரிய தலைப்பையும் குறிப்பையும், மேலும் தலைப்புகளை ... எழுதவும்.

17/9

ஆய்வு முடிந்த நாள் } 19/9/2001.

19/9/2001

பொ. பூலிங்கம்

ஈழத் திருத்தலங்களும் சில உண்மைகளும்

பாகம் III

490 – 744 பக்கங்கள் – 255 பக்கங்கள்

மண்டை பெரும்பாட்டுக்கு
நெய்

நாவல்பட்டை, அரசம்பட்டை, அத்திப்-
பட்டை, மருதம்பட்டை, கருங்காலிப்-
பட்டை, நெதியம்பட்டை, தென்னம்பாளை,
வாழைக்கிழங்கு, நாவல் கொட்டை,
ஆவாரம் வேர்ப்பட்டை, ஈந்தின் திண்டு
தண்ணீர்விட்டான் கிழங்கு, நன்னாரிவேர்,
ஆட்டாங் கொட்டை, முடக்கத்தான்
கீழாநெல்லி, அரணைத்தாமரை, அமிர்த-
-வல்லி, சிறுகீரைவேர், பொன்னாங்-
கண்ணிவேர், முசுமுசுக்கை வேர்,
நெய்தற்கிழங்கு, தாமரைவளையம்
முத்தக்காசு, இருவேர்த்தண்டு, மயிர்-
மாணிக்கம், கிளிஞ்சிப்பட்டை, ஆர்க்கம்-
பட்டை யிவைகள் வகைக்கு யரு-
னாழி நெல்லிடை, நாவல்கொட்டை
நானாழி, நாவல்பட்டை நானாழி
101 யிவையெல்லாங் கொண்டு வந்து
நறுக்கித் தொழித்து பெரிய பானையில்
போட்டு கலத்தண்ணீர் (வார்த்து. அவித்து)
வைத்து மூன்று நாட்கள் சமது வாய்க்
காய்ச்சி கஷாயம் முக்குறுணி யிருக்க
வடிகட்டிக் கொண்டு இதில் பசுவின்நெய்
நாழி கூட வார்த்து எரித்துக் காய்ச்சவும்

இ

இலவம்பிசின், திராட்சிப்பழம், பேரீச்சம்பழம்,
கொடிசைப்பாலை விதை, ஆர்க்கம்பூ, மாதளம்-
பிஞ்சு, வெட்டித்திருப்பி, ஏலம், மாங்கொட்டை-
பருப்பு, விளாம்பிஞ்சு, நிலப்பனைக்கிழங்கு,
கோஷ்டம், ஏலம், இலவங்கம், மரமஞ்சள்,
திப்பிலி, விழலரிசி, கடுகுரோகணி, பெருங்-
-பட்டை, அதிவிடையம், சாதிக்காய்,
இந்துப்பு இவை வகைக்கு காசிடை-4
கொண்டு வந்தரைத்து வழித்து
நெய்யுடன் கூட்டக் கலந்து வழித்துக்
கொண்டு இரண்டு வேளையும் வேளைக்கு
ஒரு கரண்டி கொடுக்கத் தீரும் வியாதி-
மலடு பெரும்பாடு நீங்கிச் சுகமடைந்து தீரும்.

உன்மாந்தைக்கு வளைவாய்ப்புக்கு இளையம் 8-க்கு நெய்.

தனிப்பசுவின் நெய் - படி - 12, கதலிப்பழம்-
31, தேசிப்பழம் - 159, யாஞ்சி - பலம் - 2
வெண்ணிலிட சீரகம் - பலம் - 1, சாதிக்காய்-
பலம் - 1, கிராம்பு - கழஞ்சு - 4, ஏலம், சீனாக்-
-காரம், அதிமதுரம், மிளகு வகைக்கு
கழஞ்சு - 1 கூட்டி பொடியாக்கிக் கொண்டு
சாண் அடுப்புக் கட்டி காய வைத்து அந்த
அடுப்பில் நெய்யைக் காய வைத்து அதில்
கதலிப்பழம் அரிந்து சிறுக நறுக்கிப் போட்டு

தேசிப்பழம் பிழிந்து வெல்லம் - பலம் 2
கூடப் போட்டு மூணு கொதியிட்டு பின்-
பொடுனையக் கூடப் போட்டு பொன்னிறமாக
பாகாக்கி சாண அடுப்புடன் கூட்டி வைக்கவும்
இரண்டு நேரமுந் தேசிக்காயளவு சாப்பிடவும்
முன் சொன்ன வியாதியெல்லாந் தீரும்.

பெரு வாதத்துக்கு நெய்.

இஞ்சி - பலம் - 200, கிழுவா தண்டை -
வேர் - பலம் - 6, சித்திர மூலி வேர் - பலம் - 3
யிவை யெல்லா மிடித்து பதக்கு நீரில் போட்டு
குறுணியாகக் காய்ச்சி யாறத்துக் கொண்டு
வெண் கடுகு, ஏலம், யாந்துப்பு, ஜவக்காரம், -
வெண்காரம், அன்னபேதி, மாங்கிஷபேதி,
சடாமாஞ்சி, கூடண், கற்பூரம், காந்தம்
யிவைகள் வகைக்கு பலம் - 2 கூட்டி
அரைத்து வெள்ளாட்டு நெய் 1. சித்தா-
மணக் கெண்ணையும் கூட்டி சாதித்து
காய்ச்சி வடித்து மூணு காசிடை உள்ளுக்கு
கொடுத்து வரவும். அண்ட வாதத்திலும்
பூசவும். பெரு வாதமுந் தீரும்.

வைத்தியம் நாற்பதுக்கும் நெய் ஆட்சி.

சீந்தில் தண்டு - பலம் - 100, நெல்லிக்காய் -
பலம் - 100, சித்தாமுட்டி வேர் - பலம் - 100

இவைகளை தனித்தனியே யிடித்து பானையின்
வேறாகப் போட்டு வகை தண்ணுக்குள்
எட்டு மரக்கால் தண்ணீர் விட்டு எட்-
-டொன்றாகக் காய்ச்சி வடித்து யந்நீரை-
வகைக் கிஷாயமு மொன்றாகக் கூட்டி
கற்கம் - இங்கிலியம், கோஷ்டம், வெட்டி-
-வேர், விலாமிச்சு, நற்சந்தனம், நீர்வள்ளிக்-
கிழங்கு, தாமரை வளையம், செங்கழுநீர்க்-
கிழங்கு, நன்னாரி, முத்தம், ஏலம்,
லவங்கம், பச்சிலை, நாகப்பூ, ஜாதிக்காய்,
தக்கோலம், சடாமாஞ்சி, திப்பலி, தகரம்,
பேய்ப்புடல், கண்டில் வெண்ணெய், பு[illegible]
சட்டம், மனையின் வெட்டிவேர், கச்சோலம்
பச்சைக்கற்பூரம். ஒரொன்று நாழி நெய்க்கு
ஒரு பலம் விழுக்காடு கூட்டி கியாழம்
வார்த்தரைத்து பூசணிக்காய்ச் சாறு - இருணி
பசுவின்பால் குழம்பு - இருணி, நெய் - இருணி
சர்க்கரை - 4, சிங்கவாழைப்பழம் - 20
கூட்டி அடிப்பத்தாமல் இளவாவிக் காய்ச்சி
பதத்தில் வடித்து தினம் உழக்கு நெய் விழுக்காடு
யிருபது நாட்கள் கொள்ள நாற்பது வகை
வைத்தியமுந் தீரும். கைப்பு, புளிப்பு தவிரவும்.

வெறிப்பயாத்தியத்துக்கு தேங்காய் நெய்

தேங்காய்ப்பால் - தாணி பெருஞ்சட்டி
அருப்பல் காய வைத்து சட்டிக்கு நெருபடி
உப்பு வறுத்துக் கொட்டிப் போட்டு. சட்டிக்கி
பத்து பால் விட்டு குழாவக் காய்ச்சி
தேங்காய் பிறுதலை - பலம்-1 பொடியிட்டுக்
காய்ச்சி வடித்துக் காலமே ஆழாக்கு நெய்யும்
கொடுத்து அந்தக் கருகும் கொடுக்க
வெறிப்பயாத்தியம் தீரும். பத்து நாட்கள்
கொடுக்கவும்.

பித்த பயாத்தியத்துக்கு நெய்

இரண்டு தேங்காய் திருகி பாலெடுத்துக்
கொண்டு வெள்ளைச்சாறு, வெண்ணைவேர
இரண்டு தேசிக்காயளவு அரைத்து அந்தப்
பாலில் கரைத்து எரித்து நெய் இறுத்துக்
கொடுத்து அந்தக் கருகுந் தின்னவும்.
பித்தப் பயாத்தியந் தீரும்.

பித்தத்துக்கு தலை முழுகு நெய்

பித்தத்தினை எண்ணெய்த்தனை
பேசிக் கொள்ளீர் பெரியோரே

×

பித்தத்துக்கு துணை முழுக்க நெய்

பித்தத்தினை எண்ணத்தனை பேசிக்கொள்வீர்
பெரியோரே
மாறுந் சீந்தின் பதினாறு பலம்
அறுத்துக் கொள்வீர் அதிற் பாதி
அன்றுவா மிச்ச மதிற்பாதி
முழுது மதுர மதிற்பாதி
ஏறு முருவேலி யதிற்பாதி
என்றுஞ் சந்தன மதிற்பாதி
பேதிருஞ் கழுநீர் அதிற்பாதி
போத்து முத்த மதிற்பாதி
பொத்தும் வளைய மதிற்பாதி
102 பொன்னாங் கண்ணிவே ரதிற்பாதி
ஒத்தும் மொழியார் முலைப்பால்தா...
... ... னாழி
ஆவின்நெய் ஒருநாழி
அழகின் கையாந்தகரைச்சாறும் ஒருநாழி
அரிய வெண்ணெய் யீநாழி
சேர அனைத்துக் கரைத்ததினை
திறமாய்ப் பதத்தில் வடித்தெடுத்து
கோதி காசிடை துணைப்பொருத்தி
குழிக்கு முழுகி வருவீராய்
காயாவு காயந் தணிவோடு
கண்ணின் பாய்ச்சல் குளிர்வதுப்பு
கிட்டஞ் சிரங்கு கரும்பித்தம்
கூட்டிய பித்தம் கிறுகிறுப்பு
மொட்டடுந் அறு முள்வெதுப்பும்
உடலின் மயக்க மோடுமே.

உரையெழுதியவ
[illegible]

பித்தம் மேலிட்டால் நெய்

நறுநெய் - ஆழாக்கு, நல்லெண்ணை - ஆழாக்கு, பாலை பாரண்டுமாய் கலந்து ரெண்டு கொதி காய்ச்சி மூணு எலுமிச்சம்பழம் பிழிந்து கொடுக்கவும் தீரும்.

வெறி பயித்தியத்துக்கு நெய்

எலுமிச்சஞ்சாறு - ௧, கையாந்தகரைச்சாறு - ௧, தேங்காய்ப்பால் - ௧, நல்லெண்ணெய் - ௧ கன்னார் - பலம் - ௧ அனைத்துக் கலந்து காய்ச்சி வடித்து கொடுக்கவும். இப்படி பத்துநாட்கள் உடனுக்குடனே செய்து கொடுக்கவும். வெறி கொண்ட பயித்தியந் தீரும்.

பித்த கிறுகிறுப்பு, உள்காய்ச்சல், கைகால் எரிவு பிணைகளுக்கு நெய்.

ஒருபடி சிறுவெங்காயம் பதினைந்து
கொண்டு ஒருபடி நறுநெய்யில் போட்டு பொன்னிறமாக வெந்து வரும்போது சிறங்கை சீரகம் சதகுப்பை அனைத்து இடப்பி போட்டு சீனி, வெல்லம், பனங்கற்கண்டு யாந்த மூன்று பொன்று நெய்யில் கலந்து மெழுகு பதத்தி லிறக்கி வைத்துக் கொண்டு இரண்டு நேரமும் வெருகடி ப்ரமாணம் தின்ன கைகால் எரிவு, உள்காய்ச்சல், கிறுகிறுப்பு, பிணைவெல்லாந் தீரும்.

இருமலுக்கு நெய்

சாத்திரி பாண்டி வேர் அரைத்து தேசிக்கா-
யளவு நறுநெய்யில் எரித்துக் கொடுக்க இருமல்
தீரும். அவ்வளவு நறுநெய்யில் வெண்ணிற-
மாக வெந்து நெய் நக்க இருமல் தீரும்.

வேறு

கோரோசனம் மூணு மஞ்சாடியிடை,
அதிமதுரம் - ஒரு மஞ்சாடியிடை, நறுநெய்ய-
விருத்து எரித்து நக்க இருமல் தீரும்
ஐ படி நெய்யில் எரிக்கவும்.

உஷ்ண இளைப்புக்கும் சுவாசத்துக்கும் இருமலுக்கும் முயல்நெய்.

ஒரு முயல் குடல் தோல் போக்கி தாணி பதக்கு
நீரில் போட்டு குறுணியாகக் காய்ச்சி ஆடா-
தொடை வேர் பலம்-20, கண்டங்கத்திரி-
வேர் - பலம்-15, வட்டத்திருப்பி வேர் - பலம்-10
யிவையெல்லாம் நசுக்கி தாணிப்பதக்கு நீர்
அ விட்டு குறுணியாகக் காய்ச்சி இரண்டு
கஷாயமும் கூட்டி கண்டங்கத்திரி,
நன்னாரி, அமுக்கிரா, ஆடாதொடை
இவ்வகை வேர்கள், முத்தக்காசு
வகைக்கு பலம்-௫ யிவையெல்லாம்
அரைத்து கஷாயத்தில் கூட்டி
பூசணிக்காய் அரிந்து இஞ்சிப் பொடி-2
நறுநெய்யில் வறுத்து திரிகடுகு, சிறுதேக்கு

தேவதாரம், சடாமாஞ்சி, சீரகம், மரமஞ்சள்,
இந்துப்பு, விழலரிசி, கடுக்காய்ப்பூ, சவுக்காரம்
பஞ்சதீபாயம் வகைக்கு - பலம் - ௫ கூட்டி
யரைத்து பசுவின் நெய் - இருநாழி, பசுவின்-
-பால் - 4 கூட்டி யெரித்து பதத்தில் சர்க்கரை-
அ தேன் உழக்கு விட்டு லேகியம் தினம்
கரண்டி நெல்லிக்காயளவு க்ஷயம், காசம்,
சுவாசம், இருமல் வகையும் உஷ்ண
சிலேத்துமமும் தீரும்.

இதுவும் முயல் நெய்.

பெருமருந்து வேர், பொன்முசுட்டை வேர்,
நிலவிளாம்பட்டை, செங்கத்தாரி வேர்,
மிளகரணை வேர்ப்பட்டை, ஆடாதொடை
வேர், சிறுகுறிஞ்சா வேர், தூதுவளை வேர்
அமுக்கிறா வேர், முன்னை வேர், நன்னாரிவேர்,
வட்டத்திருப்பி வேர், சங்கம் வேர் வகைக்-
பலம்-100 தண்ணீரில் போட்டு எட்டொன்-
-றாய்க் காய்ச்சி வடித்து நறுநெய் நாழி விட்டு
இந்துப்பு, பெருங்காயம், சவ்வியம், சித்திரமூலம்,
திப்பிலிமூலம், அதிவிடயம், கடுகு, கஸ்தூரி-
மஞ்சள், முந்திரிகைப்பழம், பேரீச்சம்பழம்,
வாய்விளங்கம், வசம்பு, நறும்பாசின், கடுக்காய்
சிற்றரத்தை, பேரரத்தை, இருசீரகம், திரிகடுகு
சாதிபத்திரி, கிராம்பு, வசுவாசிப்பூ வகைக்கு

விராகனிடை -1 கூட்டி நறுநெய், மருந்து-
-ஆனை பசுவின் பாலிலரைத்து விட்டு மயனீ
[illegible]த்தமும் சுதையுங் காய்ச்சிப் பிழிந்து கூட்டி
ஒருநாளிகைக் கொதியாட்டு மறுநாள் வடித்து
பத்துநாட்கள் தானியப்புடம் வைத்து இரண்டு
நேரமும் அரைண்டு நெல்லெடைகொள்ள க்ஷயம், காசம்,
சுவாசம் பித்தமெல்லாந் தீரும். மூர்ச்சை-
ஆம், வெள்ளாடு ஆம்.

உரை எழுதவும் 7/9

இளைப்புருமத்துக்கு முயல்நெய்
முழுக்கு பாட்டு.

பார்பெறு தனதர் யயயதீ
வளர்ந்திடு மிருப தாக
சீர்பெறு மாந்தை பினை
தீராத விக்கல் சுத்த
பேர்பெறு சுவாச காசம்
பெருத்திடு மிருமல் வாந்தி
தார்பெறு அரோசி டாக்கம்
தீர்க்குமென்னாம் மருந்து கேளாய்.

தனதுநல் பிஞ்சிச் சாறு
தளர்தீர கடுகோ டெலம்
மனதுந்தக் கோஷ்ட மாஞ்சில்
வாலுளி பரிதி திரிப்பி
கனக்குறு ஆகா கண்டங் கத்தரி
காத்திர அரத்தை பாந்து
தினை உளச் சிப்பல் இரத்தம்
நெய்யெனத் தின்னக் கொள்ளே.

163. அரித்தநல் வெண்ணெய் பாலும்
இரைந்தநீர் மிச்சம் வேலி
தரித்திடு சிந்தில் முத்தம்
சந்தனம் தேவ தாரி
உரித்திடு ......பிலிப்பிணை:
உயர்ந்தெப் பணைநன் னாரி
பரித்தமந் தணமந் தொடு
பகர்ந்தெரித் தலைக்கு நாளு.

இருமலுக்கு தாதுவிளம்பழம் நெய்.

முசுமுசுக்கைச் சாறு படி-¼, பொன்னாங்-காண்ணிச் சாறு-படி-¼, வெந்நீர்-படி-¼, பசுவின் பால்-படி-¼, மிளகு-பலம்-3, சீரகம் பலம்-3 இந்த இரண்டு வகையும் பொடியாக்கி விளாம்பழத்தைப் பிசைந்து சேர்த்து ஒரு நாள் ஒரு கல்லிறகில் குழியம் வைத்து மறுநாள் ஒரு இரண்டு எரித்து தினம் கரண்டி நெய் இரண்டு வேளை யருந்த இருமல் அனைத்தும் தீரும். நோயுள்ளவர் கொள்ள.

இருமலுக்கு நெய்

கோரோசனம்-மூன்றுமஞ்சாடி யெடை, அதி மதுரம் ஒருமஞ்சாடி யெடை, நறுநெய்-படி-ஐ, யதிலிட்டுக் காய்ச்சி வைத்து காசனை நக்க இருமல் தீரும்.

வெட்டை பாருமேனுக்கு நெய்

பறங்கிப் பட்டை - பலம் -10, நருந்தாளி-
யனை - பலம் - உ, சீரகம் - பலம் -1, மிளகு பலம் -1,
நாட்டுச்சர்க்கரை பலம் -5, நறுநெய் - சேர் -உ
மருந்தை அரைத்துக் கரைத்துக் காய்ச்சி களிப் -
போலே ~~இருத்தி~~ ~~[illegible]~~ தேனிக்காயளவு நெய்யுடன்
கொள்ள வெட்டை, பாருமேன் தீரும்.

நருந்தாளியனையும் அரிசியும் அரைத்து
அடை சுட்டு நெய் தோய்த்துத் தின்னத் தீரும்.

கக்குவானுக்கு நெய்

பேரரத்தை, திப்பலி, ஆனைத்திப்பலி, ஆடா-
தோடை, தூதுவளை வேர்ப் பழமும் கூட அரைத்து
நறுநெய்யாக் காய்த்துக் கொடுக்கக் கக்குவான்
தீரும்.

அவாசகாசத்துக்கு நெய்

மணத்தக்காளிச் சாறு - பலம் -100 நறு-
-நெய் கூடக் காய்ச்சிப் பதத்தில் திப்பலி - பலம்
வைத்துப் பாவி பொடியாட்டு நெய் நக்கி வர
~~[illegible]~~ அவாசகாசம் தீரும்.

பிரமியத்துக்கு நெய்

பச்சரிசிக் கழுநீர் - இறுணி, இஞ்சி -
யனைச் சாறு ~~([illegible])~~ உ யவை பாதண்டுஞ்
காய்ச்சி ~~[illegible]~~ ருசேவல், முத்தம், சீந்தில் கண்டு,

சந்தனம், ஏலம், லவங்கம், செண்பகம்
மதுரம், கோஷ்டம், கிராம்பு, சாத்திரபேதி,
கச்சோலம் வகைக்கு கழஞ்சு கூட்டி
அரைத்து நறுநெய் நாழி கூட்டிக் கொதிப்பித்து
கழஞ்சு நெய் கொள்ள பிரமியந் தீரும்.

அ. மேகவெட்டைக்கு நெய்

சீரகம் - பலம் - ௧௭, ஓமம் - பலம் - ௭, மதுரம் - பலம் - ௩, ஏலம் - பலம் ¼, கிராம்பு - பலம் - ௩, தேனி - பலம் - ௩, சாதிக்காய் - 1, ... தீரும்.

~~[illegible]~~ சத்தி சாரணைக் கிழங்கரைத்து தேக்காயளவு பசுவின் வெண்ணெயால் கொள்ளவும்.

பிரமியநெய்

நற்பாளை வேர்ப்பட்டை, அதிமதுரம் வகைக்கு வராகனிடை -10- இவற்றை சூரணம் செய்து நாழி நறுநெய்யில் கொதிப்பித்து வடித்து அந்த நெய்யுடன் சீக்கிரம் கூட்டிக் கொள்ளவும். பிரமியம் தீரும்.

மேகம், பெரும்பாடு, எரும்புருக்கிக்கு நெய்

பேயன் வாழைப்பழம், நிலைநீர், கரும்பு - சாறு, பசுவின் பால், நெய் சமன் அதிமதுரம், ~~மஞ்சிட்டி~~ மஞ்சிட்டி, ஏலம், லவங்கம், கோஷ்டம்,

வெட்டிவேர், விளாமிச்சு, முந்திரிகை, பேரீச்சம்பழம் இதிக்கு நெய் இற்கிழங்கு, நறுநெய், மருந்தை அரைத்துக் கரைத்துக் காய்ச்சி வடித்து தினம் - பலம் நெய் ஒரு மண்டலம் கொள்ள பித்த பித்தம், மேகம், எலும்புருக்கி, பெரும்பாடு பிவையெல்லாந் தீரும்.

அருகம்சாறு - 3, பசுவின் பால் - 3, நெய் - 2 காய்ச்சி முக்கவும் காதியுமிட்டு உள்ளும் கொத்து மேகத்து நணைக்கவும் தீரும்.

ஆண்தன்மையின் இந்திரியம் வழுகிறதுக்கு

செம்பரத்தை நெய் கைகண்டது.

செம்பரத்தை சாறு, அதின்படி - 30 செம்பருத்தியனைச் சாறு, அதின்படி மாதளம் பிஞ்சு, அதிமதுரம், மாம்பொட்டை - பருப்பு - 1, நாக்கொட்டை - 10, முத்தக்காசு - 30, நிலப்பனை - முள்ளங்கிரணி பொக்கினத்து - 30, நிலப்பனை - கிழங்கு - அ, தாமரைவளையம் - உ, பெருமரத்தோல் - கழஞ்சு - 1 இவையெல்லாம் உடம்பு பசுவின்பால் விட்டரைத்து நாழி பாலில் அரைத்து நாழி உழக்கு நறுநெய் விட்டுக் காய்ச்சி வடித்து தினம் கழஞ்சு நெய் கொள்ள ஆண்தன்மையின் இந்திரியம் வழுகிறது நிற்கும்.

அருகுநெய்

அருகம்புல் சாறு - 3, பசுவின் பால் - 3, நறுநெய் - 2 கொதிப்பித்து முக்கின் ரத்தத்தில்

நசியமிடவும். காதில் ரத்தத்துக்கு காதிலிடவும்
ஆண்குறியில் மயிர் பத்திரத்தத்துக்கு உள்ளுக்-
கொடுத்து மேலும் பூசத் தீரும்.

குறிப்பு.
இம் மருந்து செய்முறையின் அளவு - பல
என்றோ, நாழி என்றோ கொடுக்காது நெய்-
யும், பசுவின்பால் -3 எனக் கொடுக்கப்-
பட்டுள்ளது. இந்த ஏட்டின் பல இடங்களில்
இவ்வாறுள்ளது.

எலும்புருக்கி, இரத்தபித்தம், க்ஷயகாசம்,
மேக [illegible] பிணிகளுக்கு அதிமதுரநெய்.

அதிமதுரம், செங்கழுநீர் கோஷ்டம்,
செம்பரத்தையின்னை, ஆடாதோடையின்னை,
சீந்திற்கண்டு, பெருங் குரும்பை வகைக்கு
104. விராகனிடை - 10, யிவையெல்லாந் தூணி
நீரில் போட்டு காய்ச்சி சீலையில் வடிகட்டி
- நெய் கூட விட்டு ஒருநாள்
யினாற் கொதியாட்டு மறுநாள் மந்தாக்கினி-
-யாக எரித்து கடுகு திரண்ட பக்குவத்தி-
இறக்கி ஒரு பல்லாயில் வடித்து வைத்துக்
கொண்டு தினம் மாகாணி நெய் சாப்பிடவும்
முன் சொன்ன வியாதியெல்லாந் குணமாம்.

சுவாச ஸ்லேத்துக்கு நாயுருவி நெய்

நாயுருவி - பலம் - 100 கால்த்தண்ணீரில்
போட்டு குறுணியாகக் காய்ச்சி வடித்துக்
கொண்டு வெள்ளாட்டு நெய் - குறுணி

பிரண்டைவேர், புளிய கருணைக் கிழங்கு
மருள்கிழங்கு, காட்டுக் கருணைக்கிழங்கு
கொடிவேலிவேர், சிவதைவேர் இவைக்கு-
கற்கம் - திரிகடுகு, வெண்காரம், கடுகு
இந்துப்பு, பெருங்காயம், கடுகு-
ரோகணி, திப்பிலிமூலம், வசுவாசி இவை
யவை எட்டு மருந்தும் கடை மருந்து.
இருணி நெய்க்கு ஒரு பலம் விழுக்காடு
பிடித்துப் போட்டு கஷாயத்தில் அரைத்துக்
கரைத்து நெய் கலந்து மூன்று நாட்கள்
மூன்று வேளை கொடுக்க - நாலாம் நாள்
மெழுகு பதத்தில் வடித்து தின்னவும்
இரண்டு நெய் கொள்ளவும். பத்தியம் -
பசுவின்பால், நெய், காரப்பு, புளிப்பு
ஆகும். எல்லா மூல வியாதியும் தீரும்.

திரேகத்தின் அரைமணைப்பட்டதற்கு நெய்.

ஆற்றாலைச் சாறு - 3, தாழைவிழுதுச்-
-சாறும் இஞ்சிச்சாறும் உழக்கு, சிவந்தி-
னாயகஞ் சாறு - நாழி வெண்டிய நெய்
விட்டு எரித்து காற்றுப் புகாமல் கட்டி
வைத்துக் கொண்டு காசிடை நெய் கொடுத்து-
வரத் தீரும் வியாதி - அதிசாரம், உடம்பு உளர்ந்து
போனதும் தீரும். கைப்பு, புளிப்பு தவிரவும்.

சூக்கின பிரமேக முதலிருபத் தொன்றுக்கும் நெய்.

ஆவாரை பஞ்சாங்கமும் உலர்த்தி கருப்புக் கட்டி கூட்டித் தின்னவும்.

விடத்தேர் மருத்தோல் பலம்-15 பதக்கு நீரில் போட்டு நாழியாகக் காய்ச்சி வடித்துக் கொண்டு நாவல் பட்டை, அத்திப்பட்டை, நருவிலிப் பட்டை, ஆதியம் பட்டை, மாவிலங்கப் பட்டை, சிறுபுள்ளடி வேர், ஏரிளைத் தாமரைவேர், பொன்னாங்-கண்ணி வேர், நெருஞ்சில் வேர் வகைக்கு-பலம்-1 விழுக்காடு பதக்கு நீரில் போட்டு நாழியாகக் காய்ச்சி முந்தின கஷாயத்தில் கூட்டி இத்துடனே வெள்ளரிக்காய்ச்-சாறு, பூசணிக்காய்ச் சாறு, நெல்லிக்காய்ச்-சாறு, கருப்பஞ் சாறு சாறு, கோரைச் சாறு, வகைக்கு உரி விழுக்காடு கூட்டி

அ. ஏலம், கார்போகரிசி, பேரிச்சம்பழம், கர்க்கடகசிங்கி, திப்பிலி, அதிமதுரம், முத்தக்காசு, மாதளம்பிஞ்சு, அத்திப்பூ, சீக்கரை வகைக்கு கழஞ்சு-1 விழுக்காடு ஒருநாழி நெய் வார்த்து அரைத்து நக்கவும். இருபத்தொரு வகைப் பிரமேகமும் தீரும்.

அசியா பாகம் கிரந்திக் குடோரி
(கூனை)

பறங்கிப்பட்டை யிடித்து வடிகட்டிக் கொண்ட தூள் - மாகாணி, மிளகுத்தூள் - கால் மாகாணி, சீரகத்தூள் - கால்மாகாணி, பாலில் அத்திசெய்த கெந்தகம் - பலம் - ௨ யிவைகளை யொன்றாய்க் கலந்து அந்தி சந்தி வெருகடி பிரமாணந் தின்னவும். பத்தியம் - பால், நெய், துவரை, கீரைத் - தண்டு, சிறுபயறு, வாழைக்காய், அவரைப் - பிஞ்சு கூட்டிக் கொள்ளவும்.

பிரமியம் நீக்கும் நெய்

செங்கத்தாரிப்பட்டை, தூதுவளை வேர்ப் - பட்டை, செம்முள்ளி வேர்ப்பட்டை, தனித்தனியே அரைத்த விழுது எலுமிச்சங் காயளவு மூன்று மாகாணி பசுவின் நெய்யில் கலந்து மூன்று மாகாணிப் பாலும் விட்டுக் காய்ச்சி மெழுகு பதத்தில் வடிக்கிற காலத் - தில் பாளை சங்கு பொடி மூன்று வராகனிடை போட்டு அதில் நெய் வடித்துக் கொண்டு இரண்டு வேளை அட்டிடை நெய் கொள்ளவும். தீரும்.

அசியா பாகம் வாய்ப்புண்ணுக்கு நெய்.

தேங்காய் நெய், பசுவின் பால், நாக-மல்லி வேர் அரைத்த விழுது எலுமிச்சங்-காயளவு, அதிமதுரம் - வராகனெடை - 1, கருந்தாக்கிலயம் - வராகனெடை - 1, கோரோசனை - வராகனெடை - 2 யிவை-யெல்லாம் பால் வார்த்தரைத்து நெய்யிற் கலந்து மெழுகு பதத்தில் வடித்து மூன்று வேளை கொப்பளிக்கவும். மூன்று நாட்களில் வாய்ப்புண், அசிய முதலாய்த் தீரும்.

கிராணிக்கு சங்கிரகம்.

சேங்கொட்டை - 3 முகின் வெட்டிப் போட்டு நாலஞ்சாக நறுக்கிக் கரண்டி-யில் நெய்விட்டு வறுத்து உழக்கு கருங்குறுவையரிசி கூடப் போட்டு 5 யடித்து மாவாக்கி காசளவு தேனில் கொள்ளத் தீரும்.

கிராணிக்கு நெய்.

அத்திப்பட்டை, ஆலம்பட்டை, இத்தி-பட்டை, மருதம்பட்டை, நாவற்பட்டை, அரசம்பட்டை, வறபுளாப்பட்டை, வெரு-மரப்பட்டை, பொன்முசுட்டைப் பட்டை, கொன்றைக் கிழங்கு, வில்வப் பத்திரி வேர்ப்பட்டை

மாதளம் பிஞ்சு ... ப்பாண்பட்டை, கருவேலம்பட்டை, விளாம்பட்டை வகைக்கு ...

தொடர்ச்சி இல்லை.

104 வது ஏடுக்குப் பிறகு 111 வது ஏடுதான் உள்ளது.

111. பூசணிக்காய் நெய்

பசுவின் நெய் - நானாழி, பசுவின் பால் - நானாழி, இளநீர் - இருதூணி, பூசணிக்காய்ச் சாறு - ~~[illegible]~~ இருதூணி, கரும்பஞ் சாறு - நானாழி, தண்ணீர்விட்டான் கிழங்குச் சாறு - இருநாழி இவையெல்லாம் கூட்டி பசுவின் பால் வார்த்து இதுக்கு கற்க மருந்து - கடுக்காய், தான்றிக்காய், நெல்லிப் பருப்பு, ஏலம், பேரேலம், நன்னாரி வேர், சந்தனம், கருணைக் கிழங்கு, மஞ்சள், மரமஞ்சள், சித்தாமல்லி, பேராமல்லி, நாணல் கிழங்கு, சிறுவழுதிலம் வேர், கோஷ்டம், மஞ்சிட்டி, நாணல்பூ, மாதளைப் பிஞ்சு, ஏலவரிசி, தாளிசப்பத்திரி, தாமரை வளையம், நெய்தல் கிழங்கு, நீலாமணக்காங் கிழங்கு, இவைகள் வகைக்கு கழஞ்சு 3 கொண்டு வந்து பசுவின் பால் வார்த்தரைத்து வழித்து கரைத்துக் காய்ச்சி பதத்தில் இறக்கி வைத்துக் கொண்டு இரண்டு வேளையும் வேளைக்கு

ஒரு கரண்டி நெய் குடித்துவரத் தீரும் வியாதி - க்ஷய பாண்டுரோகம், சரீரத்தில் பரந்த புண்களும், மருந்தீடு மருந்தின் முறியும் சேர்வை, நீரிழிவு சீதம், மேகம், வெண்பள்ளைகளுடைய கெர்ப்ப வியாதி, கெர்ப்ப ரோகம் பிணியையெல்லாந் தீர்ந்து கெர்ப்பந் தரிக்கும். சரீர புஷ்டியுண்டாம்.

வெள்ளைக்கட்டிக்கு நெய்.

நாரத்தம் பழச்சாறு - படி ௨, வாழைத்-சாறு - படி ௨, பசுவின் நெய் - நாலுபடி யாவற்றை சட்டியில் வார்த்து யிதுக்குக் கற்க-மருந்து - இந்துப்பு, சீரகம், பெருங்காயம், சித்த-வாட்சாரம், சாதிக்காய், அக்கு, மிளகு, திப்பிலி மூலம், திருமூலம், தேவதாரம், செவ்வியம் யிவை வகைக்கு காசிடை - ௨ கொண்டுவந்-தைத்து வழித்துக் கரைத்துக் காய்ச்சி பதத்தில் வடித்து வைத்துக் கொண்டு இரண்டு வேளையும் வேளைக்கொரு கரண்டி நெய் குடித்துவரத் தீரும் வியாதி - குன்மங்கள் சூலை, பெருவயிறு, வெள்ளைக்கட்டிகள், கெர்ப்ப ரோகம் பிணியையெல்லாந் தீரும்.

ஜெயரோகத்துக்கு நெய்

பசுவின் நெய் - படி 1, அமுக்கிராக்கிழங்கு - பலம் - ௨, மிளகு - பலம் - ௨, திப்பிலி - பலம் - [illegible] அக்கு - பலம் - ௨, பெருங்காயம் - பலம் - 1

அ. திப்பிலி - பலம் - 1 இவையெல்லாங் கொண்டு
வந்து பொடிசெய்து நெய்யில் போட்டுக்காய்ச்சி
பத்திரக்கி வைத்துக் கொண்டு மண்பொடி
முருந்து - சக்கரை - பலம் - ௨, சீரகம் பொரித்த
சூரணம் - பலம் - ௨ இவைகளைக் கூடப் -
போட்டுக் கிளறி வைத்துக் கொண்டு இரண்டு
வேளையும் வேளைக்கொரு கரண்டி நெய்
கொடுத்து வரத் தீரும் வியாதி - சொரியாக்குணம்,
அக்கினி மாந்தம் [struck] வாய்வு இவையெல்லாந்
தீரும்.

கெர்ப்ப ரோகங்களுக்கு கிளிமூக்குக் கிழங்கு நெய்.

கிளிமூக்குக் கிழங்குச்சாறு, பாலிரலிக்கிழங்குச்-
-சாறு, அவரியிலைச்சாறு, கத்தாழஞ்சாறு
கடப்பமிலைச்சாறு, மருதன் உழுந்துசாறு-
[struck] அருகம்புல்சாறு, தண்ணீர்விட்டான்-
கிழங்குச்சாறு இந்தச்சாறுகள் வகைக்கு-
உரி, பசுவின் நெய் - நாழி இவையெல்லாந்
[struck] கூட வார்த்து காய்ச்சும் போது இதில்
கற்கடருந்த - அதிமதுரம், திசாங்கலவை கோஷ்டம்,
விளாமிச்சம் வேர், நல்லசந்தனம், நெத்[illegible]
கிழங்கு, நன்னாரி வேர், ஏலம், இலவங்கம்,
லவங்கப் பத்திரி, (… [struck]), முத்தக்காசு
இவைகள் வகைக்கு பலம் - வ இவைகளை
கொண்டு வந்து பசுவின் பால் வார்த்தரைத்து

நாணாழி பசுவின் பாலில் கரைத்து காய்கிற நெய்யில் வார்த்துக் காய்ச்சி பதத்தில் வடித்து வைத்துக் கொண்டு இரண்டு வேளையும் வேளைக்கொரு சின்னக் கரண்டி நெய் குடித்து வரத் தீரும் வியாதி - கெர்ப்பத்தில் பிறக்கிற வியாதிகளும் கெர்ப்ப தோஷங்களும் மலட்டு வியாதிகளும் தீர்ந்து கெர்ப்பந்தரிக்கும். பத்தியம் - உப்பு, புளிப்பு, துவர்ப்பு இவைகள் தவிர்க்கவும்.

கெர்ப தோஷங்களுக்கு கிளிமூக்கு நெய்

கிளிமூக்குக் கிழங்கு தாணி நெல்லிடை நிறுத்து நறுக்கி தொழுத்து பெரிய பானை-யில் போட்டு கலனே தாணி தண்ணீர் வார்த்து பாந்த இரண்டு தனைப்பானையும் வெவ்வேறு காய்ச்சி இயாழும் அஷ்டபாக-மாக வடிகட்டிக் கொண்டு [illegible] பசுவின் நெய் முன்னாழி கூட வார்த்து யாதுக்கு கற்க மருந்து - அதிமதுரம்

112 கோஷ்டம், விளாமிச்சம் வேர், நல்ல சந்தனம், நெய்தல் கிழங்கு, நன்னாரி வேர், இலவங்கப் பட்டை, ஏலம், லவங்கப் பத்திரி, சித்தாமுட்டி, முத்தக்காசு இவைகள் வகைக்கு பலம் - ½ கொண்டு வந்து பசுவின் பால் வார்த்தரைத்து குறுணிப் பாலுடன் கரைத்து கூட வார்த்துக் காய்ச்சி கடுகு திரண்டு

வரும் போது பாக்கி வடிகட்டி வைத்துக்
கொண்டு இரண்டு வேளையும் வேளைக்-
கொரு கரண்டி நெய் கொடுத்து வரத் தீரும் வியாதி.
விஷப் பாகந் தீரும். தடித்த உடம்பு வத்தும்
சோகை வீக்கம் வத்தும். காமாலை தீரும்.
ஆயுசு வர்த்திக்கும். யோனி பிரமேயங்கள் தீரும்
கெர்ப்பத்தில் பாக்கிற வியாதிகள் தீரும்.
மலட்டு வியாதிகள் தீரும். கெர்ப்பந் தரிக்கும்.
பேறுண்டாம்.

மூலக்கிராணிக்கு நெய்.

ஆயில் பட்டை - பலம்-5, நீர்புங்கம்பட்டை-
பலம்-50 பிளைகளை நசுக்கி இருதூணி
நீர் விட்டு நாலொன்றாய்க் காய்ச்சி வடித்துக்
கொண்டு அதில் பால் பதக்கு, நெய் குறுணி
விட்டு திப்பலி - பலம்-12, சுக்கு - பலம்-12,
சித்திரமூலம் - பலம்-12 இம்மூன்று மிடித்துச்
சூரணம் பண்ணி நெய்யில் போட்டுக் கரைத்து
மெழுகு பதமாகக் காய்ச்சி வடித்துக் கொண்டு
தினம் அந்தி சந்தி இருகரண்டி நெய் கொள்ளவும்.
இதுக்குத் தீரும் வியாதி - மூலம், மூலக்கிராணி,
கிருச்சிர மேகம், அக்கினிமாந்தம், அதிசாரம்,
சீரண நஷ்டம், தாகசுர மிவையெல்லாந்
தீரும். கையாட்சி.

பூசணிக்காய் நெய்

பதக்கு பூசணிக்காய்ச் சாறு நாலொன்றாய்க்
காய்ச்சி அதில் நல்நெய் - நாழி, கருப்பஞ்சாறு-

நானாழி கூடக்கலந்து கடைச்சரக்கு-
பாளைவேர், முத்தக்காசு, பற்பாடகம், சித்-
-தரத்தை, சிறுதேக்கு, புல்லரசி, இந்துப்பு,
திப்பிலி மூலம், கொடிவேலி வேர்ப்பட்டை,
இருப்பைப்பூ, ஆனைத்திப்பிலி வகைக்கு-
பலம்-1 சேர்த்து வெண்ணீரிலரைத்து
நெய்யில் காய்ச்சி வடித்துக் கொள்ளவும்.
உடம்பெரிவு, உட்காய்ச்சல், அக்கினிமாந்தம்
உடம்புவர்த்தி அஸ்தியின் சூட்டை மேகம்,
எலும்புருக்கி யிவையெல்லாந் தீரும்.
கையாட்சி.

உடம்பெரிவு, மேகக்காந்தி, பித்தகாந்தி யிவைகளுக்கு தலைமுழுக நெய்.

பசுவின் நெய் - ஆழாக்கு-5, பச்சைக்-
கற்பூரம், குங்குமப்பூ கோரோசனம்,
தேத்தாங்கொட்டை யிவைகள் வகைக்கு-
கழஞ்சு-1, பூநீறு-கழஞ்சு-௨, முளைப்-
பால் - ஆழாக்கு, கரிசலாங்கண்ணிச்சாறு-
அ -ஆழாக்கு-5 இந்தச் சாற்றில் நெய் விட்டுக்
கலந்து தேத்தாங்கொட்டையை. முளைப்-
-பால் விட்டரைத்து கூடக்கலந்து
பூநீறும் கூட அரைத்துக் கரைத்து நெய்
வடிக்கும் போது மத்த மூன்று வகையும்
பொடி செய்து குடுவையில் போட்டு நெய்

வழுத்து வைத்துக் கொண்டு நான்கு நாட்களுக் கொருக்கால் முழுகவும். தலைப்-பிணி சொன்னதெல்லாம் தீருமாம்.
·அடங்கி

வியாதிகளுக்குக் குழம்பு வகைகள்

இருமலுக்கு கொம்மட்டி மாதளங்காய்க் குழம்பு:- கோரோசனம் - பலம் ௨, சுக்கு, திப்பிலி, கிராம்பு, சாதிக்காய், கடுக்காய் - பலம் - 1, ஏலம் - பலம் - 1, வகைக்கு பலம் - ௨, வெட்டி வேர், தாளிசபத்திரி - பலம் - ௨, விளாமிச்சம் வேர் வகைக்கு பலம் - ௨, சர்க்கரை பலம் - 10, நறுநெய் படி - ௨, கொம்மட்டி மாதளங்காய் - 3 தேன் படி - வ, துவைத்து சாறுவிட்டு கடைச்சேர்க்கித் தாளிட்டுக் குழம்பு காய்ச்சிக் கொடுக்க பதினைந்து நாளில் இருமல் தீரும். பத்தியம் - பசுவின் பால், நெய், தூதுவளங்-காய் வற்றல், மணத்தக்காளி வற்றல் இவை-யெல்லா மாகும்.

வில்வக் குழம்பு

வில்வவேர் - பட்டை போக்கின வேர் - பலம் - 8 நறுக்கி இருணி நீரில் போட்டுக்

காய்ச்சி கியாழம் பலம்-௨, கொத்துமல்லி-
பலம்-௮ இருணி நீரில் காய்ச்சின கியாழம்-
பலம்-௨, நாட்டுச்சர்க்கரை-பலம்-௨,
இரண்டு கியாழமும் மொன்றாய்க் கூட்டி
சர்க்கரை கரைத்து வடிகட்டிக் காய்ச்சி
பாகுபதத்தில் மிளகு-பலம்-வ, திப்பிலி-
பலம்-வ, சீரகம்-வராகனெடை-௨, அதி-
மதுரம்-வராகனெடை-௨, ஏலம்-வராக-
னெடை-௭, அக்கி பலம்-வ யிவைகளை-
-ளாய் சூரணம் இடும்பிட்டு தேன்-
பலம்-௩ கூட வார்த்து குழம்பு செய்து
சாப்பிட, வெறுப்பு, அரோசிகம், கிறு-
கிறுப்பு யிவைகள் தீரும்.

ஆவாசம், அதிசார பிதுக்கு இஞ்சிக்
குழம்பு!- இஞ்சிச்சாறு, பசுமஞ்சள்சாறு
சாங்கிளை, கண்டங்கத்திரி, குப்பைமேனி
கையாந்தகரை, முருங்கிலை, செம்முள்ளி
மணித்தக்காளி, பேய்ப்புடல், நாயுருவி
வெங்காயம் யிவ்வகைச் சாறுகள்
வகைக்கு நாழி யேகமாய்ச் சேர்த்துக்
காய்ச்சி இருக்கின பக்குவத்தில் சமன்பொடி-
அக்கி, திப்பிலி, மிளகு, மூலம், சவ்வியம்,
சித்திர மூலம், கடுநெல்லி, தான்றிக்காய்,
கர்க்கடகசிங்கி, சிறுதேக்கு, செங்கழுநீர்க் கோஷ்டம்,

ஏலம், மரமஞ்சள், சயாந்தவணம், அத்தித்
திப்பிலி, இலவங்கம், ஜடாமாஞ்சில், அந்தணை
யிவை வகைக்கு பலம் - 2 விழுக்காடு
சேர்த்து பொடித்து சூரணம் பண்ணி அந்தப்-
பாகின் தூவிக் குழம்பான பொழுதே யிறக்கி
ஆறவைத்து, உரி தேனும் சர்க்கரை - பலம் - 4
கலந்து ஒரு உச்சிக்கரண்டி யளவு கொள்ள
113. காச சுவாசம், சுரம், மற்ற ரோகங்களும்
தீரும். பத்தியம் - கைப்பு, புளிப்பு தவிரவும்.

இருமலுக்குக் கண்டங்குழம்பு
தொட்டு நக்கி வரவும்.

ஆடாதோடை, நெருப்பழச்சாறு, வெள்ளை
இம்பூறா வகைச்சாறு, யிவை, தூதுவளம் -
பழச்சாறு சரி கூட்டிக் காய்ச்சி திரிகடுகு,
திரிபலை, கற்கடகசிங்கி, ஜடாமாஞ்சி
சிறுதேக்கு, கோஷ்டம், இந்துப்பு சரி
பொடி சீலையில் வடித்துக் குழம்பின் தூவி
தேன் விட்டுக் கிளறி இறக்கி வைத்துக்
கொண்டு ஒரு நாளைக்கு 4 முறை 6 முறை
தொட்டு நக்கி வரவும். இருமல், இரைப்பு,
சுவாசகாசம் இவை தீரும்.

உன்மாந்தைக்குக் குழம்பு.

உரைஎழுதியவ 7/9

பாட்டு

இருமல் சுரமும் தலைவலியும்
யாராங்கா திண்ணம் விழும்போலே
பெருகிக் குத்திக் குடைந்ததையும்
பித்த துயரும் வாய்வெருப்பும்
உருகி சுயலவான இளைத்துமடும்
உற்க முறவே வெழுந்திருக்கம்
ஒருமைப் படலை உன்மாந்தை
செய்யும் குணங்க ளிதுவென்று
கனையும் வல்லத் தமிழ்வாணர்
கண்டே பெருகப் பேசுவரே.

இதுக்குக் குழம்பு.

கருஞ்சீரகம் - கழஞ்சு - 1, நாயுருவி - கழஞ்சு - 1, கடுக்காய் - 4, கருப்புக்குந்திரிக்கம் - 4, பணங்கடை - 4, திப்பலிப்பொடி - கழஞ்சு - 1 உடைத்துத் தேனு முட்டை வெண்கருவுங் கூட்டிக் குழைப்ப குழம்பு செய்து கொதிக்க கொதிக்கத் தின்னவும். உன்மாந்தை தீரும்.

நீர்முழுக்கு ஆவாரம்பட்டைக் குழம்பு.

ஆவாரம்பட்டை, கொன்றைப்பட்டை, வில்வப் பத்திரிச் சக்கை, நாவல்பட்டை, அத்திப்பட்டை, மருதம்பட்டை, பருத்திப்பட்டை,

கடலழிஞ்சிப்பட்டை, பாதிரிப்பட்டை
யிவைகள் வகைக்கு பலம்-5 நருக்கித்
துவைத்து பெரிய பானையிலிட்டு கால்
தண்ணீர் விட்டு யெட்டிலொன்றாய்க்
காய்ச்சி வடித்து இதில் பசுவின்பால்
படிக்கு விட்டு ஏலம், லவங்கம், சீரகம்
கருஞ்சீரகம், சாதிக்காய், அபின் வகைக்கு
பலம் 1 பொடித்துச் சூரணஞ் செய்து இப்பாகத்-
-தில் போட்டுக் காய்ச்சி குழம்பாக யிறக்கி
வைத்துக் கொண்டு ரெண்டு வேளையும்
வேளைக்கு வராகனிடை குழம்பு கொடுத்து
வரவும். நாக்காலைஞ் சாமபட்டுப் படுக்கும்
போது கியாழம், வட்டத்திருப்பி வேர்,
பேயத்தி வேர், நெருஞ்சில் வேர், புளியங்
கொட்டைத் தோல் வகைக்கு வராகனிடை 2
இட்டு நருக்கி சட்டியிலிட்டு ஒருபடி
தண்ணீர் வார்த்துக் காய்ச்சி ஆழாக்கிருக்க
வடிகட்டி இதைத்து ஆமணக்கெண்ணெய்
மேசைப்பங்கும் போட்டுப் பிடிப்பித்துப் பருக்கவும்
மூன்று நாட்களுக்குக் கொடுக்கலாம் ஆமணக்
கெண்ணெய்த்தலைக்கிட்டு முழுகி வரவும்
இப்படி இருபது நாள் செய்து வர நீரிழிவு தீரும்.

இரத்தத்துக்கு நீர்மைக் குழம்பு

ஆமை-3 கொண்டு வந்து சட்டியில்
அ. வைத்துப் பசுவின்பால் மிதக்க வார்த்து

அடுப்பின் வைத்து மெதுவாய் மூன்று
நாட்கள் வேகப் போட்டு பின் அண்ட
வாட்டு மறுகால் இளநீர் தண்ணீர்
வார்த்து மூன்று நாட்கள் வேகவைத்து
நீர் அண்ட வாட்டு மறுகால் கூடி வார்த்து
மூன்று நாட்கள் வேகவைத்து கொஞ்சம்
நீரிருக்க இறக்கி யாறவைத்து சூடு,
எலும்பு எல்லா மெடுத்துப் போட்டு சாறு-
வெல்லாம் கலைந்து இதுக்கு மருந்து-
தான் இலவம்பட்டை, வெள்ளெருக்கம்-
பட்டை, காட்டு மல்லிகை வேர், கொடி-
-வேலி வேர், நொச்சின் வேர், மிளகு,
வால்மிளகு, திப்பலி, திப்பலி மூலம்,
நாககேசரம், வாய்விளங்கம், ஏலம்
இலவங்கம், பெருங்காயம், இலவங்கப்பட்டை
யிவை வகைக்கு பலம்-1 கொண்டுவந்-
திடித்து சூரணம் பண்ணி இந்தச் சாறியில்
கொட்டிக் கிளறி யெடுத்து அடுப்பில்
வைத்துக் கிளறி இழம்பின பக்குவத்தில்
மறுசட்டியில் நல்லெண்ணெயை வார்த்து
அடுப்பில் வைத்துக் காயும் போது கருவேப்-
பிலை, சீரகம், வெந்தயம் இவைகளைக்
கூட்டப் போட்டுப் பொரித்து சிவந்து வரும்
போது இந்த மருந்தைக் கொட்டி
மூடி பாகு திரண்டு சாறியைப் பொரித்து

யிறக்கி வைத்துக் கொண்டு இரண்டு
வேளையும் வேளைக்குப் பாக்களவு
தின்றுவர தீரும் வியாதி - அஜீட குன்மம்
அசீரணம், அக்கினி மாந்தம் யிவை-
யெல்லாந் தீரும்.

பித்த பாண்டுவத்துக்கு புளியிலைக் குழம்பு.

புளியிலைச் சாறு - குறுணி, பசுவின்
கோமியம் - குறுணி, இதுக்கு தாரமிரும்பு
வீசை - ௭, வெண்காரம் - வீசை - 1 கொண்டு
வந்து பிறந்தப் புளியிலைச் சாற்றி லூறப்
போட்டு ஒருநாள் பொறுத்து வடித்துக்
கொண்டு பிறகு கோமியத்தில் போட்டு
ஒருநாள் ஊற விட்டு வடித்துக் கொண்டு
யிந்த இரண்டு வகையும் அடுப்பில் வார்த்து
இதுக்கு கற்க மருந்து - அரப்பொடி, கொந்தகம்
இந்துப்பு, சுக்காரம், பெருங்காயம்,
வெள்ளுள்ளி, வசம்பு, ஓமம் யிவைகள்
வகைக்கு கழஞ்சு - 4, கடுகு, மிளகு,
வெந்தயம் யிவைகள் வகைக்கு பலம் - ௫
சுக்கு - பலம் - ௨ கடுக்காய் - 50, வாலுழு-
-வையரிசி - பலம் - ௫ யிவைகளையெல்லாம்
கூட்டி யரைத்துக் கரைத்து கூட வார்த்துக்
காய்ச்சி குழம்பு போல வரும்போது இறக்கி

5௨௨

ஆமணக் கெண்ணெய் உழக்கு கூட வார்த்துக்
கலந்து வைத்துக் கொண்டு இரண்டு வேளையும்
வேளைக்கு ஒரு மாடையிடைக் குழம்பு
கொடுத்து வரவும். பிற்பாடு மேலுக்குப்பூச்-
மருந்து — கொடிவேலி வேர், கோடாசாலை
114. வெட்டதிருப்பி, மிளகு, சாறுவேளை, அவுரி-
வேர் யிவை சமன் கூட்டி யரைத்து
தலைப்பிடம் போங்கும்... ~~.....~~ ...

பித்த பாண்டுவத்தின் குணம் — புறங்காலும்
புறங்கையும் வீங்கும், முகம் அதைக்கும்,
கண் வெளுக்கும், காது விறுச் சொடியருக்கும்,
தலையும் படரியுங் கனத்துத் திமிர்த்து கடுப்புண்-
டாயிருக்கும். நீரேற்ற மாயிருக்கும், கிடுதனம்
கனத்து ஆரோக்கிய மற்று தனை தியக்கங்
கொண்டு காலோச்சலா யிருக்கும். இந்த
பித்த பாண்டுவத்தின் குணங்களான் றாந் தீரும்

வாய்ச்சித்துக்கு கொடிமாதளங்காய்க் குழம்பு.

கொடி மாதளம்பழம் கொண்டு வந்து
மேல் புறணியைச் சீவிப் போட்டு உரலில்
போட்டு காடி தெளித்து இடித்துச் சாறு பிழிந்து
இந்தச் சாறு — உழக்கு, நல்ல மாதளம்பழச்சாறு-
உழக்கு மாகக் கூட்டி இதுக்கு பழவெள்ளம்-
பலம் — 10 உடம் போட்டுக் கரைத்து வடிகட்டி
அடுப்பின் வைத்துக் காய்ச்சி பாகுபோலே
வரும் போது யிறக்கி வைத்துக் கொண்டு

இ

பித்துக்கு மென்பொடி மருந்து - ஏலம் பலம் - 1
திப்பிலி - பலம் - 2 யிவைகளைப் பொடி செய்து
பாகிலே தூவிக் கிளறி வைத்துக் கொண்டு
இரண்டு வேளையும் வேளைக்கு வராகனெடை
கொடுத்து வரத் தீரும் வியாதி - வாய்ச்சுரம்
வெக்கை, குன்மம், அரோசிகம், ஆக்-
கட்டு, மலபந்த வாயு, மலத்தாலே ஆமம்
அடுந்ணம் போலே அத்தி வந்து விழுகிறது
யிவை விழுந்த போது வாய்ச்சிரங் தீரும்.
அக்கினியுண்டாம்.

கொடிமாதளங்காய்க் குழம்பு

கொடிமாதளம் பழச்சாறு, இஞ்சிச் சாறு
தேன், சீக்கரை யிவை வகைக்கு நாழி
கூட்டி சர்க்கரையைக் கூடப்போட்டுக்
கரைத்து வடிகட்டி அடுப்பில் வைத்துக்
காய்ச்சிப் பாகுபோலே வரும் போது
யிறக்கி வைத்துக் கொண்டு யிதுக்கு
சரக்கு மருந்து - சாதிபத்திரி, சுக்கு,
திப்பிலி, மிளகு, கடுக்காய், தானிக்காய்
நெல்லிப்பருப்பு யிவை வகைக்கு கழஞ்சு-
1 கொண்டு வந்து பொடி செய்து யிந்தப்
பாகிலே கொட்டிக் கிளறி யிதுவும் பசுவின்
நெய் - நாழி கூட வார்த்துக் கிளறி
குழம்பு போலே எடுத்து வைத்துக் கொண்டு
இரண்டு வேளையும் வேளைக்கு

ஞெணுமாணைடயணைடக் குழம்பு கொடுத்து-
வந்தீரும் வியாதி ஸ்வாசகாசம், க்ஷயம்,
சிலேட்டுமசுரம், இருமல், அக்கினிமாந்தம்,
மூக்குநீர்ப்பாச்சல் யிவைகளெல்லாந் தீரும்.

அ.

அக்கிர சன்னிக்கு நண்டுக் குழம்பு.

(ஞெண்டு நண்டு) கொண்டு வந்து சுனையும்
உரலில் போட்டுத் தொழுத்தி சாறு பிழிந்து
கொண்டு இந்தச் சாதத்துக்கு சமன் பாதி
சிறுநீர் வார்த்த யாதின் திப்பலி கொண்டு
வந்து நருக்கி அரிசியை யெடுத்துப் போட்டு
யிடித்து சூரணம் பண்ணி ஒரு பலம்
சூரணம் கூடப் போட்டுக் காய்ச்சி குழம்-
பாக வரும்போது யிறக்கி வைத்துக் கொண்டு
வேளைக்கு வராகனிடை குழம்பு யெடுத்துக்
கொண்டு யிதுக்கு சன்னிக்குத் தக்கதொரு
மாத்திரை கூட வைத்துக் கொடுத்து வரவும்
அக்கிரசன்னி, பித்தசன்னி சன்னி பதிமூன்று
வகையும் தீரும். வாய்வுகளுந் தீரும்.

திமிர் வாய்வுகளுக்கு இங்கிலியக் குழம்பு.

இங்கிலியம் - பலம் - ௨, கடுக்காய் பலம் 7,
தானிக்காய் - பலம் - 7, நெல்லிப்பருப்பு - பலம் - 7,
சீந்தில் கொடி - பலம் - 3௨ யிவைகளெல்லாம்

கொண்டுவந்து நொறுக்கித் தொழித்து வெங்கல
பானையில் போட்டு வெளுப்பு தண்ணீர்
வார்த்துக் காய்ச்சிக் கியாழம் நாலொன்றாய்
யாருக்க ~~யா[illegible]~~ வடிகட்டிக் கொண்டு இந்திரியோ-
சூரணம் - வராகனிடை -4, [illegible]
சூரணம் வராகனிடை - 4, சீந்தில் தண்டு
சூரணம் வராகனிடை - 1, கடுக்காய்ச்-
சூரணம் வராகனிடை - 1, தான்றிக்காய்ச்
சூரணம் வராகனிடை 1, நெல்லிப்பருப்புச்-
சூரணம் - வராகனிடை 1 யிவைகளெல்லாந்
கொண்டுவந்து இந்தக் கியாழத்தில்
போட்டுக் காய்ச்சிக் கிளறி களிபோலே
யிறக்கி வைத்துக் கொண்டு இரண்டு
வேளையும் இந்தக் குழம்பு [illegible]
வென்னீரோடு அக்கினி மாந்தமுள்ள
பேருக்கு இரண்டு வராகனிடை கொடுக்கவு
அக்கினியுள்ள பேருக்கு [illegible]
யிடை கொடுக்கவும். மலபந்தமுள்ள
பேருக்கு ஆமணக்கெண்ணெயை
கொடுக்கவும். இதுக்குப் பத்தியம் —
கடுகு, வெங்காயம்
புளிப்பு, புளித்ததயிர்,
யிவை தவிரவும். அரைக்கீரை, இளங்-
[illegible] மோர் யிவை உட்கொ-
ள்ளவும். இதுக்குத் தீரும் வியாதி —
திமிர் வாய்நோவு [illegible]
தீரும்.

மேகத்துக்கு நல்லெண்ணெய்க் குழம்பு

மஞ்சள், நல்லெப்பருப்பு; நிலாவாரைப்
பூ யிவைகளுடன் கூட்டி இடித்து சூரணம்
பண்ணி தினையின் முட்டை கட்டி ஒரு
மீவகாணியில் வைத்து யந்த முட்டை
முழுக நல்லெண்ணெய் வார்த்து உறவைத்-
தெடுத்து இரண்டு வேளையும் வேளைக்கு
115 நெல்லிக்காய் பிரமாணம் எடுத்து பசுவின்
மோரில் கரைத்துக் கொடுக்க நீர்க்கடுக்கு
யிவை தீரும் கையாட்சி.

நீர்க்கட்டுக்குக் குழம்பு.

காசுப்பு வளையல், கற்பூரசிலாசத்து, கல்நார்,
விடாரவண்ணம், எவாடசாரம், நவாச்சாரம்
வெண்காரம் யிவை சேணி கூட்டி கல்வத்தில்
போட்டு வெந்நீர் வார்த்தரைத்து வெண்ணெய்
போலே வழித்தெடுத்து யதில் வராகனிடை
மருந்தெடுத்து வெந்நீரில் கலந்து குடிக்க
அக்கணமே நீர் விடும். மேகத்தினாலே
கட்டினாலும் இந்திரியத்தாலே கட்டினாலும்
கல்லடைப்பு, இரத்தக்கட்டு யிவை கட்டு
கரைந்து நீர் முகத்திலே தள்ளும். நீர் மிகுதி-
யாய் விடும். யந்த நீர் மட்டு கட்ட-
வேணுமானால் யதுக்கு மாத்து மருந்து-
அமுக்கிரா கிழங்குச் சூரணம் — சீக்கரை,

நெய் வகைக்கு வராகனிடை - 1 யாம்
மூனு வகையுமாக இடித்துக் கொடுக்க நீர்
முன்னின் வரத்தில் விடும். இப்படி நீர்
கட்டின பேருக்கு மேகம் மிகுதியாய்க்
கண்டால் இந்த மருந்துக்கு - யவாச்சாரத்-
-தைத் தின்னப் போடவும் இதுக்கு பத்தியபாகம்-
பச்சைக் கற்பூரம் கூடப் போடவும் அனைத்தும்
கொடுக்க நீர்க்கடுப்பு, நீர்ச் சுருக்கு யிவை
நின்று நீர் இறங்கி விடும்.

விசைய இராமபாணக் குழம்பு

நேர்வாளம் - பலம் - 3½, இரசம், கெந்தகம்,
தாளகம், மனோசிலை, கெவுரி பாஷாணம்,
வெள்ளைப் பாஷாணம், வெண்காரம்,
இந்துப்பு, படிக்காரம், நாவி, நெர்விஷம்,
ஓமம், கருஞ்சீரகம், பெருங்காயம்,
துரிசி, நீரடிமுத்து, கடுகு, கடுக்காய்,
தான்றிக்காய் யிவைகள் வகைக்கு வராக-
னிடை - 1 கொட்டாங்கச்சிக்கரி - பலம் - 1
இவை யெல்லாம் கல்வத்திலிட்டு முழு
வெல்லச்சாறு வார்த்து ஒரு சாமமரைத்துத்
தெங்காய்ப் பால் விட்டு சாமமரைத்து
உத்தாமணிச் சாறு விட்டு சாமமரைத்து
யப்படி யிருபத்தொரு சாமமரைத்துப் பிறகு
பனிரெண்டு சாமம் விடாமல் அரைத்து
வழித்து மெனைப் பரணியிலடைத்து மூணு
மாதஞ் சென்ற பிறகு மிளகுப்பிரமாணங் கொடுக்கவும்.

ஆறாவ விரணங்களுஞ் சன்னிகளுங் கடி-விஷங்களும் எலிக்கடி விஷங்கள் இவையெல்லாந் தீரும். கையாட்சி.

விஷ மருந்துக் குழம்பு
கையாட்சி

இரசம், கெந்தகம், அரிதாரம், நெர்விஷம் அ~~இ~~ந்துப்பு, நவச்சாரம், வெண்காரம், மனோ-சிலை, நாபி, எவாச்சாரம் யிவைகள் வகைக்கு பலம்-1, வாளம்-பலம்-10 உத்தாமணிச் சாறு, தேங்காய்ப் பால் வார்த்-தரைத்துக் கொண்டு பரணியில் வைத்துக் கொடுத்து வர சகல விஷங்களும் தீரும். வாதம்-80, பித்தம்-40, சன்னி-13-ம் தீரும். சகல விஷமுந் தீரும். சிலேத்துமம்-20ம் கையாட்சி.

~~[illegible]~~

விஷ மருந்துக் குழம்பு.

கெவரிப் பாஷாணம், வெள்ளைப் ~~[illegible]~~ பாஷாணம், இரசம், துரிசி, துத்தம், கொட்-டாங்கச்சிக் கரி வகைக்கு பலம்-2, வாளம்-பலம்-3, தேங்காய் நெய் வார்த்தரைத்து குழியில் வைத்துக் கொண்டு பாரிதுள்ள பாம்பு விஷங்-களுக்கு பணவிடை மருந்தக் கொடுக்க விஷங்களெல்லாந் தீரும்.

கலியாண நாராயணக் குழம்பு

நெல்லிக்காய்ச் சாறு - நானாழி, நாட்டுச்-
சர்க்கரை - பலம் - 25 கரைத்து வடிகட்டி நல்-
லெண்ணெய் நாழி கூட வார்த்துக் காய்ச்சி
சட்டியின் பத்திரம் வெளிவிட்டு குழம்பாக
வரும்போது இதுக்கு கற்க மருந்து - சுக்கு,
திப்பிலி, மிளகு, திப்பிலி மூலம், பச்சைக்
கொடிவேலி வேர், கொத்தமல்லி, சீரகம், கொட்-
-பாளையரிசி, விழலரிசி, செவியம், மஞ்சிட்டி,
சீரகம் இவை வகைக்கு - பலம் - 1, கடுக்காய்,
தான்றிக்காய், நெல்லிப் பருப்பு இவை வகைக்கு
பலம் - 2 இவையெல்லாம் கொண்டுவந்து இடித்து
சூரணம் பண்ணிக் கொண்டு இந்தக் குழம்பிலே
கொட்டிக் கிளறி குழம்பு பக்குவத்தில் மறு
பாண்டத்தில் எடுத்து வைத்துக் கொண்டு
இரண்டு வேளையும் வேளைக்கு கழஞ்சு
பிரமாணம் கொடுத்து வரத் தீரும் வியாதி - மேகம்
இருபது வகையும், பாண்டுவும், காமாலை
மூலம், குஷ்டம், மூத்திரக்கிரிச்சரம், குன்மம்
கர்ப்ப தோஷங்கள் தீரும். கெர்ப்பமுண்டாம்
ஒடிந்த எலும்புக் கூடும். பெலமுண்டாம்
புத்தியுண்டாம். மிடறுதெளியும், நரைதிரை
மாறும். இப்படிப்பட்ட வியாதியெல்லாந்
தீரும். பத்தியம் - இச்சை, புளிப்புத் தவிரவும்.

கையாந்தகரைக் குழம்பு

116 கரிசலாங்கண்ணிச் சாறு படி - 1, மிளகு - சூரணம் - உழக்கு, கடுக்காய், திப்பலி, திருதேக்கு, இந்துப்பு, செங்கழுநீர்க் கோஷ்டம் இவை வகைக்கு பலம் - ௨ இவைகளையெல்லாம் கொண்டு வந்து இடித்துச் சூரணம் செய்து சாற்றில் கலந்து; காய்ச்சி மெழுகுபதத்தில் இறக்கி வைத்துக் கொண்டு இரண்டு வேளையும் வேளைக்கு கழஞ்சு பிரமாணம் எடுத்து தேன் விட்டு இழைத்துக் கொடுத்து வரத் தீரும் வியாதி - க்ஷயம், வாந்தி, சூலை வலி, நெஞ்சடைப்பு, வாய்ச்சுரம், பாண்டு, குன்மம், வாய்நீர் சுரக்கிறது, பித்த அதிசாரம் கிராணி, சுவாசகாசம் இவையெல்லாந் தீரும்.

மஞ்சளாதிக் குழம்பு

மருதம்பட்டை, மஞ்சள், தேவதாரிச் சக்கை, கடுக்காய், கடுகுரோகணி, அதிவிடையம், சுக்கு, செவியம், உத்தாமணி, முடக்கத்தான், இவை வகைக்கு பலம் - 10 கொண்டு வந்து நறுக்கித் தொழித்து பெரிய பானையில் போட்டு தாணிப்பதக்கு தண்ணீர் வார்த்து கியாழம் நாலொன்றாக இருக்கக் காய்ச்சி வடிகட்டிக் கொண்டு அதுக்குக் கற்கம் - சீரகம், திப்பலி, அதிவிடையம், கடுக்காய், காசுக்கட்டி

பாவை வகைக்கு பலம் -½ கொண்டுவந்-
திடித்து இரண்டும்பண்ணி யாந்தக் கியாழத்திலே
போட்டுக் காச்சி யாறுகின்ன பதத்தி-
யிறக்கி வைத்துக் கொண்டு இரண்டு வேளையும்
வேளைக்கு கழஞ்சு பிரமாணம் கொடுத்து தேன்-
றாட்டுனழத்துக் கொடுத்து வர தீரும் வியாதி-
இரத்தப் பாடியும் ~~அஞ்சு~~ அஞ்சு வகையும்
பெரும்பாடு அஞ்சு வகையும் கிராணிக்கழிச்சல்
அஞ்சு வகையும் வாக்கன் வாய் வெப்பாடு
உடிரைதெல்லாம் தீரும்.

தேன் குழம்பு

தேன்-நாழி பசுவின்நெய் - நாழி இவற்றை
கூட்டியவன் வார்த்து யாதுக்கி காந்கமருந்து -
திப்பிலி- கழஞ்சு, மிளகு - உழக்கு இந்த
இரண்டு வகையும் பொடி செய்து சீலையில்
கட்டி தேனில் போட்டு இடியபடத்திலே
இரண்டொரு இரவைத்தடுத்து மருந்தை
பிசைந்து சீலையை யெடுத்துப் போட்டு
யாந்தத் தேன் இரண்டு வேளையும் வேளைக்கு
உச்சிக்கரண்டி இடித்துவரத் தீரும் வியாதி-
சுவாசகாசம், இருமல், உட்புண், அடை
பாவையெல்லாந் தீரும்,

கோழை, மப்புருக்கி கோழிக்குழம்பு.

மூன்று வருடம் சென்ற முத்தின கோழி
கொண்டு வந்து மயிர், தோல், குடல் போக்கிப்

போட்டு கழுவி சட்டியில் வைத்து இரண்டு-
படி தண்ணீர் வார்த்து அடுப்பில் வைத்து
வேகவைத்து அரைப்படி தண்ணீர் இருக்க
வேகவைத்து வடித்துக் கொண்டு யிதுக்கு
பிரதிபாகம் தனைப்படிச் சாராயம், வெள்ளுள்ளித்-
௮. -தைலம், குப்பைமேனிச் சாறு யிவை
வகைக்கு காலாழாக்கு யிவைகளில்
கோழிச் சாறில் வார்த்து கலந்து கொண்டு
மூணாகப் பகிர்ந்து ... படிமாறு மூணு
பொழுது குடிக்கவும். யிதற்கு தீரும் ரோகம்
பத்தியம் - உழக்குப் பசுவின்பாலில்
பச்சை திண்ணமாவு உழக்குப் போட்டுக்
கிளறி வெந்து வரும்போது ஒரு கோழி
முட்டையை உடைத்து கூட சேர்த்து
ஒரு வாழைப்பழம் உரித்து கூடப் போட்டுக்
கிளறி யிறக்கி வைத்துக் கொண்டு
சாப்பிடவும்.

தாகத்துக்கு ஒரு புதுப்பானையில் நிரம்ப
தண்ணீர் வார்த்து அரைவீசை யிஞ்சியை
மேல்புறணி சீவி இலையில் போட்டுக்கட்டி
பானைத் தண்ணீரில் போட்டுக் காய்ச்சி
ஆறவைத்துக் குடித்துவரவும். காலை
அத்தி பண்ணை யாதுவை தண்ணியாகக் குடிக்க
கொள்ளவும். இந்தப்படி மருந்து மூணு நாளும்
மறுபத்தியம் மூணு நாளு முடிந்த பிறகு தலை
முழுகவும். யிந்த எண்ணெய் முறை புத்தகத்தில்
எழுதியிருக்கிறது.

வெட்டை மருந்துக் குழம்பு.

பொன்னரிதாரம், நாபி, நெறிவிதைம்,
மனோசிலை, ~~இ~~இந்துப்பு, நவச்சாரம்,
கருஞ்சீரகம், பெருங்காயம், ரசம்,
நெல்லிக்காய், கெந்தகம் யிவை வகைக்கு
பலம்-1 கெந்தகமும் ரசமும் கல்வத்திலிட்டு
ஒருமண் நேரமரைத்து இறவு செய்த பிறகு
மற்ற சரக்குகளை யிதில் கூட்டிப் போட்டு
நேர்வாளம் - பலம் - 24, கொட்டாங்கச்சிக்
கரி - பலம் - 4, நல்வெல்லம் - பலம் - 10
யிவை யெல்லாம் கூடப் போட்டு உத்தா-
மணிச்சாறு விட்டு ஒருசாமம் ஜாமம்-
அரைத்து பிறகு இங்காயப் பால் விட்டுக்
கலக்கி ஒருசாமமரைத்து வழித்து சீனாப்-
பாத்திரத்தில் வைத்துக் கொள்ளவும்.
சாறுவ விதைகளுக்கும் அளவு 3 குன்றி-
கணக்கு மிடவும். மிளகு பிரமாணம்.

ஆற்றுத்தும்மட்டிக்காய்க் குழம்பு.

வெள்ளை உப்பு - பலம் - 10, ஆற்றுத்தும்மட்-
டிக்காய்ச் சாறு - படி - 1, வெள்ளாட்டுக்
கோமியம் - படி - 10 யிவைகளைக் கரைத்துக்
காய்ச்சி பாகு போலே ஒருபடி யிருக்கிற போது
~~சா~~த்துக்கு கற்கமருந்து - மாங்கிஷபேதி - பலம் - 3
~~யி~~வைகளைப் பொடி செய்து கூடப் போட்டுக்
காய்ச்சி கனி பாகத்தில் யிறக்கி வைத்துக் கொண்டு

வெடி மாறு வதாகணிடைக் குழம்பு கொடுத்து
வரத் தீரும் வியாதி - பெருவயிறு, மகோதரம்,
கவிசை, பக்கக்கவிசை, கீழ்க்கவிசை, நீராணம்
சீராணம் யிவையெல்லாந் தீரும். இதுக்கு
மாத்து மருந்து - ஏலம், லவங்கப்பட்டை
117. பொடிசெய்து ...... கொடுத்து வரவும்.

கடுக்காய்க் குழம்பு.

கடுக்காய் 100 நறுக்கி கொட்டையை
எடுத்துப் போட்டு இடித்து பொடி பண்ணி ஒரு
குடத்திலே போட்டு நாலுபடி கோமியம்
வார்த்துக் காச்சி ஒருபடியாருக்க வடி-
கட்டிக் கொண்டு இதுக்கு கற்கமருந்து -
சுக்கு - பலம் - 3, திப்பலி - பலம் - 12, பனங்-
கருப்பட்டி - பலம் - 2 யிவைகளைப் பொடி
செய்து கூடப் போட்டு கரைத்துக் காச்சி
குழம்பாக யிறக்கி ஆறவிட்டு மறுகலசத்தி-
லெடுத்து நெல்லுக்குள்ளே புதைத்து வைத்துக்
கொண்டு வெடி மாறு கால்பலம் விழுக்காடு
கொடுத்து வரவும். யிப்படி யெழுநாள்
கொடுக்கவும். வியாதி கடின மானால்
பதினொரு நாட்கள் கொடுக்கவும்.
யிதுக்கு நித்தம் நாலு முறை பேதியாகும்.
யிதுக்குத் தீரும் வியாதி - பித்தபாண்டுவம்
வயித்துவலி, கவிசை, நீராணம், சீராணம்
பெருவயிறு, மகோதரம், காமாலை, பாண்டு-
துடி, வீக்கம், வாய்வு யிவையெல்லாந் தீரும்.

பத்தியம் - துவரம் பருப்பு, முருங்கைப்பிஞ்சு, அரைக்கீரை, பொன்னாங்கீரை, கத்திரிப்பிஞ்சு, மிளகு, சீரகம், கருவேப்பிலை, இஞ்சி இவைகளை கூட்டிக் கொள்ளவும். மத்தது-களைத் தள்ளவும்.

திருக்கோவிலூர் பரணிக்குழம்பு கையாட்சி.

நாபி, இருவி, இரதம், கெந்தகம், நேர்-வாளம், நீலகண்ட நேர்வாளம், சீக்கிரநாபி, கருநாபி, செந்நாவி, மனோசிலை, தாளகம், வெள்ளைப்பாஷாணம், கௌரிபாஷாணம், தொட்டிப்பாஷாணம், செப்புத்தொட்டிப் பாஷாணம், கோழித்தலை பாஷாணம், சவ்வீரம், ரசகற்பூரம், ரசசெந்தூரம், சாதிலிங்கம், மயில்துத்தம், பால்துத்தம், வெண்காரம், ஊசிக்காந்தம், படிக்காரம், சவுக்காரம், வெடிகாரம், நவாச்சாரம், சத்தியவச்சாரம், இந்துப்பு, வெடியுப்பு, கார்த்திகைக் கிழங்கு, திமுறுக்கன், கபாலநுரை, சுக்கு, திப்பிலி, மிளகு, ஓமம், கருஞ்சீரகம், கோரோசனை, நீர்முத்து, பெருங்காயம், மூங்கிலுப்பு, கஞ்சவிதை, முருங்கைவிதை, மகிழம்விதை, எட்டிவிதை, ஊமத்தம் விதை, தில்லம் விதை, வேப்பமுத்து, நெல்லிப் பருப்பு, தேத்தான் விதை, அழிஞ்சில்விதை,

தட்டபுங்கம்விதை, முட்டை மஞ்சள்கரு,
கோழிப்பிச்சு, வெள்ளாட்டுப் பிச்சு, முயல்-
பிச்சு, ... புலிச்சு, ... னிப் பிச்சு, மூன்றாம்-
அ பன்னீர் யிவை இவை வகை ஒன்றுக்குக்
கழஞ்சு - 1 யிவற்றிற்கு நேர் சரியிடை அரிசி
செய்த நேர்வாளப் பருப்பு, யிவையெல்லா-
மொன்றாய்ச் சேர்த்து நானாகப் பகுந்து
ஒரு பங்கு கல்வத்திலிட்டு நெக அரைத்து
யிப்படி நாலுபங்கையும் நெக அரைத்த பிறகு
அவ்வா மொன்றாய்ச் சேர்த்து மறுபடி கல்வத்தி-
-லிட்டு சாறு வகையி லரைக்கும் விபரம்-
உத்தாமணிச்சாறு, தெங்காய்ப்பால், எலு-
மிச்சம் பழச்சாறு, உப்பில்லாத பச்சரிசிக்-
கஞ்சி, முலைப்பால், குப்பைமேனிச்சாறு,
கரிசாலாங்கண்ணிச் சாறு, வல்லாரை-
யிலைச்சாறு, அமுரி யிவற்றை வார்த்து
வகை ஒன்றுக்கு நவ்வாறு சாமமரைத்த
பிறகு பச்சரிசி - பலம்-4 கருகாமலும்
தீந்து போகாமலும் தயிலபதமாக வறுத்துக்
கொண்டு காந்த சலம்- பலம் -4
பச்சரிசியைப் போலவே யாதுவுந் தயிலப்-
பதமாக வறுத்துக் கொண்டு ஆகாசத்தாள்-
-பலம்-3 இவைகளையு மரைத்த மருந்தில்
போட்டு அருகம் வேரில் மாரிவிட்டுக்
காய்ச்சி கஷாய மிறக்கி வார்த்து ஒரு)

நெட்டாகப் பனிரெண்டு சாம மறைத்த பிறகு
வழித்து சீனாப் பாத்திரத்தில் வைத்து மேல்
மூடி சீலைமண் செய்து தானியப்புடத்தில்
ஒரு மண்டலம் அல்லது இரண்டு மண்டலம்
அல்லது மூன்று மண்டலம் வைத்த பின்
எடுத்து தேவையானது மேற்பரணியில்
வைத்துக் கொண்டு விஷந்தீண்டின பேர்-
-களுக்கு விஷத்தினுடைய பலனறிந்து
மிளகு பிரமாணம் கொடுக்கவும். விஷம்
மீறியிருந்தால் மூன்று பொழுது கொடுக்கவும்
முருங்கையீர்க்கும் பச்சரிசியும் போட்டு
அடுப்பில் கஞ்சி வார்க்கவும். 5 நாட்கள்
7 நாட்கள் கடந்த பிறகு உப்பில்லாத
கஞ்சி வார்த்து தலை முழுக்காட்டவும்.
விஷங்கடித்தவுடனே அருகம் வேரின்
மரிவிட்டதைத்து வழித்து தேகத்தில்
துவாரணையிட்டு அவிழ்தம் கொடுக்கவும்
சின்னிகள், தோஷங்களுக்கு உருந்து
பிரமாணம் கொடுக்கவும். இந்த அவிழ்தம்
சகல ஜீவாத்துமாக்களுடைய விஷங்க-
-ளுக் கெல்லாம் கொடுக்கவும். ஆனால்
இந்த அவிழ்தம் கண்ணுக்குக் கலிக்கம்
போடப் போகாது.

வைத பூபதிக் குழம்பு.

இரசம் - வராகனிடை - 3, கெந்தகம் - வராக-
-னிடை - 3, நேர்வாளம் - வராகனிடை - 4,
புங்கந் தோல் - வராகனிடை - 6, கெச்சக்-
-காய்ப்பருப்பு - வராகனிடை - 7, நாபி - வராக-
118 னிடை - 4 யிவையெல்லாம் கல்வத்திலிட்டு
வெப்பெண்ணெய் ~~விட்டு~~ நாளொன்றுக்கு
ஒரு சாமம் அரைத்து ஏழு நாட்களுக்கு
வெப்பெண்ணெய் ~~வி~~ர்த்தரைத்து கொம்புச்-
சிமிழில் வைத்துக் கொண்டு நாக்கிலொரு
பணவிடை தேய்க்க வாத நோக்காடு,
பயித்திய வாய்வு கிரந்தி தோஷம்,
தோஷத்தின் உஷ்ண வியாதி, விஷத் தோஷம்
தோஷித்தவர்களுக்கு பணவிடை தேய்க்க
தோஷம் திரும்பப் போம். மைத்ரச் சுனா-
-காது. கையாட்சி.

வியாதிகளுக்குக் கிருத வகை,

மேகத்துக்கு நீர்ப்பூசணிக்காய்க் கிருதம்.

வெள்ளரிக்-
நீர்ப்பூசணிக்காய்ச் சாறு, பசலைக்-
காய்ச்சாறு, இளநீர், முலைப்பால், கருவாழைக்கிழங்குச்
-சாறு, இருப்பைச் சாறு, வகைக்குச்
-சாறு, சீந்திக்கொடிச் சாறு சட்டியிலிட்டு
சாறு - 2 — நறுநெய் - வெட்டிவேர், குருவேர்
கற்கம், சந்தனம், நன்னாரிவேர்,
பொன்னாங்கண்ணி ~~கீ~~ திருநீற்றுப் பச்சை,

திராட்சைப் பழம், பேரிச்சம்பழம், சாத்தி-
பேதி, அதிமதுரம், கற்பூரம் வகைக்கு கழஞ்சு,
வெண்மருந்து - இரண்டு கழஞ்சு கூட்டி-
யரைத்துக் கரைத்துக் காய்ச்சி வடித்துச் சர்க்கரை
இரண்டு கழஞ்சு கூட்டி இரண்டு நேரமும்
இருபது நாட்கள் கொள்ள மேகம், மே-
மாணம், துர்மாங்கிஷம், வயத்துப்புண்,
ஆண் தண்டுப் பிளவையுந் தீரும்.

பூசணிக் கிருதம்

நீறுபூசணிக்காய்ச் சாறு - வது நாழையான்-
-நாயக் காய்ச்சி நறுநெய், கருப்பஞ்சாறு
கலந்து பண்ணைவேர், முத்தம், பற்பாடகம்
சித்தரத்தை, சிறுதேக்கு, புல்லரசி, யந்திப்பு
திப்பலி மூலம், கொடிவேலி வேர்ப்பட்டை,
யனுப் பைப்பு, ஆனைத் திப்பலி வகைக்கு
பலம் - உ சேர்த்து வெண்ணீர் விட்டரைத்து
நறுநெய்யின் கூட்டி பதத்தின் காய்ச்சிக்
கொள்ளவும். உள்காய்ச்சல், அக்கினிமாந்தம்
அஸ்தி மெலிவு, அஸ்தி வெட்டை, மேகம்,
எலும்புருக்கி, மேகத்தை அடுத்த வியாதி-
யெல்லாந் தீரும். இரண்டு வேளையா
வொருவேளை நெய் கொள்ளவும்.

540

மூலக்கிராணிக்கு வச்சிரவல்லிக் கருக்கு.

தீராணி நெல்லிடை இரண்டை கொண்டு வந்து அவைத்து பாணையிலடைத்து ஆணித் தண்ணீர் விட்டு ஸ்ரீயபுடமாக ஒருநாள் வைத்து மறுநாளதுப்பினை வைத்து எடுத்து ஆணியுங் காஞ்சி யாறக்கிப் பிசைந்து எடுத்துக் கொண்டு ஒரு சட்டியில் வார்த்து காஞ்சி வெள்ளம் - பலம் - 5 கூட்டிக் கரைத்து நாலொன்றாகத் திரும்பக் காச்சி யாறக்கிற

அ. பக்குவத்தில் திரிகடுகு, கொடிவேலி, வட்டத்திருப்பி, சிறுதேக்கு, திப்பிலிமூலம், விழாலரிசி, பெருங்காயம், அதிவிடையம், பெருங்-திரும்பை, முத்தக்காசு, யிந்துப்பு, ஓமம், செவ்வியம், காட்டத்திப்பூ, நாகப்பூ, சீரகம், அதிமதுரம், கிராம்பு, காசுக்கட்டி, ஏலம், கற்கடகசிங்கி, கருஞ்சீரகம், கொஞ்பம், சடாமாஞ்சி, கருக்கு வகைக்கு பலம் - வ் விழுக்காடு சேர்த்து இடித்து வஸ்திரகாயம் பண்ணி முன் பண்ணின குழம்பில் தூவிக் கிளறி யாறக்கிற பக்குவத்தில் மாங்கிஷந் தின்கிற பேர்களுக்கு பன்றிநெய் நாழி விட்டுக் கிளறி யாறக்கி அந்திக்கு ஒரு பாக்களவு சந்திக்கு ஒரு பாக்களவு கொண்டு நெய்மிங் கொள்ளவும். மூலக்கிராணியுந் தீரும்.

மாங்கிஷந் தின்னாத பேருக்கு தேன் விட்டுக் கிளறி கொடுக்கவும். இதுக்கிப் பத்தியம்

வாழைப்பூ, வாழைக்காய், வாழைக்காய்ச்சல், அகத்திக்காய், வெள்ளாட்டு உப்புக்கண்டம், விரால் கருவாடு, காரைப்பிஞ்சைக்காய் முதலிய பத்து நாட்கள் கொள்ளவும். மூலக்கிராணி தீரும். கிராணியெனப்பட்டதுக்கெல்லாமாகும்.

இமோதக்கிருதம்

சிரணை வேர் - பலம் - 7, சித்ரா மூட்டி - வேர் - பலம் - 3, தண்ணீர்விட்டான் கிழங்கு - பலம் - 3, குறிஞ்சம் வேர், முன்னை வேர், பாதிரி வேர், பெரும்பாகை வேர், ~~தின்னாம்~~ பேய்ப்புடல், இலையாதண்டை வேர், ~~[illegible]~~ ~~[illegible]~~, கொத்தான் கொடி, ஆவா-ரையாணை, நிலப்பனைக் கிழங்கு, தாமரைக்-அருகு, சிறுபுள்ளடி, பொன்னாங்கண்ணி, கீழாநெல்லி, சிறுகீரை, நெருஞ்சிட்டி சமூலம், அமுக்கிரா வேர், முசுமுசுக்கை வேர் - பலம் - 5 கொட்டைக் கோரைக் கிழங்கு யிவையெல்லாம் வகைக்கு பலம் - 3 வ யவையெல்லாம் சேர்த்து நறுக்கி யிடித்து தண்ணீர் ஈக விட்டுக் குறுணியாகக் காய்ச்சி யாறுத்துக் கொண்டு பசுவின் நெய் - நானாழி, ஆமணக்கெண்ணெய் - யறுநாழி பசுவின் பால் - அறுநாழி கூட விட்டு யதுக்கு கற்கம் - ஏலம், லவங்கம், பச்சிலை காச்சோலம், அதிமதுரம், விலாமிச்சம் வேர்,

முந்திரிகைப்பழம், (இ)ருசீரகம், சிறுதேக்கு
சுக்கு, கடுக்காய், சண்பகமுகிள் யிவை
வகைக்கு பலம்-¼ யிவைகளை யெல்லாம் முந்திரி
கியாழமிட்டதைத் தட்டிக் காய்ச்சி வடித்து
தினம் அரைப்பலம் உள்ளுக்குக் கொள்ளவும்
மேலும் பூசவும். நசியம் பண்ணவும் தீரும்—
வியாதி - பித்தம் நாற்பது, சிரோபிரமாணம்
? உமாதமபரந்திரு காசந்திமிர், தடிப்பு
அந்தரதாகம், சிரோதாகம், பக்கசூலம்,
பஞ்சகூனை, அந்தர விடப்புள் வின்னை
அருவை வைப்பு பவை-4, கவிகை யிவை—
யெல்லாந் தீரும்.

---

119. அஸ்த்தி அரத்துக்கும் இருமலுக்கும்
முடக்கொத்தான் கிருதம்

முடக்கொத்தான், நருந்தாளி, தூது-
நரிபயத்தன்னை
வேளை, முசுமுசுக்கை, நாரத்தங்கா-
யிவை யெல்லாம் வகைக்கு பசுவின்
யளவு அரைத்து சட்டியிலிட்டு யிவை சிவந்த
நெய் நாழிவிட்டுத் துழாவி விட்டுத் துழாவி
வாநெறு சீக்கை சேர்-1
சிவந்த வாநெறை யெடுத்து பல்லாகையில் வைத்து
கொண்டு நாளொன்றுக்கு கொட்டைப்பாக்கு
பிரமாணம் கொள்ளவும். யிதுக்குத் தீரும்—

வியாதி - அக்கினி மாந்தம், கிராணி, பெரிய
முன் சொன்ன வியாதி முதலானதுந் தீரும்.

கலியாணப் பூசணிக் கிருதம்

கலியாணப்பூசணிப் பழம் மேல்தோலுங் குடலும் நீக்கிப் போட்டு சிறுகச் சீவிக் கொண்டு சட்டியை அடுப்பில் வைத்து அதில் கொட்டி தண்ணீர் அண்ட வறுத்து பிற்பாடு பசுவின் நெய் விட்டு சிறுக வறுத்து அதில் போடும் மருந்து - சுக்கு, திப்பிலி, சீரகம், மிளகு, லவங்கம், லவங்கப்பத்திரி, காட்டுப்பெருமைப்பான், பத்திரி வகைக்கு பலம் - 1 இடித்து பொடித்து சூரணம் பண்ணி நெய்யிற் தூவி கிண்டியால் துழாவி பாக்கி பாதில் ~~இ~~ரண்டு சேர் சர்க்கரை போட்டுக் கிண்டி மொத்தை பாக்கி உரலில் போட்டு நுப்ப (இடித்து) வாங்கிக் கொண்டு ஒரு களசத்தி விட்டு இரண்டு நேரமும். ஒரு எலுமிச்சங் காயளவு சாப்பிடவும். தீரும் வியாதி - பிள்ளை நில்லாமல் போறதுக்கும் இரத்தபித்தம், அஸ்தி பூரண சுரம், ஸ்திரீ ருதுவாகாமலிருக்கிறதும் பிறந்து போறதும் சரியமில்லாமல் நஷ்டமாய்ப் போறதும் உப்புசம் வாந்தி யனைவயெல்லாந் தீரும்.

இரத்தகாசிக் குமரிக் கிருதம்.

கற்றாழை மடலின் சோறெடுத்து தண்ணீரில் போட்டு கழுவியெடுத்துப் பிழிந்தசாறு - படி-16, பசுவின் நெய் இருநாழி கூட சேர்த்துப் பிசைந்து அடுப்பின் வைத்து மெதுவாய்க் காய்ச்சி பொங்கியடங்கி வரும் போது ஏலம்-படி-1, சீரகம்-படி-1 சூரணம் பண்ணிக் கூடப் போட்டுக் காய்ச்சி பதத்தில் வரும்போது சர்க்கரை படி-2 கூடப் போட்டு கலக்கி வடித்து வைத்துக் கொண்டு இரண்டு வேளையும் வேளைக் கொரு கரண்டி குடிக்கவும். இப்படி பருகுவது இருபது நாட்கள் குடிக்க ~~இரத்தகாசி~~, இரத்தகாசம், க்ஷயம், இருமல், இரத்தபித்தம், சுரம், கபம், புளிப்பு தவிரவும். இவை தீரும்.

இருமலுக்கு வாசாதிக் கிருதம்.

அ. ஆடாதோடைச் சாறு, கரிசலாங்கண்ணிச் சாறு, தூதுவேளைச் சாறு, சங்கிலைச் சாறு, வகைக்கு சாறு - நாழி, பசுவின் நெய் - நாழி கூட விட்டு இதுக்கு கற்க மருந்து - திப்பலி, பூசணிப்பூ, கருஞ்சீரகம், மிளகு, வசம்பு இவை வகைக்கு - படி-1, இத்தனையும் திண்ணி வவ்வால் - 1 இவற்றை அரைத்துக் கூடக் கரைத்து சட்டியின் வார்த்துக் காய்ச்சி

பதத்தில் வடித்துக் கொண்டு இரண்டு வேளையும் வேளைக்கொரு கரண்டி குடிக்கவும். இப்படி இருபது நாட்கள் குடித்து வந் தீரும் வியாதி - க்ஷயம், இருமல், சுரம், இரத்த க்ஷயம், இரத்த பித்தம் இவை-யெல்லாந் தீரும்.

இரத்த பயித்திய உன்மாந்தத்துக்கு சாம்பிராணிக் கிருதம்.

எலுமிச்சம்பழச் சாறு, பசுவின் நெய், பசுவின் பால் வகைக்கு - 3, விளாம்பழச் -சாறு, மாதளம்பழச் சாறு, இக்கிரைச் சாறு, தண்ணீர்விட்டான் கிழங்குச் சாறு, மணத்தக்-காளிச் சாறு, வெள்ளரி யிலைச் சாறு, நன்னாரி வேர்ச் சாறு, கற்றாழைச் சாறு, பேராமுட்டிச் சாறு, பருத்திக் கொட்டைச் சாறு, துளசியிலைச் சாறு, சீந்திற்கொடிச் சாறு, பெரும் பூசணிக்காய்ச் சாறு, அருகம்வேர்ச் சாறு, இலந்தைப் பழச் சாறு, இவை வகைக்குச் சாறு - ஒரு நாழி, இலவங்கப்பட்டை கற்க மருந்து - ஏலம், இலவங்கப் பத்திரி, சிறு நாகப்பூ, இலாமிச்-சம் வேர், இலவங்கம், திப்பிலி மூலம், அதி-விடயம், திரிபலை, திரிகடுகு, கொத்தமல்லி, சோம்பு விதை, சீரத்துவயம், அதிமதுரம்,

கோஷ்டம், கச்சோலம், அகில்கட்டை சந்தனம், ரத்தசந்தனம், ரேணுகம் வெட்டிவேர், மஞ்சள், சாதிக்காய், சாதிபத்திரி, தக்கோலம், ஏலம், சித்தா-முட்டிவேர் வகைக்கு பலம்-2 யாந்த கற்கத்திரவியமு நெய்க்கு யெட்டி-லொன்று கூட்டி கற்பாகத்தில் காய்ச்சிக் கொண்டு புது வஸ்திரத்தில் வடிகட்டிக் கொண்டு உள்ளுக்கு நசியத்துக்கும் லேபனத்துக்கும் மர்த்தனத்துக்குமாம். சகல உன்மாதமும் போம்.

இரத்த மேகத்துக்கு தேங்காய்க் கருக்கு.

கண்டாங்கத்திரி வேர்-பலம்-10, கடுகு-பலம்-8, கருங்குங்கிலியம்-பலம்-16, கல்லுப்பு-பலம்-12, முத்தின தேங்காய்-1 யிவையெல்லாம் யேகமாய்ப் பொடி செய்து ஒருபானையில் வைத்து மேல்சட்டி கொண்டு மூடி சீலைமண் செய்து கஜ-புடத்தில் வைத்து புடம் போட்டு சாங்க சீதளமாக ஆறவிட்டெடுத்து யாதுக்குப் பாதி பாகம்-6 பெருங்காயம் வராகனிடை-4
20. கூட்டப் போட்டு பொடிசெய்து வைத்துக் கொண்டு

இரண்டு வேளையும் வேளைக்கு மாடை
யிடை யெடுத்து நல்லெண்ணெய் விட்டு
யிழைத்து . . . . இத்தமேகம்
நீர்ச்சுருக்கு யிவை யென்னாந் தீரும்

சொருக்கிடு காமாலைக்குக் குடுக்க.

கீழா நெல்லிவேர், கொடிவேலிவேர், ஆறு- வேளைவேர், ஆவிரம்வேர் யிவை வகைக்கு எலுமிச்சங்காயளவு அரைத்த விழுது யெடுத்து சட்டியில் போட்டு யிதுவும் சுக்கு - பலம் - 2, மிளகு - அழாக்கு, வசம்பு- பலம் -1, கடுகு - அழாக்கு, திப்பிலி - நால்- கழஞ்சு, சீரகம் - அழாக்கு, வெந்தயம் - அழாக்கு இவற்றைக் கொண்டு வந்து பொன்னிறமாக வறுத்துக் கொண்டு யிதுவும் பெருங்காயம் - கழஞ்சு - 1, வெள்ளுள்ளி - கழஞ்சு - 1 மாகக் கூட்டி கடுக்காய்க் கியாழம் வார்த்தரைத்து வழித்தெடுத்து முந்தின மருந்துடனே போட்டு யிதுவும் கடுக்காய் - 50 பொடி- போட்டு யிதுவும் கடுக்காய் - 50 பொடி- செய்து கூடப் போட்டு நல்லெண்ணெய் படி - 2 கூட வார்த்துப் பிசைந்து வெய்ய- லிலே வைத்து நீர் வண்டவிட்டெடுத்து வைத்துக் கொண்டு இரண்டு வேளையும் வேளைக்கொரு கொட்டைப்பாக்களவு எடுத்துக் கொடுத்து வரவும். யிப்படி 15

நாட்கள் கொடுக்கத் தீரும். தொணாங்கள்-
சொருகிடும் ஆமாணையின் இணங்கள் —
ஒருகால் விளங்கும், ஒருகால் மாறும்.
ஒருக்காலுண்டாய் முக்காலுண்டாய்ப் போ-
யிருக்கும். முகமும் மூக்கும் கண்ணும்
வெளுத்திருக்கும். தினை நெரந்து தின்னின்
தாகமும் காலுமுடம்புந் தலையும் நெரந்து
தாகமுண்டாயிருக்கும். காலுமுடம்பும்
நெச்சளாயிருக்கும். இந்த இணங்களெல்லாந்
தீரும்.

உள்மாந்தைக்கு நாரத்தங்காய்க் கருக்கு.

எருக்கங் கொழுந்து - 2 பலம், மிளகு - 2 பலம்,
கடுகு - 2 பலம், திப்பலி - 2 ழக்கு, கடுக்காய்-
-30, நாரத்தங்காய் - 14 பழைவெள்ளை
கொண்டுவந்து நாரத்தங்காயை அரிந்து
உப்புப் போடாமல் வேகவைத்து இறக்கி
வைத்துக் கொண்டு மற்ற மருந்தையெல்லா
மிடித்துச் சூரணம் பண்ணிக் கூடப் போட்டு
பிசறி உழக்கு நல்லெண்ணெயை வார்த்து
தாளித்து பிறக்கி வைத்துக் கொண்டு
இரண்டு வேளையும் வேளைக் கொரு
எலுமிச்சங்காயளவு எடுத்துத் தின்னவும்.
முன்னமே கருப்பட்டியைத் தின்னவும்
மேலிந்த மருந்தைத் தின்னவும். இதற்குப்
பத்தியம் - உப்பு, புளிப்பு தவிரவும் இதுக்கு
உள்மாந்தை தீரும்.

இலங்கண புஞ்சட்டிக் குடுகு.

உரித்த வெள்ளுள்ளி - பலம் - 100, எள்ளு -
பலம் - 50 யிந்த இரண்டு வகையுங் கல்வத்தில்
போட்டுத் தொழித்து வாரியெடுத்து ஒரு)
பானையில் போட்டு பசுவின் மோர் - பலம் 40
கூட வார்த்துக் கரைத்து வைத்துக் கொண்டு
சுக்கு பாதிபாகம் - அக்கு, கொத்தமல்லி,
செவியம், சித்திரமூலம், ஆனைத்திப்பலி,
ஓமம், லவங்கப் பட்டை, ஏலம், திப்பலி -
மூலம் யிவை வகைக்கு பலம் - 1 கொண்டு -
வந்திடித்து சூரணம் பண்ணி கூடப் போட்டு
கரைத்து திரவம் சர்க்கரை பலம் - 8
மிளகுதூள் - பலம் - 1, திப்பலித்தூள் -
பலம் - 4 யிவைகள் கூடப் போட்டுக்
கரைத்து விடவும்.

திரவம் - நல்லெண்ணெய் - பலம் - 8
அதிமதுரம் - பலம் - 4, இஞ்சி - பலம் - 4
இவற்றை அரைத்து வழித்து கூடப் போட்டு
நெய் - பலம் - 8, நல்லவெல்லம் - பலம் - 4,
வெள்ளைக் கடுகு - பலம் - 4, கடுகு -
பலம் - 4, பெருங்காயம் - பலம் - 4 பஞ்ச -
லவணம் - பலம் - 20 இவற்றையுங் கூடக்
கலந்து யிவையெல்லாம் பிசைந்து
ஒருநாள் வெய்யலிலே வைத்தெடுத்து
வழித்து எண்ணெய்க் குடத்தில் போட்டு
மூடித் தானியப் புடத்தில் பன்னிரண்டு நாட்கள்

வைத்தருத்திக் கொண்டு வியாதிக்காரனீ
பலன் அறிந்து ஒருவேளைக்கு கரண்டி
பிரமாணம் கொடுத்து அது மேலே தேங்காய்
போதுஞ் சர்க்கரை கொடுக்கவும் மருந்து
செரித்த பிறகு தயிருங் கச்சாய வகையுந்
தள்ளிப் போட்டு மத்தித் பத்தியக் கிரமத
தோடே சாப்பிட்டு வரவும். இந்த மருந்து
ஒரு மாதம் சாப்பிட்டு வர. இந்த ரோகமுந்
தீரும். அஷ்டி வாய்வுகள் தீரும். கம்முன்
பயித்தியம், அத்துவாரிபயித்தியம், சிலேஷ்ட்-
-டுமம் யாருவது வகையும் மேகம் இருபது-
வகையும் மகோதரம் எட்டு வகையும்
குன்மம் சிலேட்டுமம் இருபது வகையும்
திஷ்ட ரோகம் பதினெட்டு வகையும்
யோனி ஊளைகள், சர்வ-
சய ரோகங்கள், ரோகங்களுந் தீரும்.
ஊணைகள், அந்த ரோகங்கள்

எரிவுக்கு கலியாண பூசனிக்காய் கிருதம்

வெள்ளைப்-
கலியாணப் பூசணிக்காய்ச் சாறு, தண்ணீர்விட்டான்-
-பழச்சாறு கருப்பஞ்சாறு, நாழி-
கிழங்குச் சாறு யிவை வகைக்கு-நாழி-
யுழக்கு, பசுவின் நெய்- நாழி யுழக்கு
பசுவின் நெய் - நாழியுழக்கு, பசுவின்-
பால் - யொருநாழி யிவை யெல்லாங் கூட்டி
பெரிய சட்டியன் வார்த்து யிதுக்கு கற்க
மருந்து — அந்தணம், சுக்கு, திப்பலி, மிளகு
கடுக்காய், தான்றிக்காய், நெல்லிப்பருப்பு,

வாழ்னரிசி, சாதிக்காய், முத்தக்காசு
இலவங்கம், சீரகம், விலாமிச்சம்வேர், பாரு-
வெட்டிவேர், செண்பகப்பூ, கருஞ்சீரகம்,
நாவல்பூ, செங்கழுநீர்க் கிழங்கு, கோஷ்டம்,
அதிமதுரம், திராட்சிப்பழம், பேரிச்சம்-
பழம், கடுகுரோகணி, தாமரைவளையம்
இந்துப்பு, பச்சிலை, தக்கோலப் பொடரு
உகைகீறு, மஞ்சிட்டி, ஏலம், கண்டங்-
கத்திரி, அமுக்கிராக்கிழங்கு யிவை வகைக்கு
பலம்-1 கொண்டு வந்து பால் வார்த்தரைத்து
கரைத்துக் கூட வார்த்துக் காய்ச்சி பதத்தில்
வடித்து வைத்துக் கொண்டு இரண்டு
வேளையும் வேளைக்கொரு சின்னக்
கரண்டி இறைத்துவர தீரும் வியாதி—
12) காலெரிவு, கையெரிவு, உடம்பெரிவு,
வறட்சி, மருந்தீடு, பிள்ளை, யாருமல்,
இரத்தகாசம், பித்தத்தினாலெழுந்த வியாதிகள்
இரத்தபித்தம், மூலரோகம், வாந்தி, விக்கல்
அக்கினி பிரமேகம், இன்னம் யிவையெல்லாந்
தீரும். சிரபுஷ்டி யுண்டாம். அக்கினியுண்டாம்.

இரத்த காசத்துக்கு மாக்கிருதம்

அத்தாரையுடன் சோறு கழுவினையடுத்து
சோறு நாழியும் பசுவின் நெய் நாழியும் கூட்டி
சட்டியல் வார்த்துப் பிசைந்து அடுப்பில் வைத்து

காய்ச்சி பொங்கி யடங்கி வரும்போது யிதிற்
கூட்ட மருந்து - ஏலரிசிச் சூரணம் - பலம் - 2
சீரகச் சூரணம் - பலம் - 2 கூடப் போட்டுக்
காய்ச்சி பதத்தில் வரும்போது சர்க்கரை பலம் - 1
கூடப் போட்டு யிறக்கி வடித்து வைத்துக்
கொண்டு இரண்டு வேளையும் வேளைக்-
கொரு கரண்டி நெய் கொடுக்கவும். யிப்படி
இருபது நாட்கள் கொடுக்கத் தீரும் வியாதி -
இரத்த காசம், இரத்த பித்தம், சுரம், க்ஷயம்,
இருமல் யிவை தீரும். பத்தியம் - கவிச்சு,
புளிப்பு தள்ளவும். கையாட்சி.

இரத்த காசத்துக்கு அசுவாதிக் கிருதம்.

தண்ணீர்விட்டான் கிழங்குச் சாறு - நாழி
நெல்லிக்காய்ச் சாறு - நாழி, கருப்பஞ் சாறு - நாழி
பசுவின் நெய் - படி - 2 யிவையெல்லாஞ்
கூட்டி சட்டியில் வார்த்து காய்ச்சி கருகு
திரண்டு வரும்போது யிறக்கி வைத்துக்
கொண்டு இரண்டு வேளையும் வேளைக்கு
ஒரு கரண்டி கொடுத்து வரவும். யிப்படி 20
நாட்கள் கொடுக்கத் தீரும் வியாதி - இரத்தகாசம்,
இரத்த பித்தம், சுரம், க்ஷயம் யிவையெல்லாந்
தீரும். அநேகம் பரீட்சையுண்டாம்.

சிறுவ நோகத்துக்குக் கிக்கிராதிக் கிருதம்

வெப்பம்பட்டை, பேய்ப்புடல், சீந்திற்றண்டு, ஆடாதோடை வேர், கண்டங்கத்திரிவேர், சிறுவழுதலை வேர், முருங்கை வேர் புனல் முசுட்டை வேர் யிவைகள் வகைக்கு பலம்-4 கொண்டு வந்து நருக்கித் தொழுத்து பெரிய பானையில் போட்டு தாவி தண்ணீர் வார்த்து காய்ச்சி கியாழம் நாலத்தொண்ணாயிருக்க வடிகட்டிக் கொண்டு யிதுவும் பசுவின் நெய் முன்னாழி உரி கூட வார்த்து யிதுக்கு கற்கமருந்து - கொட்டம், பங்கம்பாளை வேர், கடுகுரோகணி, வெட்பாலையரிசி, விழலரிசி, வாலுழுவையரிசி ஏலம், சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், கருஞ்சீரகம், திணைப்பூ, ஆனைத்திப்பிலி, வெட்சாரம், ஆவுரத்தினை, அதக்குப்ப மஞ்சள், செவியம், சிறுமூலம், சித்திரமூலம், வசம்பு, அசம்பல், மஞ்சிட்டி அதிவிடையம், ஆடாதோடைவேர், ஏலம் இலவங்கம், சந்தனம், நன்னாரி வேர் முத்தக்காசு, அதிமதுரம், கண்டல் பசின் நறும்பசின், இருவேலி வேர், இலாமிச்சம்வேர் செங்கழுநீர்க் கிழங்கு, தாமரை-

அ வளையம் இவை வகைக்கு கழஞ்சு - உ

அத்தி பண்ணின மையாட்சி, குக்கில் பலம் 4
யிவையெல்லா மேகமாயரைத்து வழித்தெடுத்து
கியாழத்தில் கரைத்துக் காய்ச்சி நெய்பதத்தில்
வடித்து வைத்துக் கொண்டு இரண்டு வேளையும்
வேளைக்கு வராகனிடை பிரமாணம்
இடித்து வரத் தீரும் வியாதி - வாத ரோகம்-84
வகையும் எலும்பில் பற்றின வாதமும்
இரட்டம் 18ம் நரம்பும் - 6 வகையும்
அரம் 64ம் மேகரணங்கள், கண்ட-
மாலைகளை, கழுத்துக்கு மேலுள்ள வியாதி-
களும் பாண்டுவும், பாமேகம், அஸ்ரோகம்
பித்தவாயு, இருமல், ஈளை, சோபை
நெஞ்சு நோவு, பாண்டு ~~வயி~~, வயத்தில் விப்புருதி
(நோய்)
வெகுநாட்பட்ட
உபதிகம், அடுபம் புண் ரோட்டைகளும்
இரணங்களும்
தீரும்

இரத்த க்ஷயத்துக்கு வாசாதி கிருதம்

ஆடாதோடையிலைச் சாறு, பசுவின்-
பால், பசுவின்நெய் யிவை வகைக்கு நாழி
சட்டியில் வார்த்து யாதுக்கு கற்க மருந்து-
நிலவேம்பு, கொடிசைப்பாலை வறை
முத்தக்காசு, அதிமதுரம், சந்தனம், சுமம்
இலுப்பைப்பூ, சிறுகாஞ்சொட்டை, நன்னாரிவேர்
விளாமிச்சம்வேர், தாமரை வளையம், படி-
பிண்ணிப்பாளை, பெருங்குருந்தை, கஞ்சாக்-

கொழுந்து யிவை வகைக்கு காசிடை - உ
சர்க்கரை - அழாக்கு யிவை யெல்லாம்
பால்வார்த்தரைத்துக் கரைத்து கூட விட்டுக்
காய்ச்சி பதத்திலிறக்கி வைத்துக் கொண்டு
இரண்டு வேளையும் வேளைக்கொரு
கரண்டி கொடுத்துவரத் தீரும் வியாதி -
ரத்த க்ஷயம், பெருமன் யிவை தீரும்.

இரத்த க்ஷயத்துக்கு வாசாதிக் கிருதம்

ஆடாதோடை யிலைச் சாறு, கொடிவைப்-
பாலைச் சாறு, பசுவின் பால், ஆவின் நெய்
இவை வகைக்கு நாழி சட்டியில் வார்த்து
யிதுக்கு கற்கமருந்து - முத்தக்காசு,
அதிமதுரம், ஏலம், நன்னாரிவேர், பதுமுக-
நெய்தல்கிழங்கு, பெருங்குருத்தம் பட்டை,
கந்தாக் கொழுந்து யிவை வகைக்கு
காசிடை - உ கொண்டுவந்து பால் கூட விட்டுக்
வார்த்தரைத்துக் கரைத்து வைத்துக்கொண்டு
காய்ச்சி பதத்திலிறக்கி, சர்க்கரை - உழக்கு
யிதுக்குத் தேன் - உழக்கு இரண்டு
கூட விட்டுக் கிண்டி வேளைக்கொரு கரண்டி
வேளையும் ரத்த க்ஷயம், பெருமன், சுவாச-
கொடுத்துவர காசம் யிவை யெல்லாந் தீரும்

யவாட்சாரக் கிருதம்

யவாட்சாரம், திப்பிலி, திப்பிலி மூலம்,
சவ்வியம், சித்திர மூலம், சுக்கு, கண்டு-
பாரங்கி இவை வகைக்கு கழஞ்சொன்று-
1௨௨ வாங்கி இடித்து சூரணம் பண்ணிக் கொண்டு
இதுவும் பசுவின் நெய் படி-1
உடன் போட்டுக் காய்ச்சி கற்பாகத்-
திலிறக்கி வைத்துக் கொண்டு இரண்டு
வேளையும் வேளைக்கு ஒரு கரண்டி நெய்
கொடுத்து வரத் தீரும் வியாதி - க்ஷயம் -11 வகை-
-யும், அஸ்திசுரம், மாந்தசுரம், இரத்தக்காசி,
சுரம், கிருமி, சுவாசகாசம், உப்புசம்,
அக்கினி மாந்தம் இவையெல்லாந் தீரும்.

பஞ்சாக்கினிக் கிருதம்

பசுவின் நெய் - படி-1 சட்டியில் வார்த்து
இதுக்கு சேர்க்க மருந்து — மருள்கிழங்கு, காட்டுக்-
கருணைக் கிழங்கு, புளிக்கருணைக் கிழங்கு, கொடிவேலி வேர்,
ஈருண்டைக் கிழங்கு, கொடிவேலி வேர் - கொண்டு வந்து
இவை வகைக்கு பலம்-1௨ நெய்யுடன் போட்டுக்
பஞ்சுபோல் நசுக்கி நெய்யுடன் வடித்து வைத்துக்
காய்ச்சி கற்பாகத்தில் வடித்து வைத்துக்
கொண்டு இரண்டு வேளையும் வேளைக்கு
ஒரு கரண்டி கொடுத்துவரத் தீரும் வியாதி —
மூலவாய்வு, ரத்தமூலம், மேகவாய்வு, தாய்வு,
அக்கினிமாந்தம் இவையெல்லாந் தீரும்.
அக்கினி யுண்டாம்.

மகா ரத்தினாதிக் கிருதம்

செம்மரச் செக்கை, நீலசந்தனச்-
செக்கை, பன்னீர்ச்செக்கை யிவைகள்
வகைக்கு பலம்-15, விளாம்பட்டை, இலவம்-
பட்டை, வேப்பம்பட்டை, அத்திப்பட்டை
ஆலம்பட்டை, நெல்லிப்பட்டை, பருத்திப்பட்டை
கருங்காலிப் பட்டை, மாம்பட்டை, கல்லாலம்-
பட்டை, அருவியாலம் பட்டை, தாளிப்பனை-
-வேர், பனைவேர், பலாவேர், தென்னம்வேர்
பேரீச்சம் வேர், காட்டுவாகைப் பட்டை,
செண்பகப் பட்டை, புன்னைப் பட்டை
அரப்புன்னைப் பட்டை, சமுத்திரம் பட்டை,
ஆமணக்கம் வேர், இலுப்பைப் பட்டை
நிழல் நாவல் பட்டை, வன்னிவேர், புளியம்-
பட்டை, முன்னைவேர், வில்வபத்திரிவேர்
தேவதாரிச் செக்கை, அதியம் பட்டை, ஆடா-
தொடைவேர், இலந்தைப் பட்டை, அரசம்-
பட்டை, தேவதாரி வேர், பெருமரப் பட்டை
கொறுக்கைப் பாலைப் பட்டை, தில்லைப்பட்டை
கடம்பம் பட்டை, காட்டு முருக்கம் பட்டை
காட்டாமணக்கம் வேர், அட்டிவேர்ப்பட்டை
செம்மைப் பட்டை, பாதிரிப் பட்டை, நிலப்-
பாதிரிவேர், நீர்க்கடம்பு, கருவேலம் பட்டை
சாயவேர், இருமலைப் பட்டை, பிராயம் பட்டை
பொன்னாவரை வேர், பாவட்டம் பட்டை,
புங்கம் வேர், தேக்கஞ் செக்கை
நிலஆவாரை,

பிரண்டை, அவரிவேர், கற்றாழைவேர்
கீழாநெல்லிவேர், திப்பணைக் கிழங்கு,
சிக்கட்டிக் கொடை, சித்ரமல்லி, கழற்சிவேர்
அ. தவசிச் செக்கை, செங்கைவேர், மாவி-
லிங்கம் பட்டை, கொடிவேலி, தென்னைச்-
சாறு, இவணை வேர், துளசி, கருந்துளசி,
மணத்தக்காளி, சித்ராமுட்டி, பேராமுட்டி,
மஞ்சள், மரமஞ்சள் யிவை வகைக்கு)
பலம்-4 இந்த மருந்துகளோடு கூடின
கொழுந்துகள் வகைக்கு பலம்-1, அரக்கு-
பலம்-15 யிவையெல்லாம் கொண்டு வந்து
நறுக்கித் தொழித்து பெரிய பாணைகளில்
போட்டு ——→) நாலு மரக்கால் தண்ணீர்
~~விட்டு~~ அடுப்பில் வைத்து மெதுவாயக்கி
நாட்கள் காய்ச்சி கியாழம் எட்டு மரக்கா-
லிருக்க வடிகட்டிக் கொண்டு யாதுவம்
பசுவின் நெய் படிக்கொண்ணி, சித்ராமணக்-
கெண்ணெய் - இருண்ணி யிவைகளும் கூட
வார்த்துக் காய்ச்சும் போது யிதுக்கு கற்க-
மருந்து - முந்தின மருந்துகளுடைய விரை
வகைகள் வகைக்கு வராகனெடை-1 ~~[illegible]~~
கொண்டுவந்திடித்து சூரணம் பண்ணி
யிதில் கலந்து அரக்கு பலம்-12 அகில்-
சந்தனம், நல்ல சந்தனம், செஞ்சந்தனம்,
இலவங்கப் பட்டை, இலவங்கப் பத்திரி, நாககேசரம்,
ஏலம், செவ்வியத்திரிக்கோஷ்டம், வெட்டிவேர்,

இருவேர், சிலவங்கம், சீரகம், கருஞ்சீரகம்
அக்கிரகாரம், சுக்கு, திப்பலி, மிளகு, கடுக்காய்
தானிக்காய், நெல்லிப்பருப்பு, தகரை விரை
வாய்விளங்கம், நன்னாரிவேர், தாமரை-
வளையம், நெய்தல்கிழங்கு, சீந்தில் தண்டு
மருள்கிழங்கு, அமுக்கிராக்கிழங்கு, ஆனைத்-
திப்பலி, தாளிசப்பத்திரி, தைவியம் யிவை
வகைக்கு வராகனிடை - 1உ கொண்டுவந்து-
இடித்து சூரணம் பண்ணிக் கொண்டு யிந்தச்
சூரணம், முந்தின சூரணம், யிந்த இரண்டு
வகைச் சூரணத்தையும் யேகமாய்க் கலந்து
அதில் வெள்ளாட்டுப் பால் - படி - உ வார்த்து
சூரணத்தைக் கரைத்து காய்கிற நெய்யில்
வார்த்து யிதுவும் கரிப்பூவள்ளிச்சாறு -
படி - 1 கூட வார்த்து மூன்று ராத்திரி காய்ச்சி
நெய் பதத்தில் வடிக்கும் போது
சட்டியில் போடும் மருந்துகள் - கஸ்தூரி -
தோலா - 1, இந்துப்பு - தோலா - உ, குங்கும-
ப்பூ - தோலா - உ, கோரோசனை - தோலா - 3,
சாம்பிராணி பஸ்பம் - தோலா - 1உ, பலகறை-
பஸ்பம், அப்பிரக பஸ்பம், காந்த பஸ்பம்,
வங்க பஸ்பம், பவழ பஸ்பம், சங்கு பஸ்பம்
யிவை வகைக்கு தோலா - உ யிவையெல்லாம்
யேகமாய்க் கல்வத்தில் போட்டரைத்து
வாரியெடுத்து சட்டியில் போட்டு யிந்தச்சட்டியில்

நெய்யை யெடுத்துக் கொண்டு ஆறவிட்டு
மறுபாண்டத்தில் வார்த்து அதுமேலே
123 சீலை வேடுகட்டி வேடுமேலே செண்பகப்-
பூவும் மல்லிகைப்பூவும் தாழம்பூவும் மொகும்-
பூவும் சுரப்புன்னைப்பூவும் புன்னைப்பூவும்
[illegible] காய கட்டுச் சீலையின் மேலே
வைத்து மேல் சட்டி கொண்டு மூடி தானியப்-
புடத்தில் ஒருமாதம் வைத்திருக்கும் போது
பதினெட்டு வகை மௌனத்தியானக்கடைச
பிரம்மா, விஷ்ணு, ருத்திராதிகளும் தேவதை-
-களும் திரியம்பகை, [illegible] கணபதி
கரிசாத்த வயிரவனும் தன்வந்திரி, அகஸ்தி-
-யர், திருநானாதிகர், சோமசித்திய
ஆதித்தர் யவை முதலான தேவதைகளும்
நவநாத சித்தர்களையும் நெஞ்சில் அத்தை-
-யும் தூபதீப நைவேத்தியத்துடனே
சோடச உபசாரத்துடனே பண்ணிவைத்துக்
கொண்டு இந்த அவுழ்த்தை யெடுக்கவும்
பிறபாடு அந்த வியாதிக்காரருக்கு
அப்பியங்கணம் வமனம் செய்து
விரேசனம் கொடுக்கவும். அவனை
திரேகசுத்தி பண்ணிவைத்துக் கொண்டு
நட்சத்திரம் - திகதி, வாரம் யோகங்-
-களை யெல்லாம் கேட்டுக் கொண்டு
சுபதினத்தில் அக்கினி பட்சத்தில் யிப்படி

-கொத்த நாளிலே இரண்டு வேளையும்
வேளைக்கொரு கரண்டி குடித்துவரவும்.
பெண் பிள்ளைகளுக்கு ஒரு மண்டலந்
கொள்ள கர்ப்பத்தில் பிறக்கிற அஸ்தி-
சிராவம் பாது முதலான ரோகங்களும்
4 வகை வாந்தியும் அரோசியங்களும்
ஸூதிகா வரணம், ஸூதிகா வாய்வு ருது தோஷங்-
-களும் யோனி தோஷங்களும் பிறவை
முதலான வியாதியெல்லாந் தீரும். இதுக்குப்
பத்தியம் - இருத்துவமான பண்டங்களையும்
உப்பு மாங்கிஷங்களையும் புருஷ வஸ்திரங்-
-களையும் தள்ளவும். ஆண்பிள்ளைகளுக்கு
இரண்டு வேளையும் இந்நெய் உச்சிக்
கரண்டியாகவே ஒரு கரண்டி நெய் கொடுத்து
வரு தாது வர்த்திக்கும் க்ஷயம்-11 வகையுந்
தீரும். பாண்டுவும், காமாலை, மதமூர்ச்சை
சன்னி, காசரோகம், வாந்தி, சிலேற்பம்
குன்மம், மகோதரம் உம் மாதம் பிறணம்
அவாசகாசம் சிலேஷ்ம ரோகங்களும்
மேக மிருபது வகையும் [illegible] நாசந்திருவந்த
ரோகங்களும் கிருமி ரோகங்களும் இரசின்
பிறக்கிற நாக்கட்டு வியாதிகளும் அற்-
பிணக்கனம் பண்ணி வைத்திடும். நேத்திரத்தில்
பிறக்கிற 15 வகை ரோகங்களும் தீரும்.

நாள்வழியாகவே பரக்கிற ரோகங்களும் தீரும் கண்டத்தில் பரக்கிற ரோகங்களும் நெஞ்சில் பரக்கிற ரோகங்களும் இரத்தம் 18 வகையும் மூத்திரக் கிரிச்சரங்களும் ..ல ரோகங்களும் இது முதலான ரோகங்களையெல்லாம் பாந்த

அ. நெய் இரண்டு மண்டலங் கொள்ள சரீர ரோகங்கள் தீர்ந்து சரீரபுஷ்டியும் தாது வர்த்தனையும் ஆயுசு வர்த்தனையுமட சரீரம் (சரீரம்) சொர்ணகாந்தியுமுண்டாம் மூன்று மண்டலங் கொள்ள மோகபுஷ்டி யுண்டாகி அந்தர முகமும் ஞானபுத்தியும் ஆயுசு வர்த்தனையும் பெருகும். நித்தம் கொள்ள அபமிருத்து நாசமாம். சிரஞ்சீவியாக அகமாவர்.

இவன் பாந்தத்[illegible] ந்தான் பெயரவர்..... கும்பமாமுனிவன் நாகராசனுக்கு அருளிச் செய்த யோகம் முற்றும்.

கிராணிக் கழிச்சலுக்கு தேத்தாங் கிருதம்

தேத்தாங் கொட்டை - படி 1 சட்டியில் போட்டு மூணுபடி பசுவின் பால் விட்டு - ஒருநாள் ஊறவிட்டெடுத்து கல்வத்தில் போட்டு ஆட்டி வழித்தெடுத்து சட்டியில் போட்டு பசுவின் நெய் படி 3 கூடவார்த்து பாதுக்கு கற்கமருந்து - சுக்கு சீரகம், நல்ல சீரகம், மிளகு, ஏலம், அக்கி இலவங்கம்

இவை வகைக்கு பலம்-4, வெள்ளுள்ளி-பலம்-3 இவையெல்லாம் பொன்னிறமாய் வறுத்து பொடி பண்ணிக் கொண்டு வெள்ளுள்ளி-யை உரித்தரைத்து இவையெல்லாங் கூட்டி நெய்யில் போட்டுக் கரைத்து அடுப்பில் வைத்துக் காய்ச்சி கருகி திரண்டு பொன்னிற-மாய் வரும்போது இறக்கி வைத்துக் கொண்டு இரண்டு வேளையும் வேளைக்கொரு திரண்டை நெல்லியளவு கருகிமாக்க [?] இரக்கவும். இப்படி இருபது நாட்கள் இரக்கவும். தீரும் வியாதி-பித்தகாமாலை, கிராணிக்கழிச்சல், அக்கினி-மாந்தம் இவையெல்லாந் தீரும்.

மாதுளம்பழக் கிருதம்

மாதுளம்பழம் படி-1, ஆடாதோடைச்-சாறு படி-2, பசுவின்பால் படி-2, தூது-வளை இலைச் சாறு [?] படி-2, இளநீர் படி-2 [?] பசுவின்நெய் படி-1 இவையெல்லாவற்றை உட்டிச் [?] சட்டியில் வார்த்து இதுக்கு கற்க மருந்து - கோஷ்டம், இந்துப்பு, ஆனைத்திப்பிலி, நல்லசந்தனத்தூள், சாதிக்காய், ஏலம், நாகேசரம் இவை வகைக்கு வராகனெடை-4 கொண்டு வந்து பால் வார்த்தரைத்து வழித்தெடுத்துக் கரைத்து உடன் வார்த்துக் காய்ச்சி மெழுகு பதத்தில்

வடித்து வைத்துக் கொண்டு இரண்டு
வேளையும் வேளைக்கொரு கரண்டி
கொடுத்துவரத் தீரும் வியாதி - க்ஷயம், இருமல்
சுரம், சிலேட்டும சுரம், வாய்வு யிவை-
யெல்லாந் தீரும்.

கபால சூலைக்கு வெள்ளுள்ளிக் கிருதம்.

உரித்த வெள்ளுள்ளிப் பூண்டு பலம்-12
பானையில் போட்டு முப்பத்து இரண்டுபடி
தண்ணீர் வார்த்துக் காய்ச்சி யெட்டுப்படி
1.24. யாருக்க யாதுவும் பசுவின் நெய் படி-2
வெள்ளாட்டுப்பால் படி-2 யிவைகளைக்
கூட வார்த்து யிதுக்கு கற்க மருந்து -
திப்பிலி-பலம்-2, இந்துப்பு பலம்-2 அரைத்துக்
கரைத்துக் கூட வார்த்துக் காய்ச்சி பதத்தி-
லிறக்கி வைத்துக் கொண்டு இரண்டுவேளையும்
வேளைக்கு ஒரு துட்டிடை — கருகும் நெய்ய-
மாகக் கொடுத்துவரத் தீரும் வியாதி - தலைக்-
கனம், தலைவலி, தலைக்குத்தல், தலை-
நடுக்கல், தலைத் திருப்பு, உச்சந்தலை-
நோவு, கண்ணிமை நோவு, கன்னக்குத்தல்,
படர்வலி, தலையில் புழுவூரல், கபாலங்-
இனமம், ஊனை, வயிற்றுளைவு, இசிவு நோய்
வாய்நீர் பெருக்கிறது தலையில் வல்லயக்
குத்து போலே குத்துதல், வயத்தில் [illegible]

இழுக்கிற வாய்வு, தேகம் வெளுத்துப் போதல்,
தேகமெல்லாம் நோதல் இப்படிப்பட்ட குணங்க-
ளெல்லா மபால ரோகமெல்லாந் தீரும்.
பத்தியம் - உப்பு கூட்டிக்கொள்ளவும். வெள்-
ளாட்டு உப்புக்கண்டம், பசுவின் பால்,
முளைவாளை, அரும்பு, கத்திரிப் பிஞ்சு
இவைகள் கூட்டிக்கொள்ளவும். புளிதவிரவும்.

திப்பிலியாதிக் கிருதம்

பசுவின்நெய் - படி-1 அட்டியில் வார்த்து
இதுக்கு கற்கமருந்து - திப்பிலி, வெட்பாலை
பூனைக்காஞ்சொறிவேர், கடுகுரோகணி, பெரு-
நன்னாரிவேர் கீழாநெல்லி, நெல்லிப்பருப்பு
வில்வப்பத்திரிவேர், நிலவேம்பு, வெட்டிவேர்,
குருவேர், சதகுப்பை, அதிவிடையம், நிலப்-
பனைக்கிழங்கு, பாளைவேர் இவைகள் வகைக்கு
பலம்-2 கொண்டுவந்து இடித்துச் சூரணம்
பண்ணி நெய்யில் போட்டுக் காய்ச்சி பதத்தில்
வடித்து ஆறிவரும் போது சக்கரை பலம்-4
போட்டுக் கிளறி வைத்துக்கொண்டு
ரெண்டு வேளையும் வேளைக்கு உள்ளங்கை
குழிகொண்ட பிரமாணம் கொடுத்துவரத் தீரா
வியாதி க்ஷயம் 11-வகையும் தீரும்.

~~[illegible]~~

மார்நோவு, இத்திர வாய்வு இவைகளுக்கு கிருதம்

பூசாம்பிரம் துட்டெடை - 2, நிலஆவாரை
துட்டெடை - 3, நிலவேம்பு - துட்டெடை - 1

சீரகம் - துட்டிடை - 1, கடுகுரோகணி -
துட்டிடை - 1, கோரோசனை - வராகனிடை - 1,
பசுவின் நெய் - படி - 3 கடைச்சரக்குகள்
- பலம் தனித்தனியே சூரணம் பண்ணி வைத்துக்
கொண்டு நெய்ச்சட்டியில் வார்த்து அடுப்பில்
வைத்துக் கொதிக்கும் போது - பலம் நிலவேம்பு
உ-வது நிலாவாரை, 3 வது கடுகுரோகணி,
அ 4-வது சீரகம், 5 வது ஸ்ரீசாம்பராம் கோ-
ரோசனையும் கூட்டி கிருதஞ் செய்து
ஒரு துட்டிடை பிரமாணஞ் சாப்பிட
வாதம் - 84 வகையுந் தீரும். மார்நோவு
நேத்திர வாய்வு தீரும். கையாட்சி.

கண்டமூல கிருதம்

நெல்லிக்காய்ச்சாறு - படி - 8, நெய் -
சேர் - 2, கற்கண்டு - பலம் - 50 பொடிசெய்து
நெல்லிக்காய்ச் சாற்றில் நெய்யுங் கற்-
கண்டுத்தூளும் போட்டுக் கலந்து அஷ்ட-
பாகமாகக் காய்ச்சி வருகிற போது மிதுக்கி
மென்பொடி இலவங்கப்பத்திரி, ஏலம், நாகே-
-சரம், இந்துப்பு, சீரகம் வகைக்கு பலம் - 1
சுக்கு, மிளகு, கொடிமுந்திரிப்பழம் வகைக்கு -
பலம் - 4, திப்பிலி - பலம் - 8, தே.... டை
பலம் - 8 இவைகள் சூரணஞ் செய்து
அஷ்ட பாகமாகக் காய்ச்சி மெழுகு பதமாக
வருகிற பதத்தில் இந்தச் சூரணமும் போட்டுக்

கிளறி தேனும் வார்த்துக் கிளறி எடுத்து வைத்துக் கொண்டு இருவேளைக்கு கொட்டைப்பாக்கு பிரமாணம் இரண்டு வேளையும் இருபது நாட்கள் தின்னத் தீரும் வியாதி பாண்டுவும், பித்தவாத பாண்டுவும், சிலேட்டும ரோகம், சுவாசகாசம், மகாக்ஷயம், க்ஷய ரோகம், உஷ்ண பித்தம், உஷ்ணரோகம், மேகம் இருபது இவைகளெல்லாந் தீரும். மலபத்தமாக இரண்டு நாட்களுக்கொருக்கால் மூன்று நாட்களுக்கொருக்காலாகிறது தினமிரண்டு தரம் மலசுத்தியாகும். இவ் ரோகமும் சுத்தியானே அத்துப்போம். காரம், கசப்பு, துவர்ப்பு, புளிப்பு இவை தவிர்க்கவும். கையாட்சி.

மேகாதி கிருதம்

வாழைக்கிழங்குச்சாறு, அதின் பூச்சாறு பொன்னாங்கண்ணிச்சாறு வகைக்கு சாறு-4 பருத்தியிலைச்சாறு, வில்வவிலைச்சாறு, பொற்மாணிக்கச்சாறு, வயலைச்சாறு வகைக்கு சாறு-2 இவைகளெல்லா மொன்றாய்ச் சேர்த்துக் காய்ச்சி கடைச்சரக்கு - திப்பலி, மிளகு, சீரகம், கருஞ்சீரகம், தக்கோலப் பொட்டு, தாளிசபத்திரி, திப்பலி மூலம், கற்பூரம், செவ்வியம், கோரைக்கிழங்கு, சடாமாஞ்சில், அத்தனம், வெட்டிவேர் இலாமிச்சம் வேர், சோம்பு, கடுக்காய், தான்றிக்காய்

நெல்லிப்பருப்பு, லவங்கம், ஏலம், வெண்-
காரம் வகைக்கு பலம்-1 யிடித்து சூரணஞ்
செய்து வாங்கிக் கொண்டு சர்க்கரை பலம்-10
வங்கபஸ்பம் -பலம்-1, திப்பலித் - பலம்-2
பாலில் சுத்தி செய்த கெந்தகம்-பலம்-2
கூட்டிச் சேர்த்து இரண்டு நேரமும்
ஒரு கரண்டி சாப்பிடத் தீரும் வியாதி —
இரத்தமேகம், மதுமேகம், மதிங்கமேகமும்
தீரும். கையாட்சி.

சுத்த பயித்தியத்துக்கு பஞ்சஅமுர்தக் கிருதம்.

இளநீர், கரும்புச்சாறு, பேயன் வாழைப்பழச்
125. -சாறு, பால், நெய் வகைக்கு -பலம்-4 இதற்கு
வகை - அதிமதுரம், மஞ்சிட்டி, ஏலம், லவங்கப்-
பட்டை, அக்கி, செங்கழுநீர்க் கோஷ்டம்,
இருவேலி, நன்னாரிவேர், முந்திரிகைப் பழம்
தாமரைவளையம், தகரம், நெய்தல் கிழங்கு
இவை வகைக்கு பலம் -2 யெல்லா மிடித்துப்
போட்டு பதத்தில் வடித்து தினஞ் சிறுகரண்டி
நெய் சாப்பிடவும். சுக்வ பயித்தியந் தீரும்.
பத்தியம் — துவரம்பருப்பு, முருங்கைக்காய்
நாரத்தங்காய், ஆற்றுமுள்ளி வத்தல், பிரண்டை
வத்தல் இவை கூட்டிக் கொள்ளவும். உப்பு,
புளிப்பு தவிரவும்.

பரங்கிப்பட்டை ரசாயனம்.

பரங்கிப்பட்டை - பலம் - 10 மேல் புறணி
2 சீவிப்போட்டு சுத்தமாக அரிந்து வைத்துக்
கொண்டு ஒரு சட்டியில் பசுவின் பாலும்
தண்ணீரும் விட்டு வாயில் வெள்ளைகட்டி
அரிந்த பட்டையை வைத்து சட்டி மூடி
விளிம்பு புக்குச் சீலைமண் செய்து அடுப்பில்
வைத்தெரித்து சட்டியில் கொஞ்சம் பால் நிக்க
எடுத்து உலர்த்தி யிடித்துச் சூரணம்
பண்ணிக் கொண்டு திரிகடுகு, திரிபலை,
ஏலம், கிராம்பு, சாதிபத்திரி, லவங்கப்பட்டை,
குரோசாணியோமம், ஓமம், சித்திரமூலம்
வாய்விளங்கம், அரத்தை, சிறுதேக்கு, சவ்வியம்
கொத்துமல்லி, சிறுமூலம், சீரகம், சடாமாஞ்சில்
கோஷ்டம், அதிமதுரம், விலாமிச்சு, நன்னாரி,
பித்தக்காசு, அமுக்கிரா, அரேணுகம், வாலு-
-ழுவை, சிறுநாகப்பூ, வெட்பாலையரிசி,
வகைக்கு பலம் - வ சூரணம், மருந்துச்
சூரணம் எடை - 12 அவ்வளது எடை - ௨௧
பட்டைத்தூள் - 12 அவ்வளது - ௨, சக்கரை-
எடை - 1 தேனும் கூட்டி நறுநெய்யும் விட்டுப்
பிசைந்து இரண்டு நேரமுங் கொள்ள குன்மம் - 18ம்
மேகம் - ௨௦ம், பித்தம் - 40, சிலேத்துமம் - ௯௬ம்
நீரிழிவுந் தீரும். பத்தியம் - முளைக்கீரை
துவரைப் பருப்பு, அவரைப் பிஞ்சு, அவரைக்-
கொழுந்து, பீர்க்கங்காய், பசுவின் பால்,
பசுவின் நெய் இவை யெல்லாமாம்.

இதுவும் பறங்கிப்பட்டை ரசாயனம்

பறங்கிப்பட்டை - பலம்-10 இதனை ஆவின்பாலி லொருசாமம் ஊறப்போட்டு நேக அரைத்து வைத்துக் கொண்டு பாக்கிச் சரக்கு - ஜாதிக்காய், ஜாதிபத்திரி, லவங்கம், திரிகடுகு, சீரகம், ஏலம், வாய்விளங்கம், கொத்தமல்லி, காயம், கருஞ்சீரகம், தாளிசபத்திரி, முந்திரிகைப்பழம், பேரீச்சம்பழம், கடுகைநீறு, பூதகரப்பான்பட்டை, குரோசாணி ஓமம் வகைக்கு பலம்-1 வழக்கடு கூட்டி முந்தின பால் விட்டரைத்து முந்தின மருந்தோடே கலந்து அடுப்பில் வைத்து வேகும்போது ஒருநாழி நெய் விட்டுத் துழாவிக் காய்ச்சி பாகுபதத்தில் சீக்கரை- பலம்-10 கூட்டப் போட்டு லேகியப் பக்குவத்தி லிறக்கி வெருகடி பிரமாணம் சாப்பிட க்ஷீணம், மேகவெட்டைக், கடுப்பு, உஷ்ணம், வாதக்ஷீணம், வாந்த-க்ஷீணம், மேகத்தினால் பட்டதெல்லாந் தீரும்.

பலவாத கெவுரி ரசாயனம்

(?) முகிள வெட்டுன சொங்கொட்டை - நெ பெருவாகை, கௌளி, பாதிரி, வில்வப்பத்திரி சிறுவழுதிணை, கண்டங்கத்திரி, சிற்றாமல்லி பேராமல்லி, நெருஞ்சில் இவ்வகை ஒன்றுக்கு

வேர் - பலம் - 10, கொடிவேலிவேர் - பலம் 50,
கடுக்காய் - 300, காட்டாமணக்கும் வேர்,
சிவதை வேர் - பலம் - 50 யிவையெல்லா
மிடித்து பதினாறு மரக்கால் தண்ணீர்
போட்டு யெட்டொன்றாய்க் காய்ச்சி
கியாழ மிறுத்துக் கொண்டு அந்த கஷாயத்
-துக்குப் பாதி கோமூத்திரம் விட்டு சிக்கரை
பலம் - 50 கரைத்து தயிருழக்கு, நெய்யுழக்கு
நல்லெண்ணெய் உழக்கு, கடுக்காய் - 50
விரைதள்ளிப் போட்டு லேகியப் பதமாக
விட்டு அதில் சூரணம் - திப்பிலி, ஏலம்,
லவங்கப்பத்திரி, தக்கோலம், லவங்கம்,
சிறுநாகப்பூ, அக்கி, சூடம், (?) காரகில், மிளகு,
சீரகம் யிவை வகைக்கு பலம் - 1 சூரணம்
பண்ணித் தூவி பதத்திலிறக்கி ஆறவிட்டு
நாழி தேன் விட்டு இரசாயனப் பக்குவமாகச்
செய்து நெய்க்குடத்தில் வைத்து பதினைந்து
நாட்களில் தானியப் புடமிட்டு யெடுத்து
வைத்துக் கொண்டு கடுக்காயளவு
ரசாயனமாக் கொள்ளத் தீரும் வியாதி -
மூலரோகம், குன்மம், வயிற்றுவலி,
அலிகம், பாண்டுரோகம், சளிப்பிணிகள்,
இருமல், இளைப்பு, இருதயம், மூத்திரக்-
கிரிச்சம், பிரமேகம், விருதம், உஷ்ண
தம்பகம், அக்கினிமாந்தம், வாத பித்த
சிலேட்டுமத்தி லுண்டான வியாதியெல்லாம்
போகும். யிந்த ரசாயனம் சகலவியாதிகளையும்
போக்கும்.

57அ.

சீரக ரசாயனம்.

சீரகம் - பலம் - 10, பரங்கிப்பட்டை - பலம் - 4 அமுக்கிராக்கிழங்கு - பலம் - 4, ஏலரிசி - பலம் - 2 சர்க்கரை - பலம் - 20, பசுவின்நெய் சேர் - 2, சித்தாமணக்கெண்ணெய் சேர் - 1 இந்த மருந்துகளை இடித்து வஸ்திரகாயம் பண்ணி சர்க்கரையைப் பாகுபதம் பண்ணி இந்தப் பொடியை தூவித் திரண்ட பக்குவத்தில் சித்தாமணக்கெண்ணெயும் பசுவின்நெய்யும் விட்டுக் கிளறி வைத்துக் கொண்டு அந்தி சந்தி வெருகடி பிரமாணம் சாப்பிடவும். தினம் முழுகின நாள்த்தவிரவும், இதுக்குத் தீரும் வியாதி - மேகம், தழுதளை, கிரந்தி, மேகஇரணம், வாதஇரணம், கடிவாதம், ஆறாத புண்கள், கண்டமாலை, மேகவெட்டை, அக்கினிமந்தம், பித்தத்திலே பிறந்த வியாதிகள் சிலேட்டுமத்திலே பிறந்த வியாதிகள் யாவு மெல்லாந்தீரும்.

---

126. ## மேகத்துக்கு கதலி ரசாயனம்

புளியாரைச்சாறு - படி - 1, நல்தாளிப்பழம் - 25, கட்டுக்கொடிச் சாறு - படி - 1, புளி - பலம் - 2, பழுநல்லவெல்லம் - பலம் - 20, எருமைப்பால் - 3, தேங்காய்ப்பால் - 3, பசுவின் நெய் - படி - 2, சீரகம் - பலம் - 2 இவை பதமாக இறக்கி வைத்துக் கொண்டு சாப்பிடவும்.

க்ஷய ரோகங்கள் தீரும். மரத்தின் மேலிருந்து
யாருமேனுந் தீரும். தீபனமுண்டாம்.

கெந்தக ரசாயனம்

அத்தி வெட்டிவேர் கெந்தகம் பலமாறுடனே
சோம்பு திரிகடுகு திரிபலையை
அக லவங்கப் பட்டை
பத்திரி வாழ்ரான் அருகொரு வெலிவேரியோன்
சித்தமுறு வாய்விளங்கம் சுணத்தின் விதை
செங்கொட்டை பொன்பருப்பு ஜோதித் தனியம்
ஒன்றெருத் தேயமுகின் மேல்வழு தொன்று தீர
நீத்திரு காசிடை தென்னெண்ணெய் அக்கரை
நெய் பேனார் பழத்தும்
நிகழுக் திறைழுத்திரு போதுண்ணு மண்டலமே
நிகழ எண்ணெய் கடுகு உப்பு மீன்கத்திரிக்காய்
பெரும்பு சுனிக்காய் புளிப்பு கைப்பு மின்ன
விதைவிர பின் கருதாவின் நெய் பால். வெந்நீரும்
முதுகாடு காத்துப் பாதுருக்க-
காத்துப் பாதுருக்கக் கயங்காசம் நீர்-காமாலை
மேகக்கிராணி, கண்கிறந்தின் குன்மப்பிணிகள்
நீரடைத்தல் கிரிச்சரம் ஏத்து மெண்பதுவாதம்
நாற்பது பித்தமும் இருபது சேத்துமமும்
உடன்விட் டேகி. யெழுநோக்கு சட்டம் மதுரமும்
போவதாம்

...அன் நினைவைக் கின்னாந் கமலம்
நன்குமே தாணான் வளர்ந்திலனையாம்
மகிழும்
அளவைப்பயா அருள் தந்தக ரசாயன மகா
மகிமையின் பிரமிதே.

பதங்கிப்பட்டை ரசாயனம்

திருவேலி நன்னாரி மாஞ்சிறை அதுக்கிற
எழுந்தலைப் பனைநல் வேலம் இலவங்கப் பத்திரி
கிராம்பு மதுரம் கோட்டம் இலவங்கப் பட்டை
தக்கோடு திரிவேணு வின்விரை அரத்தைசிறு
தேக்குடன்
திண்சீரகம் விளங்கம் தழன்சித்தி மூலமுடன்
கருஞ்சீரகம் செவ்வியம் சமத்தண் கொத்தமல்லி
திப்பலி மூலம் வெருகமாய் வெவ்வேறு
கழஞ்சி

மூன்று பெருமண் தினைப்பட்டை
நன்றாய விளவல மாறுடன் சேர்த்திடித்திடு
தாளில் மெண்சினைப்பலம் ஆறிடு மருவே
நிறைந்த செந்தேனு மோர்மூன்று பலம்
வளராவின் பவ்வைவு தான்வார்த்துப்
பசைந்தெடுத் தெருக்கலக்கும்
நிறையவே வாரி நெய்ப்புடம் வைத்தெடு
சின்னவர்க்கு
பெருத்திடு ......
மண்டலந் கொண்டு வந்தே பிரிதுமுன்
வடக்கை

யாறுகிய மருக்கொ தருமினிய அன்னமாம் மிகுதி
அருந்திடு கிரிச்சிரம் பவுந்திக் கிரந்திபோம்
தன்னையழல் மேகவினை போம் தன்வளர்ந்த
கிரிழ்வுபோம் ரோகங்கள் போடீ
ணைத்தைருத்திடு வாந்திபோம் தொந்திடு பஞ்சு
வருசி அவநோய்கள் போம் அட்ர்பெரு வியாதி
மிடைபோம்

ஜீக்கா வாயு சிரஜீணை வீக்கங்கள் போம்
சொக்கை வாயு அடன்போம் மருந்திடு
பொன்னாப் பணியாது மணுகாது போம்
வாணி நவிகண்ட பனிபோல மாதவர்கள்
மெகிழ

~~மெகிழ~~ பாதமுன் யங்கிய மருந்து நாரயண
பூச்சிய மெகிழ்ந்தே.

உட்காங்கைக்கு அகரு கெந்தாதி நாராயணம்.

தாளிசபத்திரி, சுக்கு, திப்பலி, மிளகு
அரத்தை, செவ்வியம், சித்திரமூலம், திப்பலி-
மூலம், அதிமதுரம், கண்டுபாரங்கி, லவங்கப்
பத்திரி, ஏலம், சிறுநாகப்பூ, வாய்விளங்கம்
தண்ணீர்விட்டான் கிழங்கு, கச்சிலாங்கண்ணி,
நன்னாரிவேர், வெள்ளைச் சாரணைவேர்,
வகைக்கு பலம்-1, அமுக்கிராக்கிழங்கு-
பலம்-20 இவையெல்லா ~~ம்~~ பொடித்து யிடித்து
வஸ்திரகாயம் பண்ணி தேன்விட்டுப் பிசைந்து

காந்த செந்தூரம் - பலம்-2, லோக செந்தூரம் - பலம்-2, மண்டூரம் - பலம்-2 கூடக்கலந்து வைத்துக் கொண்டு அந்தி சந்தி நாற்பது நாட் கொள்ள புராணசுரம் வரும். பத்தியம் - புளிப்பு, கவிச்சு, எண்ணெய் இவைகளாகாது.

கெந்தக ரசாயனம் - கையாட்சி

சுத்தி பண்ணின கெந்தகம் - பலம்-6 திப்பிலி, திரிகடுகு, வாய்விளங்கம் சேங்கொட்டை, சித்திர மூலம், லவங்கப் பட்டை, லவங்கப்பத்திரி, கடலைப் பருப்பு இவை வகைக்கு பலம்-1 இவைகளை இடித்துச் சூரணம் பண்ணி கெந்தகத்தையும் பொடி செய்து கூடக் கலந்து வைத்துக் கொண்டு இரண்டு வேளைக்கு ஒரு வராகனிடையாவது இரண்டு வராகனிடையாவது மூன்று வராகனிடையாவது எடுத்து அவரவர்களின் பலனறிந்து அனுபானம் - தேனிலாவது பசுவின் வெண்ணெயிலாவது வாழைப்பழச் சாற்றிலாவது இந்தச் சூரணத்தைப் போட்டுக் குழைத்து உண்டையாக்கித் தின்னக் கொடுத்து வரவும். இப்படி இருபது நாட்கள் கொள்ளத் தீரும் வியாதி - ஆயி அண்டம், ஆணைக் கிரந்தி, பிளவுண்டம்,

127 திரிதோ....ண்டாள், நாட்ட முண்டாம், யளாமிலை, சிக்கல் பொன்னிறமாம், வெள்ளுண்டாம், சூரியமுண்டாம். நீரிழிவு வியாதிகளுந் தீரும். அக்கினி மந்தந் தீரும். அக்கினியுண்டாம் அசதி, காசம், கை ஓய்ந்து போதல், சிரம் மெய் முதியாயக்-கிற வாய்வும் மகோதரம் வட்டுகளையும் சுரையம் பதினோரு வகையும் சகல வியாதி-களும் தீரும். பத்திரி சார பிலவுண்டாம். சிம்பனை வீரியவர்த்தியுண்டாம். இதுக்குப் பத்தியம் - பசுவின் பால், நெய், தயிர், துவரம்பருப்பு, சர்க்கரை, வாழைப்பழம் யிவை கூட்டிக் கொள்ளவும். நல்லெண்ணெய் புண்ணாக்கு புளி தவிரவும். உப்பு மட்டாய்க் கூட்டிக் கொள்ளவும். இந்தக் கிரமத்தோடே வந்தால் இந்த வியாதிகளெல்லாந் தீரும். இது கையாட்சி.

இனி கந்தக சுத்தி - பசுவின் பாலிலும் கையாந்தகரைச் சாற்றிலும் கற்றாழைச் சாற்றிலும் தாழம் விழுதுச் சாற்றிலும் நொச்சியினைச் சாற்றிலும் வெள்ளைச் சாரணைச் சாற்றிலும் கருப்பஞ் சாற்றிலும் தேனிலும் கருப்பூமத்தையினைச் சாற்றிலும் இவைகளில் புடம் போட்டு வகைக்கொரு நாள் சாற்றிலூறப் போட்டு எடுக்கவும். பிறகு பசுவின் நெய்யில் கொதிக்க வைத்து

எடுத்துக் கழுவிக் கெந்தகமாம். கெந்தக ரசாயனத்துக்கு யது நல்ல சுத்தி.

சேங்கொட்டை சுத்தி

சேங்கொட்டையை சுண்ணாம்பு நீர் பொருந்த ஊறப்போட்டு எடுத்து கோணியில் செங்கல் மாப் போட்டு கட்டிக் கொண்டு சேங்கொட்டையைத் தேய்த்தெடுத்து மேல் முனை வெட்டிப் போடவும். யப்படிச் செய்ய சேங்கொட்டை சுத்தியாம். யந்தச் சேங்கொட்டையை ரசாயனத்திக்குக் கூட்டிக் கொள்ளவும்.

திப்பலி ரசாயனம்

திப்பலி - பலம் - ௨, வாய்விளங்கம் - பலம் - 1, சுக்கு - பலம் - 1, சிறுதேக்கு பலம் - 1, திப்பலி - மூலம் - பலம் - 1, தைசவியம் பலம் - 1, சித்திரமூலம் - பலம் - 1, ஜாதிக்காய் - பலம் - ௫, ஜாதிபத்திரி - பலம் - ௫, லவங்கம் - பலம் - ௫, கையாந்தகரைத்தூள் - பலம் - 1௨ யவையெல்லாம் கூட்டி யிடித்துச் சூரணம் பண்ணி யதின் நாட்டுச் சக்கரை - பலம் - 1௨, தேன் யருநாழி கூட சேர்த்துப் பிசைந்து சூரிய புடத்தில் நாலு நாழிகை வைத்து யெடுத்து வைத்துக் கொண்டு இரண்டு

வேளையும் வேளைக்கொரு மெருகெடு
பிரமாணம் கொடுத்து வரவும். காமாலை,
சோகை அக்கினிமந்தம், சுரம், அசாத்ய-
காசம், ~~இ~~ளைப்பு, பாண்டு பிணிகள்
யெல்லாந் தீரும்.

மதியுண்டா ரசாயனம்

வெட்டிவேர், நன்னாரி, சடாமாஞ்சில்
அமுக்கிராக்கிழங்கு, நிலப்பனைக்கிழங்கு,
ஏலம், லவங்கப்பத்திரி, லவங்கம்
அதிமதுரம், கோஷ்டம், சாதிபத்திரி, சுக்கு,
மிளகு, திப்பலி, முருங்கிவரசி, அரத்தை
சிறு....., வாய்விளங்கம், சித்திரமூலம்
கருஞ்சீரகம், செவியம், கொத்தமல்லி
திப்பலி மூலம் இவை வகைக்கு வராக-
னிடை-௨, பரங்கிப்பட்டை பலம்-௨
சூரணம் பண்ணி-
சர்க்கரை -பலம்-௨ வார்த்தும்
தேன் பலம்-௨, நெய்-பலம்-2 வார்த்து
பிசைந்து தானியபுடம் வைத்து மெருகெடு
பிரமாணம் அந்தி சந்தி ஒரு மண்டலம்
கொள்ளத் தீரும் வியாதி - பிரமேகம் இருபத்-
தொன்றும், புண், கிரந்தி, சூலை, வறட்சி
பித்தம்-40, வாதமெண்பதும் கபாலசூலை,
கபால~~சூ~~ரணம், உடம்புத்தினவு கைகால்
~~க~~கடைச்சல் பல வாய்வுகளும் தீரும்.

பித்தப் பயித்தியத்துக்கு திராட்சாதி ரசாயனம்.

திராட்சிப்பழம் - பலம்-50, கொட்டை போக்கின பேரிச்சம்பழம் - பலம் -40, சக்கரை - பலம்-50 யிவையெல்லாம் லேகியமாகக் காய்ச்சி பாகாக்கி வைத்துக் கொண்டு ஏலம், லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, சிறு-நாகப்பூ, வெட்டிவேர், விலாமிச்சம் வேர், கடுக்காய், தான்றிக்காய், நெல்லிப்பருப்பு சுக்கு, திப்பிலி, மிளகு, கொத்தமல்லி, இலவங்கம் நல்ல சந்தனம், கோரைக்கிழங்கு, முந்திரிகைப்-பழம், நாகேசரம், சீரகம், கோஷ்டம், மஞ்சிட்டி, கிச்சிலிக்கிழங்கு, வாய்விளங்கம், சோம்புக்கீரை, அதிமதுரம், சடாமாஞ்சி அதிவிடையம் வகைக்கு பலம்-௨ கூட்டி யிடித்து சூரணம் பண்ணி கியாழத்தில் செய்து கொண்டு போட்டு லேகியமாகக் கூட்டி கூட நெய்- படி-1, தேன் படி-1 வார்த்துக் கலந்து பாகாக்கி வைத்துக் கொண்டு அந்தி சந்தி வேளைக்கு கிரண்டு வராகனிடை கொள்ளத் தீரும் வியாதி - ரத்தக்ஷயம், ரத்த பயித்தியம், ரத்தகாசம், ரத்த பீனிசம், ரத்தமூலம், ரத்தக்கிராணி, ரத்த மேகம் இதுவகை பயித்தியமெல்லாந் தீரும். மதிப்பிரமை, உண்மாத பிரமைகளுந் தீரும். இது கனகப்பர் எழுதி வைத்தது.

க்ஷயத்துக்கு நிம்பாதி ரசாயனம்

சிறுவாசி, வெட்பாலையரிசி, நாகப்பூ,
ஏலம், அரத்தை, சுக்கு, மிளகு, திப்பிலி,
திப்பிலி மூலம், பெருங்காயம் இவை வகைக்கு
பலம்-1 கொண்டு வஸ்திரகாயம் சூரணம்
பண்ணிக் கொண்டு இதில் வேப்பம்பட்டைச்
சூரணம் உழக்கு கூட்டிப் போட்டு பட்டைக்-
கருப்பட்டி - பலம் - 12, தேன் - படி - ௨, நெய்-
[illegible] சந்திரசாறு இவைகளை யெல்லாம்
கூட்டிப் போட்டு பிசைந்து ரசாயன பக்குவம்
பண்ணி வைத்துக் கொண்டு இரண்டு வேளையும்
வேளைக்கு கொட்டைப் பாக்கு பிரமாணம்
கொடுத்து வரவும். இப்படி நாற்பது நாட்கள்
தின்னத் தீரும் வியாதி - க்ஷயம், காசம்
இருமல் இவையெல்லாந் தீரும். இதுக்குப்
பத்தியம் - பசுவின் பால், தயிர், மோர்
அ துவரம்பருப்பு, அரைக்கீரை, உப்பு இவை
கூட்டிக் கொள்ளவும்.

கெந்தக ரசாயனம்

கெந்தகம் - பலம் - 11 பசுவின் பாலில்
சுத்தி பண்ணிக் கொண்டு கல்வத்தில் போட்டு
காடியிலும் ஆட்டுப் பாலிலும் நீர்ப்பூசணிக்காய்ச்
சாத்திலும் கரும்புச் சாத்திலும் நாரத்தம்பழச்
சாத்திலும் கொடிமாதளம்பழச் சாத்திலும்
தேனிலும் வகைக்கொருநாள்
பசுவின் தயிரிலும்

[illegible]த்து பசுவின்நெய் .... சட்டியில்
வார்த்து கெந்தகத்தை யதில் போட்டு
கொதிக்க வைத்து யிறக்கி ஆறனைத் தெடுத்து
குழிவி யெடுக்கச் சுத்தியாம். இப்படி
சுத்தி பண்ணின கெந்தகம் - பலம்-8, திப்பலி,
திப்பலிமூலம், கண்டுபாரங்கி, மிளகு, வால்-
மிளகு, சிறுநாகப்பூ, வாய்விளங்கம்,
ஓமம், சீரகம், சாதிக்காய், சாதிபத்திரி,
லவங்கம், லவங்கப்பட்டை, லவங்கப்-
பத்திரி, அரத்தை யிவை வகைக்கு பலம்-1
கொண்டுவந்திடித்து சூரணம் பண்ணிக் கொண்டு
கெந்தகத்தைப் பொடி செய்து கூடப் போட்டு
சர்க்கரை - பலம்-4, தேன் - பலம்-4 யிவையும்
கூடக் கலந்து பிசைந்து வைத்துக் கொண்டு
ரெண்டு வேளையும் வேளைக்குப்
பாக்களவு கொடுத்து வரவும். இதுக்குத்
தீரும் வியாதி வெகு கடுப்பட்ட கிறாணி,
அக்கினி மந்தம், ஆறாத கடுப்பட்ட புண்
சேஷ்ட்டைகள், மதகரிகிராணி, வாதத்தின்
வாதகிராணி, மேகம், சுவாசகாசம், சுரம்,
யாருமனி மூலவியாதிகள் யிவையெல்லாந்
தீரும். வீரியவிர்த்தி யுண்டாம். இதுக்குப்
பத்தியம் - முருங்கைப்பிஞ்சு, துவரம் பருப்பு
பசுவின் பால், பசுவின் நெய், கசப்பில்லாத-
மீன் கருவாடு யிவை உட்கொள்ளவும்.
புளிப்பு, கவிச்சு, புகை, கசப்பு கீரை தவிரவும்.

கலியாணப் பூசுணிக்காய் ரசாயனம்

கலியாணப் பூசுணிக்காய் பழத்தை உடைத்து
மேல் தோலை சீவிப் போட்டு குடலும்
விதையுந் தள்ளிப் போட்டு மெல்லிசாயரிந்து
காயப்போட்டு உணர்ந்த பிறகு யிடித்துப்
பொடிசெய்து கொண்டு யிதுக்கு நாழி பசுவின்
நெய்யை சட்டியில் வார்த்து அடுப்பில்
வைத்துக் காயும் போது யிந்தப் பூசுணிக்-
-காய்த் தூளை கொட்டி வறுத்துச் சிவந்து
வரும் போது யிதுக்கு யின் பொடி மருந்து
திப்பிலி-பலம்-1, சுக்கு-பலம்-1, சீரகம்-
129. பலம்-2, ஏலம்-பலம்-2, லவங்கம்-பலம்-2,
கொத்தமல்லி-பலம்-2, மிளகு-பலம்-2.
யிவை யெல்லா யிடித்துச் சூரணம் பண்ணி
கூடப் போட்டுக் கிளறி யிறக்கி வைத்துக்
கொண்டு சர்க்கரை நாழியும் தேன் அரை
நாழியும் கூட வார்த்துக் கிளறி வைத்துக்
கொண்டு வெருவாறு ரெண்டு வராகனிடை
யெடுத்துக் கொடுத்து வரவும். யிதுக்குத் தீரும்
வியாதி - அக்கினி மந்தம், மார்பில் யிறக்கின
வியாதிகள், க்ஷயம், சுவாசகாசம், ரத்தபித்தம்,
யிருமல், மேகவாய்வு, சரீரம் மெலிவு யிவை-
யெல்லாந் தீர்ந்து போம்.

மதுமேக ரசாயனம்

கையாட்சி

வெட்டிவேர், விலாமிச்சம் வேர், நன்னாரிவேர், சடாமாஞ்சில், அமுக்கிராக்கிழங்கு, நிலப்பனைக்கிழங்கு, ஏலரிசி, லவங்கப்பத்திரி, கிராம்பு, அதிமதுரம், கோஷ்டம், லவங்கப்பட்டை, அக்கி, திப்பிலி, மிளகு, மூங்கிலரிசி, அரத்தை, சிறுதேக்கு, கருஞ்சீரகம், சவ்வியம், திப்பிலிமூலம் வகைக்கு பலம் - ரு, கொத்தமல்லி - பலம் - 11, பறங்கிப்பட்டை - பலம் - 6, தேன் - பலம் - 3, நெய் - பலம் - 3 யிவைகளெல்லாம் ரசாயனஞ் செய்து தானியப்புடத்தில் வைத்து வேளைக்கு வராகனெடை சாப்பிட வந்தீரும் வியாதி - நீர்க்கிரிச்சரம், பவுத்திரக்கிரந்தி, கண், கை அழன்மேகம், சோமரோகம், பயித்திய வாந்தி, மேகவாய்வு மேக உஷ்ணம், மருந்தீடு யிவைகளெல்லாந் தீர்ந்து உடலிறுகி அழகுண்டாம்.

திப்பலாதி ரசாயனம்.

கிச்சிலிக்கொட்டை - கழஞ்சு - 3, சித்திரமூலம் - பலம் - 6, தானிக்காய் - பலம் - 4, கடுக்காய் - பலம் - 6, நெல்லிப் பருப்பு - பலம் - 6, கோரைக் - பலம் - 4, திப்பிலிமூலம் - பலம் - 4, கிழங்கு - பலம் - 4, ~~[illegible]~~ சவ்வியம் - பலம் - 4, ஆனைத்திப்பிலி - பலம் - 4, சிறுகுறிஞ்சா - பலம் - 4,

நாயுருவி - பலம் - 8, மருள்க்கிழங்கு பலம் - 4,
பிரண்டை - பலம் - 8, கருணைக் கிழங்கு -
பலம் - 4, காட்டுக் கருணைக் கிழங்கு -
பலம் - 6, புளிநறணைக்கிழங்கு - பலம் - 4
சிவத்தைவேர் - பலம் - 8, வெள்ளைச்சாறு-
வேளைவேர் - பலம் - 4 யிவைகளெல்லாம்
கொண்டு வந்து நறுக்கித் தொழித்து பெரிய
பானையில் போட்டு யெட்டு மரக்கால்
தண்ணீர் வார்த்து அடுப்பில் வைத்து
மெதுவாய் ஏழு நாட்கள் காய்ச்சி கியாழம்
நான்கொன்றாக யிருக்க வடிகட்டிக்
கொண்டு இதுவும் இறக் கொட்டையைச்
சுத்தி பண்ணி ஒன்று நாலாய் வெட்டி
பானையில் போட்டு பனிரண்டு படி
தண்ணீர் வார்த்துக் காய்ச்சி கியாழம்
நாலு படி யிருக்க வடிகட்டி கூட வார்த்து
. . . . இதுக்குப் பழவெல்லம் -
அ. பலம் - 40 உடன் போட்டு கரைத்து
வடிகட்டிக் கொண்டு இதுவும் பசுவின்
பால் முந்நாழி பசுவின்நெய் இருநாழியும்
கூட வார்த்து . . . நன்.றி.க்க. . . காய்ச்சி
பாகுபோல வரும்போது யிதுக்குக்
காற்க மருந்து- சுக்கு, மிளகு, திப்பிலி
வகைக்கு பலம் - ¼ கடுக்காய்
தான்றிக்காய், நெல்லிப் பருப்பு வகைக்கு
பலம் - 2 சயிந்தலவணம், விடாலவணம்
. . . . வாய்விளங்கம் வகைக்கு பலம்

பறங்கிச்சக்கை, நிலப்பனைக்கிழங்கு,
பனைவெல்லம் வகைக்கு பலம்-4 நிலனை
கிழங்கு - பலம்-8 நாயுருவி அட்டச்சாம்பல்-
பலம்-1, இரண்டைச் சூரணம் - பலம்-1
காட்டுக் கருணைக்கிழங்குச் சூரணம் -
பலம்-1, எள் - பலம்-7 முந்திரிகைப்பழத்தில்
வைத்தெடுத்த சீடைக்கொட்டை - பலம்-4
யிந்த எள்ளை யிளவறாய் வறுத்து
சீடைக் கொட்டையும் கூடப் போட்டு
இடித்துப் பொடிசெய்து கொண்டு மத்த
மருந்துகளை யிடித்து சூரணம் பண்ணிக்
கொண்டு யிந்த இரண்டு வகை சூரணங்-
களையும் கூடப் போட்டுக் கிளறி
கெட்டி பக்குவத்தில் யிறக்கி வைத்துக்
கொண்டு சுத்தி பண்ணின தேன் யிருநாழி
கூடவார்த்துக் கிளறிக் கொடுத்து
லேகியம் பக்குவமா யெடுத்து மண்பாண்ட-
-த்தில் வைத்துக் கொண்டு தானியப்புடத்தி
-லொருமாதம் வைத்தெடுத்துக் கொண்டு
யிந்த லேகியத்தைச் சாப்பிடு முன்னே அப்-
-யாங்கனம், வமனம், விரோசனம்
யிவை செய்த பிறகு இரண்டு வேளையும்
வேளைக்கு வராகனிடை லேகியம்
கொடுத்து வரத் தீரும் வியாதி பிரமேகம்-6
வகையும் கிரந்தி, குன்மம், வாதம், மலபந்தம்,

அரோசிகம், கிருமிரோகம், சோகை, குஷ்டம் பதினெட்டுவகையும் வலிபலி-நாசம், அக்கினிவார்த்தியம், க்ஷயம் -11 வகையும் யிவை முதலான வியாதி-யெல்லாந் தீரும். வீரிய விர்த்தியுண்டாம். பத்தியம் - புளிப்பு, கசப்பு, கைப்பு யிவை தவிரவும்.

திப்பலிரசாயனம்

திப்பலி - பலம்-16, ஏலம் - பலம் - 2, அரத்தை - பலம்-2, இலவங்கம் - பலம் -1, சின்னலவங்கப்பட்டை - பலம் - 2, லவங்கப்பத்திரி - பலம் -2, சீரகம் - பலம்-1, திக்கோலப் பொட்டு பலம்-1, திப்பலி-மூலம் - பலம் -1, செவ்வியம் - பலம் -3, கண்டுபாரங்கி - பலம்-4, சுக்கு-பலம்-1, மிளகு - பலம் - 1, வாய்விளங்கம் - பலம்-1. கரிசலாங்கண்ணிச் சூரணம் பலம்-8, சர்க்கரை - பலம் -8., லோக செந்தூரம் - பலம்-1, தேன் - படி-2 இந்த மருந்தெல்-லாமிடித்து சூரணம் பண்ணிக் கொண்டு யதுவும் கரிசலாங்கண்ணிச் சூரணம் லோக செந்தூரம், சர்க்கரை யிவையாஞ் கூடப் போட்டு தேனத்தி பண்ணிக் கூடவார்த்துப் பிசைந்து [illegible] பண்ணி

வைத்துக் கொண்டு இரண்டு வேளையும் வேளைக்கு வராகனிடை த்க் அளவு சூரணம் கொடுத்து வரத் தீரும் வியாதி - பித்த பாண்டும் காமாலை, உப்பிசம், க்ஷயம், இருமல் சுரம், பேதி, அதிசாரம் இவையெல்லாம் தீரும். பத்தியம் - கவிச்சி, புளிப்பு தவிரவும்.

திப்பலாதி சூரணம்

திப்பலி - பலம் - 5, சர்க்கரை - பலம் - 8, லோக செந்தூரம் - பலம் - 2, கரிசலாங்கண்ணிச் சூரணம், வாய்விளங்கம், நெல்லிப்பருப்பு, திப்பலிமூலம், ஓமம், சுக்கு, கண்டுபாரங்கி, சாதிக்காய், சாதிபத்திரி, மிளகு, சித்திரமூலம், அமுக்கிராக்கிழங்கு, கர்க்கடகசிங்கி, இலவங்கம் இவை வகைக்கு பலம் - 1 கொண்டு வந்திடித்து சூரணம் பண்ணிக் கொண்டு கரிசலாங்கண்ணிச் சூரணம், லோகச்செந்தூரம், சர்க்கரை இவையெல்லாம் ஒன்றாய்க் கலந்து தேன் அதிபண்ணி கூட வார்த்துப் பிசைந்து சூரண பக்குவம் பண்ணி வைத்துக் கொண்டு இரண்டு வேளையும் வேளைக்கு வராகனிடை சூரணம் கொடுத்து வரத் தீரும் வியாதி - அசாரகாசம், பாண்டு, காமாலை, சோகைபாண்டு, அக்கினிமந்தம், க்ஷயசுரம், கிராணி, அதிசாரம் இவையெல்லாம் தீரும். கவிச்சி, புளிப்பு தவிரவும்.

வெள்ளாதி ரசாயனம்.

இகடுக்கொட்டை - பலம் 5, எள் - படி-௨ பனைவெல்லம் - பலம்-10, கொப்பரைத்தேங்காய், மிளகரணைப் பட்டை - பலம்-௨, கருஞ்சீரக- பலம்-௨, நீரடிமுத்து - பலம்-1, சீரகம்- பலம்-1, நிலாவாரை - பலம்-1, கார்போகவித்தை - பலம்-௨ கொத்தின் பட்டை - பலம்-௨ யிவையெல்லாஞ் கொண்டுவந்திடித்து சூரணம் பண்ணிக்- கொண்டு மறுகாலை எள்ளு, கடுக்- கொட்டை, கொப்பரைத் தேங்காய், பனை- வெல்லம் - ~~[struck]~~ சூரணம் யிவையெல்லாம் யேகமாய்க் கல்லுரலிலே போட்டு யிடித்து ரசாயன பக்குவம் பண்ணி யெடுத்து வைத்துக் கொண்டு ~~இ~~ரண்டு வேளையும் வேளைக்கு வராகனிடை ரசாயன மெடுத்துக் கொடுத்து- வரத் தீரும் வியாதி - வாதரோகம், உடல் கடுப்பு, குட்ட வியாதி, கைக்கணுக்கள், வாதக் கிரந்தி, கிரந்தி வாதம், கிரந்தி, செவ்வாப்பு, புண் சேவட்டை, சிரங்- கிரங்கு யிவையெல்லாம் தீரும்.

மகா நீர்க்கிண்டி ரசாயனம்

அ. நொச்சிவேர் - பலம்-150, அரத்தை - பலம்-75 வெள்ளெருக்கம் பட்டை, அமுக்கிராக் கிழங்கு வெள்ளைச் சாறுவேளை வேர், மெருகன்கிழங்கு சித்தாமுட்டி வேர், பேராமுட்டி வேர், ... ~~[struck]~~ மாவிலிங்கப்பட்டை, நருவிலிங்கம்- ~~[struck]~~ வேர், முருங்கைவேர், சங்கம்வேர்,

காட்டாமணக்கு வேர், கண்டங்கத்திரி
காஞ்சொறி வேர், மரமஞ்சள், மருள்கிழங்கு,
கொன்னைப்பட்டை, நிலாவாரை, கடுக்காய்
தான்றிக்காய், நெல்லிப்பருப்பு, நல்லசிந்தனம்
அகரத் தக்கை, நன்னாரி வேர், வெட்டிவேர்
இருவேர், கருங்காலிப்பட்டை, கண்டுபாரங்கி
சீந்தில் தண்டு, தேவதாரிச் சக்கை, வில்வப்-
பத்திரி வேர், வசம்பு, நிலவேம்பு, ஆடாதோடை-
-வேர் ஆதுவளை வேர், பற்பாடக-
சிறுவழுதிணை வேர், ~~[illegible]~~மதண்டு வேர், மிளகு
-ரணைப்பட்டை, முக்கத்திரிப் பட்டை
கரைவாயப்பட்டை, வெருக்கம்பட்டை
கொடிவேலி, செவ்வியம், பாதிரி வேர்
யிவை வகைக்கு பலம் - உ5 கொண்டு
வந்து நொறுக்கித் தொழுத்துப் பெரிய பானைகளில்
போட்டு முக்கால் தண்ணீர் வார்த்து
அடுப்பில் வைத்து மெதுவாய் யேழுநாட்கள்
எட்டிலொருபங்கி
காய்ச்சி கியாழம் ~~[illegible]~~த்துக்கிப் பழவெல்லம்-
இருக்க வடிகட்டி போட்டுக் கரைத்து
பலம் - உ5 கூடப் ~~[illegible]~~யிதுவும் சாறு வகைகள்-
வைத்துக்கொண்டு கருநொச்சின் சாறு, மணத்-
நொச்சின் சாறு, ~~[illegible]~~இஞ்சிச் சாறு, கொள்ளுக்-
தக்காளிச் ~~[illegible]~~ சாறு, வகைக்கு
கட்டு யாந்தச் சாறு வகைகள்
சாறு - இறுணி யாவும் சாறு வகைகள் -
கொமட்டி மாதுளம் பழச்சாறு, இருப்பைச்
சாறு,
~~[illegible]~~, ~~[illegible]~~

வெள்ளைச் சாறு, வேளைச் சாறு, முசு-
முசுக்கைச் சாறு, சிறுபயத்தஞ்சாறு, குப்பை-
மேனிச் சாறு, நீர்த்திப் பொடிச்சாறு, தண்டுக்
காம்புச் சாறு, அவரியிலைச் சாறு, கரிசலாங்-
கண்ணியிலைச் சாறு, பிரமியிலைச் சாறு,
கண்டங்கத்திரிச் சாறு, மஞ்சை மருதன்சாறு,
~~நீர்த்திப் பொடிச்சாறு~~ வேளையிலைச் சாறு
வருக்கிழங்குச் சாறு ஆடாதோடைச் சாறு
கற்பூரவல்லிச் சாறு, கீழாநெல்லிச் சாறு
நெல்லிக்காய்ச் சாறு ~~இ~~ந்தச் சாறு வகைக்
வகைக்கு படி-1 பசுவின் நெய், சிற்றா-
மணக்கெண்ணெய், நல்லெண்ணெய்
யிவை வகைக்கு படி-௨, பசுவின் பால்-
131) குறுணி யிவைகளும் ஒரு பெரிய சட்டியில்
வார்த்து சிறுக அக்கினியா யெரித்து
அதன் நாட்கள் காய்ச்சி பாகுபதத்தி
லிறக்கி வைத்துக் கொண்டு, யதுக்கு
சூர்க்க மருந்து- கடுக்காய் - பலம்-1, தான்றிக்-
-காய் - பலம்-௨, நெல்லிப் பருப்பு - பலம்-3
சுக்கு - பலம்-4, திப்பிலி- பலம்-5, மிளகு-
பலம்-6, அரத்தை - பலம்-8, கண்டுபாரங்கி-
பலம்-4, ஆனைத் திப்பிலி - பலம் - ௨,
ஏலம் - பலம்-3, நிலவேம்பு சுட்டச்சாம்பல்
வசம்பு சுட்டுச் சாம்பல், சிறுவழுதிலை விதை

கண்டங்கத்திரி விதை, திப்பிலி மூலம்
தாதுவளை விரை யிவை வகைக்கு பலம்3
சிவதைவேர் சூரணம்-பலம்-8, அமுக்கிராக்-
கிழங்கு சூரணம்-பலம்-12, நவாட்சாரம்
பலம்-12, வெண்காரம்-பலம்-2,
சீரகம்-பலம்-1 கருஞ்சீரகம்-பலம்-1
அக்கினி அதுதார்-பலம்-1, காஞ்டசோதி-
பலம்-2, அக்கராகாரம், வாய்விளங்கம்
கிராம்பு குஷ்டம், பெருங்காயம், வெந்தயம்
கருத்தோரணி யிவை வகைக்கு பலம்-1,
தாளிசபத்திரி பலம்-6 கொடிவேலி-பலம்-12,
இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி,
ஏலம், நாகேசரம், இலவங்கம், குறுவேர
செங்கழுநீர் கொட்டம், சடாமாஞ்சி யிவை
வகைக்கு பலம்-2 இவையெல்லாம்
கொண்டு வந்திடித்து சூரணம் பண்ணிக்
கொண்டு யாந்தப் பாலிலே கொட்டிக்
கிளறி யதுக்கு மேன்பொடி மருந்து-
கஸ்தூரி, இந்துப்பு, கோரோசனம் யிவை
வகைக்கு-பலம்-1 கொண்டு வந்து கல்வத்-
-தில் போட்டு அரைத்து பொடி செய்து
அம்பராணி பஸ்பம், சீந்தில் சக்கரை
வகைக்கு பலம்-1, லோக பஸ்பம்
அப்பிரக பஸ்பம், காந்தம் வேதகம், மண்டூரம்,

முத்துப் பஸ்பம், பவழ பஸ்பம், இரும்பு-
லோகம் யிவை வகைக்கு பலம்-3 யிவற்-
-றையுங் கல்வத்தில் போட்டு பொடி செய்து
யெடுத்து ரசாயனத்தில் தூவி மைமன்
பொடி குன்றி தேன் அத்தி பண்ணி கூட
வார்த்து ~~த்து~~ பிசைந்து ரசாயன பக்குவம்
பண்ணி மரு பாண்டத்தி லெடுத்து வாய்
கட்டி தானியபுடத்தி லொருமாதம் வைத்துக்
கொண்டு ~~இ~~ ரெண்டு வேளையும் வேளைக்கு
கழஞ்சு பிரமாணங் கொடுத்து வரத் தீரும்
வியாதி - திமிர்வாதம் 85 வகையும் வாத-
ரோகம் 84 வகையும் பித்தரோகம் 20
வகையும் குன்மம், க்ஷயம் 11 வகையும்
உமாதம் ~~சி~~லேஷ்மம், இத்திரிரோகம், பாண்டுவம்,
சோபை, காமாலை, கர்ண ரோகம், ~~சோ~~
சுரா சாரம், நேத்ர ரோகம், அக்கினிமாந்தம்,
அதிரண அரம், காசசுவாசம், [illegible]-
அரம், ~~இ~~ரத்தபித்தம், மேனிச ரோகம், முத்திக்-
கிரிச்சிரம், மேகவாய்வுகள், அஸ்தி சிரோவம்,
அலிமகம், சேர்மல ரோகம், கர்ப்பிணை
யோனி ரோகம் ~~யிது~~ முதலான சகல ரோகங்-
களும் தீரும்.

மகா ராஜேஸ்வரி ரசாயனம்

அமுக்கிராக்கிழங்கு, பேய்ப்புடல்,
ஆவாரம்பட்டை, மரமஞ்சள், அவரி வேர்,
ஆடாதோடை வேர், நொச்சி வேர்,
சீந்தில் தண்டு, நரிப்பயறு இவை வகைக்கு
பலம்-௨ கொண்டுவந்து நசுக்கித்
தொழித்து பெரிய பானையில் போட்டு
எட்டு மரக்கால் தண்ணீர் வார்த்து அடுப்பின்
வைத்து மெதுவாய் ஏழுநாட்கள் காய்ச்சி
கியாழம் நாலத்தொன்றாய் இருக்க வடிகட்டிக்
கொண்டு இதுவும் பாலுக்கு, தயார்-
இருநாழி கோதுரம் முன்னாழி, பசுவின்-
நெய்-அரைநாழி, நெல்லிக்காய்ச் சாறு,
கொள்ளுக்கட்டு, வாழைக்கட்டைச் சாறு
சிறுபயத்தஞ்சாறு, முக்காவேளைச் சாறு,
ரஞ்சிச் சாறு, முசுமுசுக்கைச் சாறு,
முடக்கத்தான் சாறு, சிறுகீரைச் சாறு
இவை வகைக்கு சாறு முன்னாழி -
இவையெல்லாம் கூட வார்த்து
சர்க்கரை - பலம்-௨ கூடப் போட்டுக்
கரைத்து வடிகட்டிக் கொண்டு அடுப்பின்
வைத்து மெதுவாய்க் காய்ச்சி பாகு
போலே வரும்போது இறக்கி வைத்துக்
கொண்டு இதுக்கு சேர்க்க மருந்து - சுக்கு
திப்பிலி, மிளகு, செவ்வியம், கொடிவேலி,

வேளைச்சாறு, வேளைவேர், லவங்கப்-
பட்டை, லவங்கப்பத்திரி, நாகேசரம்,
ஏலம், வங்கம், ஆனைத்திப்பிலி, செங்கழு-
நீர்க்கோஷ்டம், அகரச்சுக்கை, தேவ-
தாரிச்சக்கை, வெட்டிவேர் யிவை
வகைக்கு பலம்-2, சீரகம், கருஞ்சீரகம்,
நெய்ச்சின்கிழங்கு, தீவதாட்டிப்பழம், சடா-
மாஞ்சி, கோரைக்கிழங்கு, நல்லசந்தனம்,
அதிமதுரம், நிலப்பனைக்கிழங்கு, பூமிச்சக்க-
-ரைக்கிழங்கு, கன்னியாகுமரிக் கிழங்கு
யிவை வகைக்கு பலம்-1 யிவையெல்-
-லாம் கொண்டுவந்திடித்து சூரணம்
பண்ணி யாந்தப்பாகிலே கொட்டிக்கிளறி
கெட்டி பக்குவத்தில் அத்தி பண்ணின
தேன் - கூட வார்த்துக் கிளறி
ரசாயன பக்குவமா யெடுத்து தானியப்
புடத்தில் 15 நாட்கள் வைத்தெடுத்துக்
கொண்டு இரண்டு வேளையும்
வேளைக்கு மூன்று மாடை யிடை ப்ரமாணம்
ரசாயனமாய் கொடுத்து வரத் தீரும் வியாதி-
மேகத்து டுனை அதிகத்தாகம், பித்தத்தினாலே
வெட்டைவிட்டுத் திரிகிற பித்தக்கிறுகிறுப்பை,
காலெரிவு, கையெரிவு, தேகத்தின்
பேரில் அதிகத்தாகம், வெகுமூத்திரம்
அதிசாரம், வெகுவேர்வை, கடின மூத்திரம்,

மேகத்திமேன் நீர்க்கடுப்பு, நீர்மாங்கிஷை
மடைத்துக் கொண்டு நீர் கடுத்துக் கொண்டு
கொஞ்சங் கொஞ்சமாக நீர் விடுகிறதும்
132 பிரமேகம், ... இந்திரியம், சூரியநதும்
இரத்த பித்தம், புராணதம், வாதபித்த
சிலேட்டும சன்னி தோஷம், சீதசுர தோஷம்
நீர்சுரம் ஆறுவகையும் சந்நிபாதித்த
ரோகங்களும் இந்த தோஷங்களும்
மேட்டு வியாதி யனைவையெல்லாந் தீர்த்து
புத்திர சந்தான முண்டாகும். மகா உச்சித-
மான ரசாயனம்.

அசுவக்காந்தி ரசாயன மென்னும் லேகிய
ரசாயன மென்னும் பேர்

சிறுநாவல்பட்டை - பலம் - 300, சங்கம்
சிந்தில் தண்டு
பட்டை, முக்கத்தாப்பட்டை, இம்பல் பட்டை
முருங்கைப் பட்டை, வழுதிவேர், நொச்சிவேர்
பேய்ப்புடல், அத்திப் பட்டை, கண்டங்-
முக்காவேளை, காட்டாமணக்கு
கத்திரி, சிறுவழுதுணைவேர், நெல்லுருகும் பட்டை, பாதிரிவேர்
-கம்பவேர், முன்னைக் கிழங்கி
வில்வபத்திரி வேர், சித்திரக்கள்ளி வேர்
இலைக்கள்ளி வேர், ஆதண்டை வேர், நெடநெற்ம-
பிரண்டை
வேர், சிக்கிரான் பட்டை, பீச்சம் வேர்,

கொடிவேலி துத்திப்பட்டை, புங்கம்வேர்
சிகாதேவிவேர், விளாவேர், நிலவிளாம்வேர்
மிளகுசணைப்பட்டை, கடுக்காய், தான்றிக்காய்
நெல்லிப்பருப்பு, சீமுக்கொட்டை, சிறுகுறும்
-வேர், தூதுவேளை, கொட்டைக்கரந்தை
திருத்தண்டுவேர், கொன்னைதும்மட்டிவேர்
கிட்டிவிளாம்பட்டை, நல்லகிளாவேர்
பேய்கிளாவேர், நீர்முள்ளி உசர்வர்-
முள்ளி, பெருமபாங்கிழங்கு, தேவதாருச்சக்கை
நல்லகொத்தின்வேர், கடல்கொஞ்சின்-
-வேர், காரைப்பட்டை இவை வகைக்கு-
பலம்-20, பரங்கிச்சக்கை பலம்-150
இவையெல்லாம் கொண்டுவந்து நறுக்கித்
தொழுத்திப் பெரிய பானைகளில் போட்டு
64 மரக்கால் தண்ணீர் வார்த்து அடுப்பில்
வைத்து மெதுவாய் வேகநாள்கன் காய்ச்சி
பலம் 150 எட்டிலொன்றா யிருக்க
வடிகட்டிக் கொண்டு யாவும் பழவெல்லம்
பலம்-705 கியாழத்தில் போட்டுக்கரைத்து
வடிகட்டிக் கொண்டு மறுக்கா அடுப்பில்
வைத்துக் காய்ச்சி பாகுபதத்தில் வரும்-
போது யாவுக்கும் பாகுபாகம் சீனா-
மணக்கெண்ணெய் பசுவின்நெய், நல்லெண்-
-ணெய் இவை வகைக்கு பலம்-20,
தயிர் குந்தணி, மைசாட்சி, கிச்சிலி -
பலம்-64 இவையும் கூடவிட்டுக் கிளறிக்

கொடுத்துப் பாகுபோலே வரும்போது யிதுக்கு
காரக மருந்து - அரத்தை, திப்பலி மூலம், செங்-
கழுநீர் கோஷ்டம், செவ்வியம், சித்திர மூலம்,
அ. சுக்கு, வேங்கைப் பட்டை ஓமம், மிளகு,
மரமஞ்சள், ஆமணக்கம் வேர், கடுக்காய்
சீந்தில் தண்டு, மாவிலிங்கைப் பட்டை, அரு-
வெள்ளை வேர், .. சுக்கு .. , திப்பலி ஏலம், -
வேங்கைப் பத்திரி யிவை வகைக்கு பலம் -4
கொண்டுவந்திடித்து சூரணம் பண்ணி யிந்தப்
பாகிலே கொட்டிக் கிளறி கெட்டி பக்குவத்தில்
இறக்கி வைத்துக் கொண்டு சுத்தி பண்ணின
தேன் படி -1 விட வார்த்துக் கிளறி ரசா-
-யன பக்குவம் பண்ணி மண்பாண்டத்தி-
லெடுத்து வாய்கட்டி தானிய புடத்தில் வொரு
மாதம் வைத்தெடுத்துக் கொண்டு இரண்டு
வேளையும் வேளைக்கு மூணு மாடையிடை
ரசாயனம் கொடுத்து வரத் தீரும் வியாதி-
லிங்க ரோகம், யோனி தோஷம், விரணரோகம்
சிங்க வாதம், இரத்த வாதம், சூலைக்கட்டு-
வாதம், உஷ்ணப் பிரமேகம், மதுப்-
பிரமேகம், இரத்தப் பிரமேகம், மேகரணங்கள்
யிவையெல்லாம் தீரும் இதுக்கு பத்தியம்
காவிச்ச, புளிப்பு தள்ளவும். கடுசாரங்களைத்
தள்ளவும்.

வாசாதி கெந்தக அமிர்த ரசாயனம்

அமிர்தசிலாகெந்தகம் - பலம் - 50 கொண்டு வந்து பொடி செய்து அரைத்துக் கொண்டு மாதுளச் சாறு - ஆடாதொடை இலைச்சாறு மருள்கிழங்குச் சாறு, தண்ணீர்விட்டான் கிழங்குச் சாறு, ஊமத்தை இலைச் சாறு, தாழம் விழுதுச் சாறு, கற்றாழை மடல் சாறு, ஆமணக் கிலைச் சாறு, கரிசலாங் கண்ணிச் சாறு, முசுமுசுக்கைச் சாறு, எருக்கம் பழுப்புச் சாறு, தக்காளி இலைச் சாறு, இளநீர், புளியிலைச் சாறு, பச்சை மஞ்சள் சாறு, பசுவின் நெய், பசுவின் பால் இந்த சாறுகள் வகைக்கொரு நாள் முறை சட்டியில் வார்த்து சட்டியாய் மேலே சீலை வேடுகட்டி அதன் மேலே கெந்தகத்தை வைத்து மேல் சட்டி கொண்டு மூடி ஏழு சீலைமண் செய்து பள்ளத்தில் சட்டியை வைத்து மேல் சட்டி தெரியப் புதைத்து மேல் சட்டி மேலே இக்கிடப் புடத்துக்கு விராட்டி அடுக்கி தீமூட்டி விடவும். இது உள்ளைத்தப்புடம் இப்படி இந்தச் சாறுகளில் வகைக்கொரு புடம் போட்டு எடுத்துக் கொண்டு மறுகாலந்த கெந்தகத்தைக் கல்வத்தில் போட்டு அரைக்கும் போது திரிபலைக் கியாழத்திலும் பொன்னாங்காணிச் சாற்றிலும் தேள்கொடுக்கிலைச் சாற்றிலும் நிலப்பனை சாற்றிலும் கரிசாலை [illegible]

சாற்றிலும் உத்தாமணிச் சாற்றிலும் புளியம்-
இலைச் சாற்றிலும் நொச்சியிலைச் சாற்றிலும்
வல்லாரையிலைச் சாற்றிலும் இலுப்பம்பட்டைச்
133. சாற்றிலும் கொடிமாதளம்பழச் சாற்றிலும்
கண்டங்கத்திரிச் சாற்றிலும் சிறுவழுதுணைச்
சாற்றிலும் நீர்முள்ளிச் சாற்றிலும் கருசிலாங்-
கண்ணிச் சாற்றிலும் செப்புநெருஞ்சில் சாற்றிலும்
கீழ்மாறு வைத்திலை (கழ்மாறு வைத்திலை)ச்
சாற்றிலும் செருப்படைச் சாற்றிலும் காக்கி-
ணாணிலைச் சாற்றிலும் சிறுகம்வேர்ப்பட்டைச்
சாற்றிலும் மொடக்கத்தான் சாற்றிலும்
காட்டுவகைப்பட்டைச் சாற்றிலும் பேய்ப்-
புடோல் சாற்றிலும் வில்வப்பத்திரிவேர்ச்
சாற்றிலும் ஏந்தச் சாறுகளில் வகைக்கு
ஒருநாள் வார்த்தரைத்து சூரியபுடத்தில்
வைத்தெடுத்து கழுவைப் போடக் கெந்தகம்
சுத்தியாகும். இப்படி சுத்தி பண்ணின
கெந்தகம் - பலம் - ௨௰, வங்கப்பட்டை
வெங்கப்பத்திரி, நாகேசரம், ஏலம், லவங்கம்
சீரகம், கருஞ்சீரகம், ஓமம், குரோசாணி-
ஓமம், செங்கழுநீர்க் கோஷ்டம், அரத்தை
நல்ல சந்தனம், அகரச் செக்கை, கடுக்காய்
தான்றிக்காய், நெல்லிப்பருப்பு, சுக்கு, திப்பிலி,
மிளகு, சிறுசித்திரி, அக்கராகாரம், வாய்-
விளங்கம், தக்கோலப் பொடி, ஜடாமாஞ்சில்
ஆனைத்திப்பிலி, அங்கோலவிதை, பருத்திக்-

கொட்டைப் பருப்பு, சீமைக் கொட்டைப்
பருப்பு, எவாட்சாரம், சத்தி யெவாட்சாரம்
விடாலவணம், சயிந்தலவணம், சவர்ச்ச-
லவணம், காசீச லவணம், உத்பி லவணம்
வெண்காரம், கற்பூரசிலாசத்து, கிரந்திதாகம்
சிவதை வேர் (?) கடுக்கீலக்காய், அமுக்கிரக்-
கிழங்கு, சிறுபீச்சுக்கை, மான் கொம்பு
கலைமான் கொம்பு, ருத்திராட்சம், நன்னாரி-
வேர், மயிலிறகு சுட்டச்சாம்பல், கோரோசனம்
காவட்ட ஜோதி, சேரிரம் பதிவிதை, ~~கொடுப்~~ சடசுப்-
பாணைவிதை, ~~இசம்பர~~ கிலவங்கப்பூ, திப்பலி மூலம்
தேன்பாவிதை யிவை வகைக்கு வராகனிடை 3
கொண்டு சுத்திபத்தி சூரணம் பண்ணிக்
கொண்டு கந்தகத்தையும் பொடி செய்து
கூடக்கலந்து கல்வத்தில் போட்டு மகா
வில்வாதி கியாழம் வார்த்து ஏழுநாட்களரைத்து
எட்டாம் நாள் வேப்பங்காய் போல வடமாகத்
திரட்டி நிழலிலே யுலர்த்தி யெடுத்து வைத்துக்
கொண்டு ரோகியின் தேகபலனைத் தானியப்
அ- பத்தியிலொருமாதம் சவத்தைநோக்கிக் கொண்டு
யந்த மருந்து சாப்பிடு முன்னே அப்பியங்கனம்
வமனம், விரேசனம் யிதுமுதலான சோதக
ஆதிகளைப் பண்ணிக் கொண்டு . . . . .
. . . . வேளைக்கொரு வடகம் அனுபான
விசேஷத்தில் சர்க்கரையினாவது தேனினாவது
நெய்யினாவது பசுவின்பாலினாவது வெள்-
ளாட்டுப் பாலினாவது யிவைகளில் அனுபானம்

காய்த்துக் கொடுத்துவரத் தீரும் வியாதி-
தொந்த ரோகங்களும் பிளேமம், புத்திரோகங்-
-களும் சூலை, குன்மம், அக்கினி மாந்தம்,
அருசி, மருந்தீடு, பேபாதரணம், வேதைகள்
மூலரோகம், அசீரணம், காசசுவாசம்
சோபை, க்ஷயப் பாண்டு, காமாலை,
பீனிச ரோகம், க்ஷதிய பாகம் யிவைமுதலான
ரோகங்களெல்லாந் தீரும். அரைமண்டலங்
கொள்ளத் தீபனமுண்டாம். கழிச்சல்
கட்டும், திரேகபுஷ்டியுண்டாம், ஒரு
மண்டலங் கொள்ள குஷ்ட ரோகம்-18
வகையும், வாதரோகம் 84 வகையும் பீனிச
ரோகம்-18 வகையும் கண்ட ரோகங்களும்
கண்டமாலையும் க்ஷய ரோகம் -11 வகையும்
நானாவித ரோகங்களும் பித்தரோகம்
24 வகையும் சிலேஷ்ம ரோகம் 20 வகையும்
மேகம் 20 வகையும் அஸ்தினி ரோகங்களும்
நாசிரோகம் அத்தி மேக ரோகங்களும்
பகந்தர ரோகங்களும் கிருமி ரோகங்களும்
யிதுமுதலான வியாதியெல்லாந் தீரும்.
பலமுண்டாம், வீரிய வார்த்தியுண்டாம்
சித்துவமுண்டாம், மோகக்களையுண்டாம்,
புத்தியுண்டாம். இரண்டு மண்டலங் கொள்ள
அஷ்டைசுவரியந் தீரும் மூன்று மண்டலங் கொள்ள
ஞான புத்தியுண்டாம். தெய்விய சந்தியை-
-யுண்டாம்.

சகல ரோகங்களும் நிவாரணமாகப் போம்.
இப்படி மண்டல விருத்தியாகக் கொள்ள
மண்டலத்துக்கு சதுர்ண மண்டலம் அதிக-
மாக வர்த்திக்கும். ஆரோக்கிய தேகமாய்
சிரஞ்சீவியாய் வாழ்வார்.

இந்த கெந்தக ரசாயன வடகத்துக்கு

மகா வில்வாதி கஷாயம்

வில்வப்பஞ்சகம், தேவதாரிச்சக்கை
சாறுவேளைவேர், பேய்ப்புடல், கீழாநெல்லி
பற்படாகம், பெருங்காஞ்சொறிவேர்
நன்னாரிவேர், கண்டுபாரங்கி, நெருஞ்சி-
134 -வேர், கோரைக்கிழங்கு, அமுக்கிறாவேர்
சிற்றாமுட்டிவேர், பேராமுட்டிவேர்,
கொத்தமல்லி, சுக்கு, நிலவேம்பு சீந்தித்தண்டு
நோய்கள் மொறுக்கள் கைகால் வாய்வு, நீர்க்-
மேகரணங்கள், மேகம் எல்லாந் தீரும். பத்தியம்-
கடுப்பு யிவைகளெல்லாந் தீரும். கண்டம்
கோழிக்கறி, வெள்ளாட்டுப்பும் பருப்பு, கத்தரிப்-
வெள்ளாட்டு புளி, துவரம் அவரைக்காய் கூட்டுக்
பிஞ்சு, பீர்க்கம் பிஞ்சு,
கொள்ளவும்.

தூட்சிறி சூரணம்

150. சிவதார்ச்சிப் பழம், பொரி அரிசி, அதிமதுரம்,
பேரீச்சம் பழம், நன்னாரிவேர், தவசு...,
வெட்டிவேர், நெல்லிப் பருப்பு, கோரைக்கிழங்கு,

சந்தனம், தக்கோலம் போட்டு சாதிக்காய், ஏலம்,
லவங்கப் பட்டை, லவங்கப் பத்திரி, திப்பலி,
கொத்தமல்லி யிவை வகைக்கு பலம் - ௪ கொண்டு
வந்திடித்துச் சூரணம் பண்ணிக் கொண்டு யிந்தச்
சூரணத்துக்கு பாதி சக்கரை கூடக் கலந்து
வைத்துக் கொண்டு அந்திசந்தி வேளைக்கு
மூணு மாடை யிடைச் சூரணம் யெடுத்துத்
தேனில் கொடுத்துவர பாண்டு, வெள்ளோக்-
-காளம், கோரம், சுயபாருமன், மேகம், பாந்த-
வாய்வு, அக்கினிமாந்தம் யிவைகளெல்லாந் தீரும்.

தாளகக்கினிச் சூரணம்

ஏலம், பெருங்காயம், வாய்விளங்கம்,
பஞ்சலவணம், சுக்கு, திப்பலி, மிளகு, திப்பிலி-
மூலம், கொரைக்கிழங்கு, கண்டுபாரங்கி, சித்திர-
மூலம், கருஞ்சீரகம், சீரகம், கொடசப்பாலைப்-
-பட்டை, செங்கலவு, கோஷ்டம், திருவழுதிலைப்-
வேர், வட்டத்திருப்பி, சிவதைவேர் - பலம் - 4,
கடுக்காய் - பலம் - ௨ மத்த மருந்தெல்லாம் வகைக்கு
பலம் - 3 கொண்டுவந்திடித்துச் சூரணம் பண்ணிக்
கொண்டு யிதில் சீனிக்கரை - பலம் - ௨0 கூட்டப்
போட்டுக் கலந்து வைத்துக் கொண்டு திரிகடி-
-மாறு தேனில் கொடுத்து வரவும். அந்திமாறு
வெந்நீரில் கொடுத்து வரவும். வேளைக்கு
மூணு மாடை யடை பிரமாணம் கொடுத்துவரவும்.
வாதகுன்மம், விக்கல், வாந்தி, அக்கினி மாந்தம்
யிவை யெல்லாம் தீரும்.

சந்தனாதிச் சூரணம்

சந்தனம், அதிமதுரம், கிச்சிலிக்கிழங்கு, செங்கழுநீர்க்
கோஷ்டம், ஜாதிமந்திரிப்பழம், பேரீச்சம் பழம்.

ஸ்ரீ

புளியம்பைப் பூவு, விளாமிச்சம் வேர், நெல்லிப்பருப்பு
சீக்கிரை யிவை சமனெடைச் சூரணம் பண்ணி
சீனிக்கற்கண்டு கூடக் கலந்து கொண்டு இடைமாறு
கழஞ்சு பிரமாணம் சூரணமருந்தி பச்சரிசிக்
கழுநீரில் கலந்து குடித்துவரத் தீரும் வியாதி-
மேகம்; முகவெரிவு, உடம்பெரிவு, காலெரிவு,
கையெரிவு இவையெல்லாந் தீரும்

வச்சிர வல்லிச் சூரணம்

அ. பிரண்டைக்கிழங்கு, இரோசாணி சூடம்
சுக்கு, திப்பிலி, சூடம், வெங்காரம் இவை வகைக்குப்
பலம் -2 இவையெல்லாங் கூட்டி இடித்து எருக்கிலை
[illegible] தைத்து இந்தமருந்தெல்லா மதில் வைத்து தைத்துக்
கட்டி இப்பை மேட்டில் புதைத்து எட்டு நாட்கள்
பொறுத்து எடுத்துலர்த்தி பொடித்துச் சூரணம் செய்துக்
கொண்டு இரண்டு வேளையும் வேளைக்கு
பராகனிடைச் சூரணம் எடுத்து வெந்நீரில்
கொடுத்துவரத் தீரும் வியாதி அசீரணம், அம்பல-
பித்தம், புளியேப்பம், மார்நோவு, பக்கசூலை,
விலாச்சூலை, அக்கினிமாந்தம், உஷ்ணவாய்வு,
மூலவாய்வு, மேகவாய்வு, பித்தவாய்வு, கொறுக்-
வாய்வு இவையெல்லாந் தீரும். பிச்சாபத்தியம்.

சிலவிஷச் சூரணம்

பேய்த்தும்மட்டி வேரும் விதையும் பேச்சுரை
வேரும் விதையும் பேய்ப்பீர்க்கம் வேரும் விதையும்
பேய் மிரட்டி வேர், கழற்கொடி வேர், பெருங்கிழங்கு,
சிறுகுறிஞ்சான் வேர், சிறுதேக்கு வேர், அவுரிவேர்ப்பட்டை,
மாவிலிங்கை வேர்ப்பட்டை, வெள்ளெருக்கம்-
வேர்ப்பட்டை, வாய்விளங்கம், செங்கத்தாரி-

வேப்பம்பட்டை, கருஞ்சீரகம், கடுக்காய், நாவல்-
பட்டை, அழிஞ்சில்பட்டை, யிருப்பைக் கட்டு-
பிரண்டை, நிலவாகும் யிவையெல்லாஞ் சமன்
கூட்டி பொடித்து சூரணம் பண்ணி பேய்ச் சுரைக்காய்
குடுக்கையி லடைத்து வைத்துக் கொண்டு நல்ல-
பாம்பு விஷத்துக்கு யிந்த சூரணம் வராகனிடை
யெடுத்து காடியாவது தெளிந்த தண்ணீராவது
கலந்து கொடுக்க நல்ல பாம்பு விஷம் மீளும்.

அசுவ கெந்தாதிச் சூரணம்

அமுக்கிராக்கிழங்கு - பலம் - 10, திப்பிலி, சுக்கு,
மிளகு, ஏலம், கொத்தமல்லி, வாய்விளங்கம்,
கஸ்தூரி மஞ்சள், சிவதைவேர்ப்பட்டை, அரத்தை
லவங்கம், பத்திரி, ஜெயம் யிவை வகைக்கு
பலம்-உ, பஞ்சலவணம் - பலம் - 2 ஐ, கோரோ-
சனம், கடுகுரோகணி, [illegible], கருஞ்-
சீரகம் யிவை வகைக்கு பலம்-1, சித்திரமூலம்,
15) தாளிசபத்திரி, லவங்கப்பட்டை யிவை
வகைக்கு பலம்-1, சாதிக்காய் வராகனிடை-1
லவங்கம் - வராகனிடை-1 யிவைகளெல்லாம்
கொண்டு வந்திடித்துச் சூரணம் பண்ணிக் கொண்டு
அதில் சர்க்கரை - பலம்-6 கூடக் கலந்து
வைத்துக் கொண்டு இரண்டு வேளையும் வேளைக்கு
[illegible] மாடை யிடைச் சூரணம் கொடுத்துவரத்
தீரும் வியாதி - மேகம், நீர்ச்சுருக்கு, பித்தக்
கிறுகிறுப்பு, மார்நோவு, இருமல், சுரம், யிடுப்புநோவு
மேகவாய்வு, புளியேப்பம், அக்கினிமாந்தம், கெர்ப்ப-
சூலை, கெர்ப்பவாய்வு யிவைகளெல்லாந் தீரும்.
யிச்சாப் பத்தியம் - கசப்பு, புளிப்பு, தவிர்ப்பும்.

இ

பெருவியாதிக்கு விஷகடிகளுக்குஞ் சூரணம்.

அறுபது வருஷத்து வேப்பம் வேர்ப்பட்டை, எண்பது வருஷத்து அழிஞ்சில் வேர்ப்பட்டை - பலம் நாற்பது வருஷத்து புங்கம் வேர்ப்பட்டை - பலம், சிவனார் வேம்பு சமூலம் - பலம் நன்னாரி யிவையும் வெவ்வேறு காயவைத்து இடித்துச் சூரணம் பண்ணி சரியாக நிறுத்து ஒன்றாகக் கலந்து புதுக் கலசத்தில் வைத்துக் கொண்டு இருபொழுதும் இரண்டு வராகனிடை தாளி ஒழுக்கொடு அறுபது நாட்கள் தேனில் சாப்பிடவும். பெருவியாதி, குஷ்டம், விஷகடி யெனப்பட்டதெல்லாந் தீரும். யிதுக்குப் பத்தியம் - உப்பு, புளிப்பு, கடுகு யிவை தவிரவும். வேப்பம்பட்டையை மாத்திரம் வெள்ளாட்டுக் கோமியத்தில் ஊறப் போட்டுக் ஊட்டிக் கொள்ளவும்.

கடிகளுக்கும் விஷங்களுக்குஞ் சூரணம்.

சீரடிமுத்து, கார்போகவிதை, மஞ்சள், சேங்கொட்டை, வெள்ளுள்ளி, முக்காவேளை யிவை வகைக்கு பலம் -10 கொண்டுவந்து இவற்றை வெவ்வேறாக வைத்துக் கொண்டு சேங்கொட்டையை மேல் தோலை வாங்கிப் போட்டு சுத்தி பண்ணி பொடி செய்து கொள்ளவும். வெள்ளுள்ளியை உரித்துக் கொண்டு வைத்துக் கொள்ளவும். முக்காவேளையைச் சூரணம் பண்ணிக் கொள்ளவும். யிவற்றை யெல்லாய்க் கல்லுரலிலே போட்டிடித்துத் தொகுத்து வைத்துக் கொண்டு இரண்டு வேளையும் வேளைக்கு மடையிடை யாவது வராகனிடையாவது கொடுத்து வரவும்.

அ: இப்படி நாற்பது நாட்கள் கொள்ளத் தீரும் வியாதி - கடிவகைக்கோடு உடனேதென்னாந் தீரும்.

திமிர் வாய்வுக்குச் சூரணம்

வேப்பம்பிஞ்சு, அக்கி, திப்பலி, மிளகு, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிப்பருப்பு இவை சமன் கூட்டி இடித்துச் சூரணம் பண்ணி வைத்துக் கொண்டு இரண்டு வேளையும் வேளைக்கு மண்டையிடைச் சூரணம் தேனில் கொடுத்து வரவும். இப்படி நாற்பது நாட்கள் கொடுக்கத் திமிர் வாய்வோடே உடனேதென்னாம் போம். இந்தச் சூரணம் மாட்டுக்கு இட்டுவர மாட்டுவாதந் தீரும்.

உரி - 672 பக்

சூலைக்கட்டுக்கு ஓமச் சூரணம்

ஓமம் - 2 கிராம் கொண்டு வந்து புதுச் சட்டியில் போட்டு இதுக்கு இச்சாறு - கருஞ்சீரகங் கண்ணிச் சாறு பிழிந்து பிசறி நிழலிலே உலர்த்தி ஆறவைக்கவும். இப்படி அஞ்சு நாட்கள் சாறுவிட்டுப் பிசறி நிழலிலே ஆற வைத்து பிறகு வெய்யலிலே உலர்த்தி இடித்துச் சூரணம் பண்ணிக் கொண்டு இந்தச் சூரணத்தில் பாதி எடுத்து வைத்துக் கொண்டு இந்தப் பாதியில் அரைக்கழஞ்சு (5 கிராம்) - 3 அம், கருப்பட்டி நூக்கு உட்படப் போட்டு பிசைந்து உருண்டை செய்து வேறு பொழுது தின்னவும். அல்லது வெள்ளைவெண்ணீரில் கலந்து கொடுக்கவும். அஞ்சு நாட்கள் சென்ற பிறகு வெந்நீரில் உடம்பு குளிக்கவும். தலை முழுகவும். இதுக்குத் தீரும் வியாதி - சூலைக்கட்டுகள் தீரும். பத்தியம் - உப்பு, புளி தள்ளவும்.

மத்தபாதி சூரணத்தை யெடுத்து வெள்ளைக்கு
மாலை யண்டைச் சூரணம் வென்னீரில் கொடுத்துவரத்
தீரும் வியாதி - வயத்து நோவுகள், இன்மாவுகள்
அசீரணம் யாவை தீரும்.

கிரந்தி வியாதிக்கு கல்லுப்புச் சூரணம்,

ஆடுதின்னாப்பாளை பெரும்பா சமூலங் கொண்டு
வந்து நிழலிலே உலர்த்தி யெடுத்து பலம்-10, கல்லுப்பு-
பலம்-4, ஆடுதின்னாப்பாளையை யிடித்துச் சட்டி-
-யில் பரப்பி அதின்மேல் கல்லுப்பைப் பரப்பி
அதின்மேல் ஆடுதின்னாப்பாளையைப் பரப்பி
மேல்சட்டி கொண்டு மூடி சீலைமண் செய்து
அடுப்பில் வைத்து மெதுவா நெருப்பெரித்து
சாங்க சீதளமாக ஆறவிட்டு எடுத்து அரைத்து
வைத்துக் கொண்டு வெள்ளைக்கு வராகனிடைச்
சூரணம் எடுத்து பசுவின் நெய்யாலரைத்துக்
கொடுத்து வரவும். இந்தச் சூரணம் பெண்பிள்ளை-
களுக்கு மாதவிடையாள் மாதத்தில் கொடுக்காது
மறுமாதவிடையில் மருந்தை விடவும். யாதுக்கும்
தீரும் வியாதி - கிரந்தி தொடைவாழைகள், கிரந்தி வாய்வு,
கிரந்திக்கட்டிகள், கிரந்திப்பூச்சிகள், கிரந்தத்தில்-
பறக்கின்ற வியாதியெல்லாந் தீரும். கிரந்தி-
முண்டாம். ஆண்பிள்ளைகளுக்கு இச்சூரணத்தை
வென்னீரில் கொடுத்துவரத் தீரும் வியாதி - அசீரணம்
அசீரணச்சூலை, பக்கசூலை, வரிசூலை, கல்லைக்
கட்டிகள், வயத்தில் பறக்கின்ற வியாதியெல்லாந்
தீரும். யாதுக்கும் பத்தியம் - தவிர்க்க, புளிப்புத்
தவிரவும்.

பதினொரு உப்புச் சூரணம்.

பரங்கிச்சக்கை - பலம் 15 கொண்டு வந்து இடித்துச்
சூரணம் பண்ணி வைத்துக் கொண்டு ஒரு முழுப்
புதுச்சீலை கொண்டு வந்து இதுக்குச் சாறு
வகைகள் - ஆவாரையிலைச் சாறு, நுணாயிலைச் -
சாறு, செருப்படைச் சாறு, கொட்டைக்கரந்தைச் -
சாறு, முசுமுசுக்கைச் சாறு, நொச்சியிலைச் சாறு,
வெள்ளறுகிச் சாறு இந்தச் சாறுகள் வகைக்கு
உழக்கு யாவும் வெல்லாம் ஒரு சட்டியில் வார்த்து
இந்தச் சீலையைத் தோய்த்து நிழலிலே உலரப்
போடவும். இப்படி ஆறுதரம் தோய்த்து நிழலுலர்த்தி
வைத்துக் கொண்டு இதுக்குக் கடை மருந்து
கெந்தகம் - பலம் - 1/4, பால்துத்தம் வராகனிடை - 3/4
மயில்துத்தம் - வராகனிடை - 1, காந்தம் - பலம் - ௫
வெண்காரம் - பலம் - ௨, வெள்ளைக்குங்கிலியம் -
பலம் - ௨, அக்கிராகாரம், அதிமதுரம், காரை-
வேர்ப்பட்டை, கொடிவேலி வேர், ஆத்தண்டைவேர்
சங்கம்பட்டை இவை வகைக்கு பலம் - ௨, 1/4
சாதிக்காய் வராகனிடை - 1, சாதிபத்திரி - வராக-
னிடை - 1, லவங்கம் - வராகனிடை - 1 இவை-
யெல்லாம் பொடி செய்து அந்தச் சீலையில் போட்டு
வத்தியாகத் திரித்துக் கட்டி நல்லெண்ணெய்
உழக்கு, இந்த எண்ணெயில் தோய்த்துக் கொளுத்தி
கறுப்பு நெல்லுமி படி - 1, இந்த உமியில் தயிலம்
விழப்பிடித்து பாகு வத்தி எரிந்த புடமாய்
கூடப் பிசைந்து இந்த உமியைப் பதினொரு பங்கு
செய்து கொண்டு பாதி ஒரு கெண்டிச் சட்டியி-
லொரு பங்கு உமியைப் போட்டு அந்தக் கெண்டிச்
சட்டியின் வாய்க்கு மெல்லிய சீலை வேடு
கட்டி வேடுமேலே சூரணத்தை வைத்து மேல்சட்டி

கொண்டு மூடி சீலைமண் செய்து அடுப்பின் வைத்து மெதுவாய் விளக்குப் போலே ஒரு சாமம் எரித்து சாங்க சீதளமாக ஆறவிட்டு எடுக்கவும். இப்படி பதினொரு உப்பையும் போட்டு புதுப்பல்லாக்கையில் போட்டு வாய்கட்டி வைத்துக் கொண்டு இரண்டு வேளையும் வேளைக்கு வராகனிடை கொடுத்து வரவும். இப்படி இருபத்தொரு நாள் கொடுக்கத் தீரும் வியாதி - கபால்சூலை, மேகசூலை, உள்மாந்தை, கொறுக்கைவாய்ப்புற்று, கிரந்திப்புண், சேத்தை இப்படிப்பட்ட சர்வ ரோகங்களும் தீரும். பத்தியம் - பால், மோர், தயிர், நெய் இவை தவிரவும். கோழி கருந்து, ஆட்டுத்தலை, எண்ணெய், புண்ணாக்கு, கருவாடு, துவரம்பருப்பு, முருங்கைப்பிஞ்சு, மாங்காய்ப்பிஞ்சு இவை விட்டுக் கொள்ளவும்.

எழுப்பைச் சூரணம்

பரங்கிச் சக்கை - வீசை - 1 கொண்டு வந்து இடித்துச் சூரணம் பண்ணிக் கொண்டு மூன்று முழக் கோடிச் சீலை கொண்டு வந்து மூன்று பங்காய்க் கிழித்து அவரையிலைச் சாற்றில் ஏழுதரம் தோய்த்து ஏழுதரம் உலர்த்திக் கொள்ளவும். செருப்படைச் சாற்றில் ஏழுதரம் தோய்த்து ஏழுதரம் உலர்த்திக் கொள்ளவும். தும்பையிலைச் சாற்றில் ஏழுதரம் தோய்த்து ஏழுதரம் உலர்த்திக் கொள்ளவும். இப்படி மூன்று பங்கு சீலையும் மூன்று வகைச் சாற்றில் வெவ்வேறாய்த் தோய்த்து ஆறப் போட்டெடுத்து வைத்துக் கொண்டு இதுக்கு

பிதுக்குக் கற்ப மருந்து – கெந்தகம், மயில்துத்தம்,
பால்துத்தம், வெள்ளைக் குங்கிலியம் யிவை
வகைக்கு பலம் – 1, லவங்கம், சாதிக்காய்,
சாதிபத்திரி யிவை வகைக்கு பலம் – ௨ யிவை
யெல்லா மிடித்துப் பொடிசெய்து யிந்த மூன்று
பங்கு வகை சீனியும் சேர்ப்ப யிந்த மருந்தைப்
போட்டுச் சேர்ப்ப யிரும்புச் சீனாக்கின் சித்தி
நல்லெண்ணெய் – படி – ௨ யள் தோய்த்துக் கொளுத்தி
பிதுக்கி மணைக்கத்தை நெய் – படி – 1, கொடுக்கொவ்வோர் –
பலம் – ௫, கோரை கோர் – பலம் – ௫, நிலக்கடம்பட்டம் –
153. பட்டை – பலம் – ௫, சங்கம் பட்டை – பலம் – ௫
யிவையெல்லாம் ஒருமையாக் குழைய யிடித்து
வாரியெடுத்து யிந்தத் திரியைக் கொளுத்தி சுவாலம்
பொடியின் ஊழைப் படுத்தி யிவையெல்லாம் யேக-
மாய்ப் பிசைந்து யெரிந்த திரி புஞ்சியுங் கூட்டிப்
பிசைந்து யேழு பங்கு செய்து வாயகண்ட பானையில்
லொரு பங்கு மருந்தை வைத்துப் பானையில்
சீலைகட்டி சீலையின் மேல் ராங்கிச் சிக்கையை
சூரணத்தை யிட்டு மேல் கட்டி கொண்டு மூடிச்
சீலைமண் செய்து அடுப்பில் வைத்து மெதுவா-
யொருசாமம் எரித்து ஆறிய சீதளமாக ஆற-
விட்டு யெடுக்கவும் யிப்படி யெழு புடம்
போட்டெடுத்துக் குடுவையில் சூரணத்தைப்
போட்டு காற்றுப் புகாமல் வாய் கட்டி வைத்துக்
கொண்டு இரண்டு வெண்ணெயும் தேனைக் கொரு
வேளைக்கிடை கொடுத்து வரவும். இப்படி இருபது
நாட்கள் கொள்ளத் திரும்பியாதி – மேகச்சூலை
மேகரணங்கள் கிரந்தி வாய்வு, சூலைக்கடுப்பு,

சகல சூரணங்களுந் தீரும். இதுக்குப் பத்தியம் -
நல்லெண்ணெய் புண்ணாக்கு, கசப்பு பண்டங்கள்
கூட்டிக் கொள்ளவும். பால், நெய், தயிர்
இவற்றைத் தவிர்க்கவும்.

[illegible]

இருப்பைச் சூரணம்

அரைக்கீரை பாங்கிச் சக்கை இடித்துச்
சூரணம் பண்ணிக் கொண்டு ரசம், அதிதாரம்
மனோசிலை, [illegible] கெளிகம், பால்துத்தம், மயில் -
துத்தம் இவை வகைக்கு விராகனிடை - 1
கெந்தகம் வராகனிடை - 2, வெள்ளைக் குங்கிலியம்
விராகனிடை - 4 இவற்றைப் பொடி செய்து
வைத்துக் கொண்டு அவரையிலைச் சாறு -
பிழிந்து அதின் எண்ணெயைச் சாமர்பத்திச் -
சீலை தோய்த்து நிழலிலே போட்டு இப்படி ஏழு
தரம் தோய்த்து எழுதரம் நிழலில் உலர்த்தி எடுத்துச்
சீலையை விரித்து இந்த மருந்தை லேசாய்
சீலையின் பரப்பி வத்தி[illegible] திரித்துக் கட்டி
கல்லாடு ஆமணக்கெண்ணெயில் நனைத்து
விளக்கில் கொளுத்தி கருகச் அட்டையெடுத்து
ஏழு பாகம் செய்து பாணைக் கல்லை திரி
மருந்தைப் போட்டு அது மேலே மெல்லிய சீலை
இடு கட்டி மேலே பாங்கிச் சக்கைச் சூரணத்தை
வைத்து மேல் சட்டி கொண்டு மூடி சீலைமண்
செய்து அடுப்பில் வைத்து மெதுவாய் ஒரு ஜாமம்
எரித்து சாங்க சீதளமாக ஆறவிட்டு எடுத்து

அ. இப்படி ஏழுபுடம் போட்டெடுத்து புதுக்குடுவை-
-யில் போட்டுக் காற்றுப் புகாமல் வாய்கட்டி
வைத்துக் கொண்டு இரண்டு வேளையும் தேனைக்
கால் பங்கு சூரணம் சாப்பிடவும். இப்படி இருபத்-
தொருநாள் சாப்பிடத் தீரும் வியாதி மேகங்களை
குஷ்டம் வியாதி பதினெட்டு வகையும் சகல
சிரணங்களும் சகல இணைகளும் சகல
கட்டிகளும் தீரும். இதுக்குப் பத்தியம் -
எண்ணெய், புண்ணாக்கு, பாகற்காய், புளிப்பு,
உப்பு இவை தவிரவும்.

அய்ங்காயச் சூரணம்

திப்பிலி - பலம் - 2, மிளகு - பலம் - 2, சீரகம் - பலம் - 2
கடுக்காய்த்தோல் - பலம் - 1, அக்கு, கருஞ்சீரகம்,
குரோசாணி ஓமம், லவங்கம், சாதிக்காய், சாதி-
பத்திரி, மஞ்சள், தேத்தான் கொட்டை, மாசிக்காய்,
அதிவிடயம், வெட்பாலைப்பட்டை, வெட்பாலை-
அரிசி, கம்பப்பசின், இலவங்கப் பிசின், புளியங்-
கொட்டைத் தோல், மாங்கொட்டைப் பருப்பு,
வெங்காரம், தான்றிக்காய், நெல்லிப்பருப்பு
இவை வகைக்கு பலம் - கால் ¼ நுணாயீர்க்கு,
நெல்லியீர்க்கு, புளியீர்க்கு, எருக்கியீர்க்கு
வேப்பீர்க்கு கருவேப்பீர்க்கு இவை வகைக்கு
பலம் - கால் (¼) சுண்டைக்காய் - பலம் - 1 இந்தக்
கஞ்சாவை நறுதம் வறுத்து வெழுதிரம்
வெயிலிலே நுறுண்டிப் பொடி செய்து கொள்ளவும்
கடுக்காய்த் தோலினை நெய் ஊற்றி வறுத்துக்
கொள்ளவும்.

அதிவிடையம் அடப்பக் காயெடுத்துக் கொள்ளவும்
வெண்காரம் அத்திப் பண்ணிப் பொரித்துக் கொள்ளவும்
மற்ற மருந்தெல்லாம் பொன் வறுவாய் வறுத்துக்
கொள்ளவும். யிவைகளெல்லாம் மெகமாக
யிடித்துச் சூரணம் பண்ணிக் கொண்டு யிந்தச்
சூரணம் ரெண்டு வேளையும் வேளைக்கொரு
வராகனிடை வெந்நீரிலாவது, பெருங்கிழங்கு,
கொள்ளுக் காவேணை, வசம்பு யிவைகளை
வறுத்துக் கருக்கி சாம்பலாக்கி தண்ணீர் வார்த்துக்
காய்ச்சி ~~சாம்பலாக்கித் தண்ணீர்~~ அந்தக் கஷாயத்தி-
லாவது கொடுத்து வரவும். அதிசாரம் இருபத்து
நாலு வகையும் தீரும்.

---

154. அஸ்தி சுரத்துக்குச் சூரணம்

கடுகு - உழக்கு, நாய்க்கடுகு - உழக்கு, சீரகம் -
உழக்கு - 2, மிளகு - உழக்கு - 2, வெள்ளுள்ளிப் -
பூண்டு - 10 பொரித்துக் கொள்ளவும். சுக்கு - காசிடை
பெருங்காயம் - காசிடை - 1 யிவையெல்லாம்
பொன்னிறமாக வறுத்து யிடித்துச் சூரணம்
பண்ணி வைத்துக் கொண்டு ரெண்டு வேளையும்
வேளைக்கு வெருகடி பிரமாணம் வெந்நீரில்
குழப்பிக் குடித்து வரவும். அஸ்தி சுரம், அக்கினி-
மாந்தம், வயிறு யிரைச்சல் யிவை தீரும். பத்தியம்-
ஆறாக்கருவாடு, திருக்கைக் கருவாடு உப்பு வறுத்துக்
கூட்டிக் கொள்ளவும்.

தீபாக்கினிச் சூரணம்

ஓமம், வாய்விளங்கம், பஞ்சலவணம், சுக்கு
திப்பிலி, மிளகு, கடுக்காய், தானிக்காய், நெல்லிப்-
பருப்பு, செவியம், திப்பலிமூலம், கோரைக்-
கிழங்கு, பேய்ப்புடல், சித்திரமூலம், சீரகம், கருஞ்-
சீரகம், ~~கொடு~~குடசப்பாலைப்பட்டை, கோஷ்டம்
கண்டங்கத்திரி, காட்டுள்ளி வேர், வெட்பாலை-
யரிசி, வட்டத்திருப்பி வேர், இலந்தை வேர்ப்பட்டை,
மஞ்சள், மரமஞ்சள் இவை வகைக்கு பலம்-1
பெருங்காயம் - வராகனிடை - 2½ அதிவிடையம்-
வராகனிடை - 2½ இவற்றில் சுத்திக்க வேண்டிய
மருந்துகள் - ஓமம், பஞ்சலவணம், சுக்கு, திப்பிலி,
மிளகு, கருஞ்சீரகம், பெருங்காயம் ~~[illegible]~~
அதிவிடையம் இவை சுத்தித்துக் கூட்டி
இடப் போட்டிடித்துச் சூரணம் பண்ணி வைத்துக்
கொண்டு இரண்டு வேளையும் வேளைக்கு
இருவிரல் கொண்ட பிரமாணம் வெந்நீரிலாவது
பசுவின் நெய்யிலாவது கொடுத்துவர ~~[illegible]~~
வாதம், வாதசூலை, குன்மம், உதிரவியாதி,
வயிறு பேதி, பாண்டு~~[illegible]~~, ஆமணை, மயக்கம்
மந்தாக்கினி, மூலவாய்வு, அதாசகாசம், அஜீர்ண
சூலை, இத்திர வாய்வு, உஷ்ண வாய்வு இவை-
யெல்லாந் தீரும். பத்தியம் - கவிச்சு, புளிப்பு
தவிரவும்

தாளிசச் சூரணம்

தாளிச பத்திரி, சிவதாட் சிப்பழும், காட்டு-
-[illegible], சீரகம், வெட்டிவேர், கோரைக்-
அ. கிழங்கு, பேரிச்சம்பழம், நெல்லுப்பொரி, தாமரை-

வளையம், சந்தனம், சித்தாமுட்டிவேர், பேரா-முட்டிவேர், கொத்தமல்லி, சீரகம், இலுப்பம்வேர், நெருஞ்சில்வேர், அக்கி, திப்பலி, மிளகு, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிப்பருப்பு, கோஷ்டம், அதிமதுரம், விலாமிச்சம்வேர், நாய்த்தென்னன்கிழங்கு, ஏலம், லவங்கம், கஸ்தூரிமஞ்சள், சிறுநாகப்பூ, மரமஞ்சள், சீந்தில் சக்கை, இலவங்கப்பூ-வராகனிடை-1 மத்த மருந்தெல்லாம் வகைக்கு வராகனிடை - 2 கொண்டு இடித்துச் சூரணம் பண்ணி யதுக்கு சமன் சர்க்கரை கலந்து வைத்துக் கொண்டு இரண்டு வேளையும் வேளைக்கொரு வராகனிடை தேனிலாவது பசுவின் நெய்யிலாவது குழைத்துக் கொடுக்க வரு பித்தசுரம், அந்திரதாகம், அயாசகாசம், இளைப்பு, பித்தபாண்டு, தணைத்திருப்பு, சிரசுரோகம், குன்மம், சூலை, வாந்தி, யிருமல், வயத்துவலி, தாதுநஷ்டம், பிரமேகம், அதிசாரம், கிராணி யிவையெல்லாந் தீரும். பத்தியம் - கவிச்சு, புளிப்புத் தவிரவும்.

செவ்வட்டைக் கழிக்கச் சூரணம்

சேங்கொட்டை, நீரடிமுத்து, எள்ளு, கஸ்தூரிமஞ்சள், கடுப்பட்டிப்பட்டை, உசாத்திப்-பட்டை, நெல்லாரை, பாலைமுருங்கைவேர்ப்-பட்டை, சித்திரமூலம் யிவை வகைக்கு பலம்-1 கொண்டு இடித்துச் சூரணம் பண்ணி வைத்துக் கொண்டு இரண்டு வேளையும் வேளைக்கு

வெருகடி பிரமாணங் கொடுத்துவர வெள்ளை
கழிச்சல், பெருவயாதிகள், குஷ்ட ரோகம், சந்நி வ-
கைகள் இவைகளெல்லாம் தீரும். யிருபத்தொரு நாட்கள்
கொடுக்கவும். பத்தியம்- கோழி, வெள்ளாடு,
அரைக்கீரை, தண்டுக்கீரை, புண்ணாக்கு,
அவரைப்பருப்பு, பீர்க்கங்காய், கத்தரிக்காய்,
பசுவின்பால், நெய், திருக்கைமீன், சுறாமீன்
உப்பு வறுத்துக் கொள்ளவும். பாக்கு, வெற்றிலை,
மிளகு, மஞ்சள், கருவேப்பிலை யிவை
கூட்டிக் கொள்ளவும்

---

155. <u>கருஅபட்ட மேகத்துக்குச் சூரணம்</u>

திராட்சிப்பழம், பேரிச்சம்பழம், நெற்-
பொரி, திப்பிலி, அதிமதுரம், வசுவாசிப்பூ, ஏலம்,
கஸ்தூரி மஞ்சள், கூகைநீறு, சாதிக்காய்
இருநாவல்பூ, லவங்கப்பட்டை, சந்தனம்,
நன்னாரிவேர், வெட்டிவேர், பேராமல்லி
லவங்கப்பத்திரி யிவை வகைக்கு பலம் -ஒ
கொண்டுவந்து இடித்துச் சூரணம் பண்ணி
யதுக்குச் சமன் சர்க்கரை கலந்து வைத்துக்
கொண்டு இரண்டு வேளையும் வேளைக்கு
ஒன்றரை வராகனிடை கொடுத்து வர
கருஅபட்ட மேகம், காமாலை, அக்கிப்-
பிரமேகம், பித்தவாய்வு, அதிசாரகம், சூலை
யெரிவு, தாக உழலை, அஸ்திசுரம், பழஞ்சுரம்,
மிளைப்பு யிவைகளெல்லாம் தீரும்.

சித்திர மூலாதிச் சூரணம்.

சித்திரமூலம், ஓமம், சாதிக்காய், லவங்கம், பெருமருந்து, காசுக்கட்டி, கருஞ்சீரகம், இந்துப்பு, கர்க்கடகசிங்கி, கடுகு, மாசிக்காய், அதிவிடயம், கருவேப்பிலை இவை சமனெடை யெடுத்துச் சூரணம் பண்ணி வைத்துக் கொண்டு இரண்டு வேளையும் வேளைக்கொரு வராகனிடை கொடுத்துவர அதிசாரவாய்வு, உப்புசம் இவை தீரும்.

எலிக்கடிக்குச் சூரணம்.

சிறுகுறிஞ்சாப்பட்டை - பலம் - 12, அழிஞ்சிப் - பட்டை - பலம் - 3, குழவாதண்டைப் பட்டை - பலம் - 3, நாயண் வேர்ப்பட்டை - பலம் - 5, வாலன் முள்ளி, பலம் - 5, நீரடிமுத்து - பலம் - 9, கருஞ்சீரகம் - பலம் - 9, பூனைத்தண்டு - பலம் - 5 மிளகு - பலம் - 2, பெருமருந்து வேர் - பலம் - 1 இவையெல்லாங் கொண்டு வந்து இடித்துக் காயப் போட்டு இடித்து பானையில் போட்டு மூக்குறுணி வெள்ளாட்டுக் கோமியம் விட்டு ஊறப் போட்டு மண்ணுக்குள் அஞ்சு நாட்கள் புதைத்து நின்றவுடன் அண்டவிட்டெடுத்துக் காயப் போட்டு உலர்த்தி யிடித்துச் சூரணம் பண்ணி வைத்துக் கொண்டு இரண்டு வேளையும் வேளைக்கு வெருகடி பிரமாணம் வெந்நீரில் கொடுக்கவும். இப்படி ஒருமண்டலங் கொள்ளத் தீரும் வியாதி - எலிக்கடி, விரைப்பு, உப்புசம், இருமல், உழலை இவையெல்லாந் தீரும். பத்தியம் - வெண்ணீரும் சோறுமாகச் சாப்பிடவும்.

க்ஷய ரோகத்துக்குச் சூரணம்

கர்க்கடகசிங்கி, சுக்கு, திப்பலி, மிளகு, கடுக்காய் தான்றிக்காய், நெல்லிப் பருப்பு, கண்டங்கத்திரிவேர், சிறுதேக்கு, இந்துப்பு யிவை வகைக்கு ஒருபலம் கொண்டுவந்து இடித்துச் சூரணம் பண்ணி வைத்துக் கொண்டு இரண்டு வேளையும் வேளைக்கு(கு) மூணுமாடை யிடைச் சூரணம் தேனில் குழைத்துக் கொடுத்துவரத் தீரும் வியாதி - க்ஷய ரோகம், யிருமல், அக்கினிமந்தம் இவையெல்லாந் தீரும். தீ.

சோகை, காமாலை, பித்தபாண்டு யிவற்றிற்குச் சூரணம்

கடுக்காய், நெல்லிக்காய்ப் பருப்பு, தான்றிக்காய் மிளகு, கிராம்பு, சாதிக்காய், சுக்கு, கடுகு, வெண்-வேர், வெங்காயம், கருஞ்சீரகம், ஏலம் நாயுருவி, கரிசலாங் கண்ணி யிவைகளெல்லாஞ் சரிநிறை சூரணம் பண்ணி வைத்துக் கொண்டு யதில் காந்தச் செந்தூரமும் லோகச் செந்தூரமுஞ் சரியளவு கூட்டிச் சூரணத்தில் கலந்து சாப்பிடவும்.

வில்லைக் கட்டுக்கு லவணச் சுண்ணம்

சமுத்திர லவணங் கொண்டுவந்தரைத்து உண்டையாகத் திரட்டி யெடுத்துக் கொண்டு யிதுக்கு கற்றாழைச் சோறு யெடுத்தரைத்து லவணத்தின் மேலே பொதிகிற சட்டியில் வைத்து மேல் சட்டி கொண்டு மூடி சீலைமண் செய்து அடுப்பில் வைத்து கமலாக்கினியாக இரண்டு சாமம் எரித்து சாங்கசீதளமாக

சாறுவிட்டு யெடுத்து வைத்துக் கொண்டு இரண்டு வேளையும் வேளைக்கு முடை யடை வெருகம் வெந்நீரில் கொடுத்து வர வல்லைக்கட்டுகள் நீராய்க் கரையும். பாதுக்குப் பத்தியம் - தப்படிச் சோறு மோருமாகப் போட்டு வரவும்.

நிலவேம்புச் சூரணம்

நிலவேம்பு, முக்காவேளை, கண்டுபரங்கி யிவை சமன் கூட்டி யிடித்து . . . . . .

தொடர்ச்சி இல்லை
155வது ஏடுவைக்கிப் பார்த்து 174வது ஏடுவரைதான் உள்ளது. இடையில் உள்ள ஏடுகள் விடுபட்டுள்ளன.

. . . . - நேரிசை

176. அத்திடு அவாசு காசம்
அதிய காமாலை பாண்டு
தீத்திடும் புண்ணக்கா யளவு
திண்ணத் தீரும் கண்டமது.

சுதய இரும்புக்கு லேகியம்

கோரோசம் (கோரோசனம்) பலம்-௧, சுக்கு-பலம்-௩, திப்பலி-பலம்-௧, கிராம்பு-பலம்-௧, சாதிக்காய்-பலம்-௧, கடுக்காய்-பலம்-௧, ஏலம்-பலம்-1, தாளிசம்-பலம்-௧, விளாமிச்சம் வேர்-பலம்-௧, சர்க்கரை-பலம்-10, நாட்டுநெய்-படி-௧, தேன் படி ¼ வ, கொடிப்பு மாதுளங்காய்-3, துளசித்துச் சாறு - கடைமருந்து - சூரணம்,

குழம்புங் காச்சி குடிப்பதக் கொடுக்கவும். யிப்படி பதினைந்து நாட்கள் கொடுக்கத் தீரும்.

இருமலுக்கு நருந்தாளி லேகியம்.

நருந்தாளி யிலைச்சாறு, நறுநெய், ஊத்தான்-வித்துப் பொடி - பலம்-வ, பழவெல்லம் - பலம்-௨,௭, கண்டுசீக்கரை - பலம் - வ, சீக்கரை பலம் - வ சீனி - பலம்-வ, பனைவெல்லம் - பலம் - வ, திப்பலி-பலம் -1 யிவைகளை திப்பலிப் பொடியுங் கூட்டி லேகியஞ் செய்து புன்னைக்காயளவு கொள்ளத் தீரும். எட்டுநாளில் சுரம், க்ஷயம் கூடத் தீரும்.

இருமலுக்கு லேகியம்

முத்தின பிரண்டை கணுப்போக்கி திவக்க வறுத்து தன்சாறாக உழக்கு. அக்கு பணவிடை-1 சுத்தி பண்ணின கெந்தகம் பணவிடை-1 மேனி பொடியலிட்டுக் கொடுக்க சிலேட்டுமம் யீளை, இருமல், மேல்னோக்கின சுவாசம், நித்திரை வாராதிருப்பது யெல்லாம் எட்டு நாட்களில் புன்னைக்காயளவு கொடுக்கத் தீரும். கவிச்சு தவிர்த்து மருந்து கொள்ளவும் தீரும்.

க்ஷயத்துக்கு லேகியம்

உத்தாமணியிலை, சங்கம்வேர், நடுனரம்பு யாம்புறா வேர், மிளகு, சாரணைவேர், ஆடா-தோடை, தூதுவளை, கையாந்தகரை வேர் வகைக்கு பலம்-2, வெல்லம் - பலம் - 2 வடிக்காடி நசுக்கி பதக்கு நீரில் போட்டு யெட்டொன்றாய்க் காச்சி, ஆடாதோடை வேர், தூதுவளை வேர்,

உத்தாமணி வேர், கையாந்தகரை வேர் வகைக்கு பலம்-௨, தேத்தான் வித்துப் பொடி- பலம்-௩, அ. வெல்லம்- பலம்-௨, கண்டு சர்க்கரை பலம்-௨, நல்ல சர்க்கரை -பலம்-௨, சீனி- பலம்-௨, பனை-வெல்லம்- பலம் -௨, திப்பலி- பலம் -1, நாருந்-தாளிச்சாறு, நறுநெய் யாவையுமெல்லாஞ் லேகியஞ் செய்து வைத்துக் கொண்டு புன்னைக்-காயளவு காலமே எட்டுநாட்கள் கொள்ள க்ஷயம் தீரும்.

இருமல், ஈளைக்கு லேகியம்

தேத்தான் வித்துப் பொடி நறுநெய்யில் வறுத்து பலம் -1, திப்பலி, சித்தரத்தை, அதிமதுரம் வகைக்கு பலம்-1, சீரகம்- பலம்-1, திப்பலி, சீரகம் வறுத்துக் கொள்ளவும். மற்றதெல்லாம் பச்சையாகவே சூரணம் செய்து கொண்டு நாலுபலம் வெல்லம் தண்ணீரில் கரைத்து வடித்துக் காய்ச்சிக் கிழம்-பாய் வரும் போது நெய், தேன் விட்டு லேகியஞ் செய்து அதில் ரசச்செந்தூரம் வராகனிடை-2 கூட்டி ரெண்டு வேளையும் விராகனிடை வீதம் கொள்ளவும். இருமல், ஈளை தீரும்.

திம்புரா வேர் பலம்-10, அக்கி பலம்-5 திப்-பலி -பலம் - 2-௨, கடுக்காய் - பலம் -1.௨ வறுத்துப் பொடி செய்து தேனில் கொள்ள இருமல் தீரும்.

வாய்ப்புண், மேக்கட்டை, பிரமேயம் இவைகளுக்கு சீனப்பா லேகியம்

சீனப்பா- ராத்தல் -1 சூரணஞ் செய்துயவும்.

சீரகம், ஓமம், சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு,
அதிமதுரம் வகைக்கு முக்கழஞ்சு யெடுத்துச்
சூரணம் செய்து இந்தச் சூரணம் ஒருபங்கும்
சீனப்பா இரண்டு பங்கும் யிவைகளுக்கெல்லாம்
சீனி பாதியும் கூட்டி நறுநெய் - ஆழாக்கு
சட்டியல் விட்டு அப்பவே யெத்திக் கிண்டி
வைத்துக் கொண்டு வெருகடி பிரமாணம்
இரண்டு வேளையும் கொள்ளவும் வெந்நீர்
குடிக்கவும். பத்தியம் - முன்சொன்ன வியாதி -
யெல்லாந் தீரும்.

வேறு

பறங்கிப்பட்டை சுக்குமாக
அரிந்து கொண்டு சட்டியில் பசுவின்பால்
விட்டு சீலைகட்டி சிக்கையை வைத்து
மூடி வேக விட்டு ஆறியெடுத்து உலர்த்தி
யிடித்து அரித்துச் சூரணஞ் செய்து கொண்டு
யிதில் திப்பாணை, திருமுறளம், கிராம்பு, லவங்கப்பட்டை, ஓமம்,
ஏலம், சாதிபத்திரி, கொடுவேலி, வாய்விளங்கம்
179, கிரோசாணி ஓமம், சவ்வியம், கொத்தமல்லி
அரத்தை, சிறுதேக்கு, அதிமதுரம்
சீரகம், சடாமாஞ்சில், கோஷ்டம்,
விளாமிச்சம்வேர், நன்னாரி, முத்தம், அமுக்கிறா,
அரேணுகம், வாலுழுவை, சிறுநாகப்பூ
வெட்பாலையரிசி வகைக்கு வராகனிடை -
௧ யிதுவுஞ் சூரணம் பண்ணி முன்பட்டைச்
சூரணத்தில் கலந்து கொண்டு ஒரு நிறைச்சூரணம்

சருநிறை நாட்டுச் சர்க்கரை, சருநிறை தேன் நெய் விட்டுப் பிசைந்து அண்டைக் காயளவு இரண்டு நேரமும் கொள்ளவும். துவரை, அவரைப்-பிஞ்சு, அரைக் கொழுந்து, பீர்க்கம் பிஞ்சு, முளைக்-கீரை, நெய்யாம். இந்த லேகியத்துக்குத் தீரும் வியாதி - குன்மம் - 18-ம், மேகம் - 20-ம் வாதம்-80-ம், பித்தம்-40, சேத்துமம் - 20-ம் ஜீரணமுந் தீரும். கைகண்டது.

வில்வாதி லேகியம்

வில்வம் வேர் மேன்புறந் சீவிப் போட்டுப் பாகாயக் காச்சி யதில் சுக்கு - பலம் - 3, மிளகு-பலம் - 1, திப்பலி - பலம் - 2 சவ்வியம் - பலம் - 2, தாளிசபத்திரி - பலம் - 1, சிறுநாகப்பூ - பலம் - 5 திப்பலி மூலம் - பலம் - 2, கொடிவேலி வேர்ப்-பட்டை - பலம் - 1, ஏலம் - வராகனிடை - 3, வெங்காரம் - வராகனிடை - 3, சீரகம் - வராகனிடை-2 யிவை யெல்லா மிடித்து வஸ்திரகாயம் பண்ணி பாகில் கொட்டிக் கிண்டி பதத்தில் யிறக்கி தானிக்காய் பிரமாணம் உண்டை செய்து பத்தியத்தில் ஆனெழுந்த வியாதிக-ளெல்லாங் கொடுக்கலாம். தீரும். கைப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

பாண்டு ரோகம், சோகை, காமாலை யிவைகளுக்கு லேகியம்.

அவரி, காட்டு மல்லிகை, கையாந்தகரை, முருக்கின்

அ. பிரமியினை, இப்பைமேனி, ஆடாதோடை, செம்-
முள்ளி, மாம்பை (மாயனை), சிறுகீரை, கரு-
நொச்சி, வெண்ணொச்சி, செருப்படை
தொட்டைக்கரந்தை, கொடியாவரை, நிலாவந்தி-
ராயண், துளசி, கழற்கொடி, முடக்-
கொத்தான், மணத்தக்காளி, கஞ்சாங்கோரை
யிவையெல்லாம் சமனாக யெடுத்து சாறு-
படி-1 பிழிந்து கொண்டு இதில் அரப்பொடி,
கிட்டம், உலைக்காந்தம், யிவை யரைத்த விழுது
புன்னைக்காய் மாத்திரம், அக்கு, மிளகு, திப்பிலி
கடுக்காய், வெள்வெங்காயம் வகைக்கு
ஒன்றுக்கு அரைத்த விழுது சுண்டைக்காயளவு
கருஞ்சீரகம் ~~..~~ அரை மாகாணி, வெள்ளாட்டின்
கோமியத்தில் இவையெல்லாம் கூட்டி அரைத்து
அந்தச் சாறுக்கெல்லாம் பாத்திரத்திற் கலந்து
புட்டி வெள்ள மொருசிறப்பை கூடப் போட்டுக்
கிளறி வெய்யிலில் வைத்து நல்லெண்ணெய்
ஒரு மாகாணி சேர்த்து சாறெல்லாம் அறச்
அற வெய்யிலிலே வைத்து யெண்ணெயை
சிறுகச் சிறுக விட்டு வெய்யிலிலே வைத்து
யெடுக்கவும். இதனைப் பாக்களவு காலமே
தின்னவும். காரப்பு, புளிப்பு தவிரவும்.
இருபது நாட்கள் தின்னத் தீரும். யிந்த மருந்து
ஒரு வருஷம், இரண்டு வருஷம் இருக்கும். உலர்ந்து
போனால் எண்ணெய் விட்டுக் கிளறிக் கொடுக்கவும்.

அஷ்ட குன்மத்துக்கும் மத்தோட்ட உதர வியாதிகளுக்கு வைத்தியம்.

ஆடு தீண்டாப் பாளைச் சாறு - பலம் - 2, தக்காளிச் சாறு - 2, நொச்சிச் சாறு - 2, மாவி-லங்கச் சாறு, கையாந்தகரைச் சாறு, முருங்-கிலைச் சாறு, முடக்கொத்தான் சாறு, கோசலம்-2, வெள்ளாட்டு மூத்திரம் - 2 ஆகச் சாறு 13, நல்லெண்ணெய், விளக்கெண்ணெய், வேப்பெண்ணெய், நெய், இலுப்பெண்ணெய்
178. ஆக எண்ணெய் - 5 - ம் சாத்திலிட்டு கற்கம், திப்பலி, திப்பலி மூலம், அத்தித்திப்பிலி, மரமஞ்சள், தேவதாரம், கடுகுரோகணி, கார்போகரிசி, கோஷ்டம், பெருங்குரும்பை, வெட்பாலரிசி, வாலுளுவையரிசி, கருஞ்சீரகம், கம்பப்பிசின், பெருங்காயம், கொந்தகம், நேர்வாளம், வெள்-ளுள்ளி, இசங்கொட்டை, கடுக்காய், நெல்லி-முள்ளி, சுக்கு, மிளகு, வசம்பு இவை வகைக்கு வராகனெடை - 7 சூரணஞ் செய்து வஸ்திரகாயம் பண்ணி கூடப் போட்டு. வத்தி வரும் வேளையில் நாலு வெள்ளுள்ளி அரைத்து கூடப் போட்டு சயாறக்கிம் போது நவச்சாரம், எவாச்சாரம், காரச்சுப்பு, வெடியுப்பு, சயிந்தலவணம் இவை வகைக்கு வராகனெடை - 7 பொடி செய்து போட்டு மெழுகு பதத்தில் இறக்கி வைத்துக் கொண்டு பாக்களவு உண்டுவரவும். காரப்பு புளிப்பு தவிரவும். எண்பத்திநாண்டான வியாதியெல்லாந் தீரும்.

எரிகுன்மத்துக்கு வைத்தியம்

மடக்கொத்தான், கழற்கொடிக் கொழுந்து மிளகு, கடுகு, வெள்ளுள்ளி வகைக்கு பலம் - 1 யிவை யெல்லாம் வெவ்வேறே யரைத்து சட்டி-யைக் காய வைத்து ஒரு கிராம்பு மாகாணி விளக்-கெண்ணெய் விட்டு அதிலே அரைத்த விழு-தெல்லாம் போட்டுக் காயும் போது முத்திணி தொப்பாயொன்று திருகி அதிலே போட்டு பெருங்காயம் நாற்கழஞ்சு பொரித்துப் பொடி பண்ணிப் போட்டு கரண்டியாலே துளாவி மெழுகு பதத்தில் பக்குவமாய் யிறக்கி வைத்துக் கொண்டு ஒரு நாளைக்கு ஒரு நேரம் வெருகடி பிரமாணம் தின்று வரவும். எட்டு நாட்களுக்குப் பத்தியம் - யெறாக் கருவாடு, காரைக் கருவாடு, உப்பு, மிளகு துவையல், யிளாவக்கீரை, வெந்நீர் யிவை யெல்லாம் ஆம் இது சித்தம்.

வயிறு பொருமல் அக்கினி மாந்தத்துக்கு வைத்தியம்

இரண்டு கிராம்பு மாகாணி எலுமிச்சம் பழச் சாற்றில் முகிள் வாசியா எருக்கம்பூச் சாற்றுக்குத் தக்கது மாத்திரம் போட்டு மூடி சாறு வற்றும் வரையிலும் எரித்தெடுத்தரைத்துக் கொண்டு ஒரு சட்டியில் பெருங்காயம், கடுகு, வெந்தயம் இவையெல்லா மிட்டு நல்லெண்ணெய் ஊற்றித் தாளித்து கலச-த்தில் வைத்துக் கொண்டு காலையில் பாக்களவு கொள்ளவும் மறுமாத்திரமாக யிட்டுண்ணவும். பத்தியம் வேண்டாம்.

மேல் கமுகை, கீழ்க்கமுகை, நீராமை, வெப்பு-பாவை, தொண்டைமுட்டி யிவைகளுக்கு லேகியம்.

சாரணை, சிறுகீரைவேர், கையாந்தகரை
குப்பைமேனி, பிரண்டை, சிறுபுள்ளடி, கவி-
தும்பை, பொடுதலை, நீர்மேல் நெருப்பு, ~~[illegible]~~
நொச்சியவை, ஊமத்தையவை யிந்த 11-ம்
தனித்தனிச் சாறு - உழக்கு, அக்கி, மிளகு, கடுகு,
சீரகம், அரலொடி, பெருங்காயம், வெள்ளுள்ளி
கருஞ்சீரகம், வெண்காரம், சீனாக்காரம்
படிக்காரம், சவக்காரம், இந்துப்பு, கல்லுப்பு
கடுக்காய் இந்த 15-ம் தனித்தனி கழஞ்சு-1
நேர்வாளம் - கழஞ்சு - 2 (10 கிராம்), கொம்மட்டிக்காய்
40, வேப்பெண்ணெய், நல்லெண்ணெய்
விளக்கெண்ணெய், நெய், திருக்கள்ளிப்பால்
யவை தனித்தனி உழக்கு நக்கவிட்டுக் காய்ச்சி
மெழுகு பதத்திலிறக்கி பல்லாமையில் வைத்துக்
கொண்டு தேத்தான் கொட்டை பிரமாணம்
தின்னவும். காரப்பு, புளிப்பு நீ தவிரவும்.
முன் சொன்ன வியாதியெல்லாங் குணமாம்.
அழினை, தொழுனையுங் குணமாம்.

இரத்த காசத்துக்கு லேகியம்.

பெரும்பூசணிப்பழம் குடலும் விதையும் வாங்கிப்
போட்டு மேல்புறணி சீவி, நாலவிரல் கனத்துக்கு
நீளக்க கீறி துண்டு துண்டமா நறுக்கி
சட்டியிலிட்டு மூன்று மாகாணி நறுநெய்

179. அதிலிட்டு சிறுதீயை எரியவிட்டு வரும்போது
அந்த நெய் பாகுக்கும்போது இறக்கி அதில்
சிறுநாகப்பூ, அதிமதுரம், ஏலம், தாளிச-
பத்திரி வகைக்கு கழஞ்சு பொடி தூவிக் கிண்டி-
பானை நன்றாய் மத்தித்து கிண்டி பானை
குடுவையிலிட்டு வேடுகட்டி வைத்துக் கொண்டு
கிண்டி பானை புன்னைக்காயளவு தின்னவும்.
ரத்தாசயம் போகும்.

பஞ்சகுன்மத்துக்கு லேகியம்

சாரணைவேர், அக்கி, பஞ்சவர்ணம் வகைக்கு
பலம்-8, கருங்கொள்ளு உரி இவைகளெல்லா-
மிடித்து பன்னிரண்டு மாகாணித் தண்ணீர் விட்டு
இரண்டு மாகாணியாகக் காய்ச்சி வடித்து அதில்
நாலு மாகாணி வெள்ளாட்டுப் பாலும் பஞ்ச-
லவணம் - பலம்-3, வெள்ளை வெங்காயம்-
பலம்-12 அரைத்துக் கலந்து நல்லெண்ணெய்-
மூவுழக்கு, நெய்- மூன்றுழக்கு கூட்டிக் கலந்து
எரித்து பக்குவமாக வருகிறபோது உழக்குச் சர்க்க-
ரையும் விட்டு புளியஞ்சாம்பல், அசம-
தாகம், திப்பலி, சித்திரமூலம் இவைகளையும்
வகைக்கு வராகனெடை-2 இவைகளெல்லாம்
பொடி செய்து கூடப் போட்டுக் கிளறி இறக்கி
அதில் முக்கழஞ்சு கடுகும் அரைத்துக் கலந்து
தினம் புளியங் கொட்டைப் பிரமாணம்
கொடுக்கவும். வலிதீரும். பத்தியம்- பசுவின்பால்
நெய், மோர், துவரை கூட்டவும்.

மூலவாய்வுக்கு லேகியம்

சுக்கு, திப்பலி, மிளகு, சீரகம், ஏலம், கடுகு, அதிமதுரம், சாதிக்காய், [illegible] லவங்கம் இவையெல்லாம் வகைக்கு பலம் - 2 சூரணஞ் செய்து செய்து பின் 4 ஒரு ஆழாக்கு ...

[illegible]

சீரகம் ... சேர்த்து ...

வாய்வு மந்திக்கினியும் தீரும்.

குன்மவாய்வுக்கு லேகியம்

பேய்த்தும்மட்டிக்காய்ச் சாறு - ஒ, பழம்பாலை - கிழங்கு சாறு இவை காய்ச்சிக் கொதிக்க பக்குவத் - ... அத்தி - ...

[illegible]

மிளகு சாறுஞ் சேரும்.

... மாத்து

பச்சரிசிக் கழுநீரில் சீரகம் வராகனிடை - 2 அரைத்து அவ்வளவு வெல்லமும் போட்டுக்கொடுக்கவும். எந்தக் கட்டியும் கரையும்.

வில்வாதி லேகியம்.

கிரந்தி, கிரணை, இரத்தத்துக்கு.

சேங்கொட்டை - நிறை - 1ரு, ஏலம் - தான் -
நிறை - 2 பட்டு பொடித்துத் தெள்ளி ஒரு போக்கி
தான் மத்தித்து நெய் சேர் - 1, தேன் - சேர் - 1
இவைகளையெல்லாம் லேகியஞ் செய்து கொண்டு
இரண்டு வேளையும் பாக்களவு கொள்ள பனி-
ரெண்டு நாளில் கிரந்தி, கிரணை, இரத்தம்
இவை தீரும். சேங்கொட்டை சுத்திசெய்துப்
போடவும்.

மேலிளைப்புக்கு லேகியம்

சிக்கிராம்பட்டை - பலம் - 10, தூதுவளை -
பலம் - 10 கடுக்காய் - பலம் - 2, தேத்தான் -
கொட்டை - பலம் - 2, நெல்லிமுள்ளி - பலம் - 2
இவைகளையெல்லாம் இடித்து மூன்று மரக்கால் தண்ணீர்
வார்த்து இரண்டு படியாகக் காய்ச்சி வடித்துக்
கொண்டு பழைவெல்லம் - பலம் - 40 எடுத்து
கியாழத்தில் கரைத்து வடித்துக் கொண்டு
சட்டியில் வார்த்துக் காய்ச்சி பாகுபதத்தில்
சுக்கம், அக்கு, திப்பலி, வால்மிளகு, பெருந்தை-
வேர், நன்னாரிவேர், கிட்டம், சீரகம் ஏலக்காய்
180. பலம் - ¼ இவைகளையெல்லாம் இடித்து வஸ்திரகாயம்
பண்ணி வைத்துக் கொண்டு பாகை இறக்கி
வைத்து ஆறவிட்டு அதில் சூரணம் போட்டுக்
கிண்டி யெடுத்து ஒரு கலசத்தில் வைத்துக்
கொண்டு அந்திசந்தி பாக்களவு தின்னவும்.

தீரும் வியாதி - அஸ்மாகாசம், மந்தாரகாசம் பீனிசம், மேலிரைப்பு, சுரமேல் யிவையனைத்துந்-தீரும். கண்டது. பத்தியம் - பச்சைப்பயறு துவரம்பருப்பு, பசுவின்நெய், நீர், மோர், முருங்-கைக்காய், முருங்கையிலை, அரைக்கீரை யிவையாகும்.

க்ஷயத்துக்கு லவங்காதி லேகியம்

லவங்கப்பட்டை - பலம் -4, சுக்கு, திப்பிலி, மிளகு, திப்பிலிமூலம், சவ்வியம், சித்திரமூலம், பேரரத்தை, சிற்றரத்தை, அதிவிடையம், கொத்த-மல்லி, கிச்சிலிக்கிழங்கு, சிறுநாகப்பூ, கோ-ரைக்கிழங்கு, நன்னாரிவேர், சோம்புவிரை - சதகுப்பை, ரோங்கிப்பட்டை, ஜாதிக்காய் ஜாதிபத்திரி, ஏலம், திராட்சைப்பழம், பேரிச்சம்-பழம் வகைக்கு பலம் -1, சர்க்கரை - பலம் -12, அரைச-தேன் - பலம் -4, பசுவின் பால் படி-2, பால் காய்ச்சிக் கொண்டு அதில் -னம் - பலம் -5 மருந்து சூரணம் பண்ணினதை போட்டு சர்க்கரை தேன்விட்டு லேகியஞ் செய்து கொண்டு ஒருபொழுதுக்கு ஒ தேர்சனாங் கால் பணவிடை கொடுத்து வர க்ஷயம் இருபது வகையும் தீரும்.

தாதுவர்த்திக்கு லேகியம்

அதிமதுரம், விலாமிச்சம் வேர், முத்தக்காசு, கோஷ்டம் வகைக்கு பலம்-3 யிதைச் சூரணம் பண்ணி சித்தாமுட்டி வேர் பலம்-25 நறுக்கி முக்குறுணி நீரில் போட்டு யிருநாழியாகக் காய்ச்சி வடித்து யிதில் பசுவின்பால் ஒருநாழி, யிளநீர்-

னாழி, தாழைவிழுதுச் சாறு - னாழி, அமுக்கிச்சம் - பழச்சாறு - னாழி யிந்தச் சாறெல்லாஞ் சேர்த்து வெட்டுக் காய்ச்சி யிறக்கும் போது முன்சொன்ன மருந்து தூளாக்கி சீனிக்கண்டு பலம் - 5 போட்டுக்

அ. கிண்டி வைத்துக் கொண்டு தினம் நெல்லிக்காயளவு தின்னவும். தாது வர்த்திக்கும். பெலனுண்டாம். எலும்புருக்கியுந் தீரும்.

வில்வாதி லேகியம்

அனுபவசித்தம்

வில்வம் வேர் மேல்பட்டையைச் சீவிப் போட்டு மருந்தின் தாள் - பலம் - 30 தண்ணீர்ப் பதக்கு நீரில் போட்டுக் காய்ச்சி வடித்து யிதில் பழைய வெல்லம் - பலம் - 30 கரைத்து வடித்து யிதில் கற்கம் - சுக்கு - பலம் 3, மிளகு - பலம் - 4, கொத்தமல்லி, திப்பிலி வகைக்கு பலம் - 2, தாளிசப்பத்திரி - பலம் - 1, சவ்வியம் - பலம் - 1, திப்பிலி மூலம் - பலம் - 2, சிறுநாகப்பூ - பலம் - 1, சித்திரமூலம் - பலம் - 1, ஏலரிசி, லவங்கம், லவங்கப்பத்திரி, கிராம்பு, சாதிக்காய் வகைக்கு பலம் - ½, சீரகம் - பலம் - 2 யிவைகளெல்லா மிடித்துத் தூளாக்கி யிந்தக் குழம்பிற் கொட்டி ஆத்தி அரைப்படி தேன்வார்த்து தானியப்புடம் பண்ணி பாக்களவு தின்னத் தீரும் வியாதி - பாண்டு, காமாலை, அருசியம், அக்கினிமந்தம், பயித்தியம், கிராணி, சோபம், விக்கல், மந்தாரக் கிராணி, பயித்திய வாய்வு யிவையெல்லாந் தீரும்.

பெருவியாதி எப்பேர்ப்பட்ட குஷ்டங்களுக்கு லேகியம்

சேங்கொட்டை - பலம் - 30 முன்னீர் ஊறப்-போட்டு இடித்து பதக்கு பசுவின் பாலில் போட்டு அடுப்பேற்றி நீரை வடிகட்டிப் பிழிந்து கொண்டு இதில் பனைவெல்லம் போட்டுக் காய்ச்சிப் பாகானபோது பரங்கிப்பட்டை பலம் - 10 இடித்துச் சூரணம் பண்ணிக் கூடப் போட்டு அடுப்பேற்றி பதத்தில் இறக்கி வைத்துக் கொண்டு நாளொன்றுக்கு பெருங்கொட்டைப் பாக்களவு தின்னவும். தீரும்.

சிரபுங்க வில்வாதி லேகியம்

முக்காவளை வேர் - பலம் - 10, வில்வ வேர் - பலம் - 10, சித்தாமுட்டி வேர் - பலம் - 5, கூத்தங்குதம்பை வேர், நிலக் கூத்தங்குதம்பை வேர், சிறுவழுதுணை வேர், சாரணை வேர், அவையார்-
181. கூந்தல், விளாமிச்சம் வேர், சீந்திற்கொடி, மரமஞ்சள், வட்டத்திருப்பி வேர், நன்னாரி வேர், கண்டுபரங்கி வகைக்கு - பலம் - 2 ஐ, [illegible] லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, நாககேசரம், சுக்கு, திப்பிலி, மிளகு, சீரகம், கருஞ்சீரகம், லவங்கம், ஜாதிக்காய், செவியம், கொடுவேலி, இந்துப்பு, திப்பிலி மூலம், கொத்தமல்லி, கோஷ்டம், தாளிசபத்திரி, அரத்தை, ஏலம், குரோசாணி ஓமம், லோக மண்டூரம் வகைக்கு பலம் - ¼, வெல்லம் - பலம் - 16, தேன் - பலம் - 10 லேகிய பதமாகச் செய்து கொள்ளவும்.

விப்புருதிக்குப் பூநாக லேகியம்

பூநாகம் மெல்லிய சீலைத்தாய் எடுத்துக் கழுவி உலர்த்திப் பொன்னிறமாக வறுத்துப் பொடி செய்த சூரணம் - பலம்-4, நாட்டுச் சர்க்கரை - பலம்-8 சட்டியிலிட்டுத் தக்க தண்ணீர் வார்த்துக் கரைத்து வடிகட்டிக் காய்ச்சிப் பாகு - போலே வரும் போதிறக்கி ஆறி வருகையில் முந்தின பூநாகச் சூரணத்தைக் கொட்டிக் கிளறி லேகியம் போலே வைத்துக் கொண்டு இரண்டு வேளையும் வேளைக்கொரு வராகனிடை கொடுத்துவரத் தீரும் வியாதி - வயிற்றின் விப்புருதி யாலே சீழ் வடிகிறது, கழிச்சல், சீழ்மூலம், இரத்தமூலம், வயிற்றிரணம், சீழ் மேகம், இரத்தக்கிராணி, அக்கினி மாந்தம், மூலக்கழிச்சல் யிவைகளெல்லாந் தீரும்.

நெல்லிக்காய் லேகியம்.

நெல்லிக்காய்ச் சாறு படி-8, பழவெல்லம் - பலம்-11½ சாற்றில் போட்டுக் கரைத்து வடிகட்டிக் கொண்டு பசுவின் நெய் - நாழி தேன் - நாழி சுத்தி பண்ணின சிவதை வேர்ச்சூரணம் - பலம்-4 யிவற்றையுங் கூட வார்த்து அடுப்பில் வைத்து மெதுவாய்க் காய்ச்சி பாகு போல வரும் போது இறக்கிக் கொண்டு ஏலம், லவங்கப்பத்திரி லவங்கம், நாககேசரம், வெட்டிமத்தகம்,
? திப்பிலி, கடுகுரோகணி, பரங்கி, நல்லசந்தனம் வெட்டிவேர், தேவதாரம், வில்வம்பழம் வகைக்கு

அ. பலம்-1 யெடுத்துச் சூரணம் பண்ணி கூடப்போட்டு
கிண்டி.. யிளகின பக்குவத்தி லிறக்கி யதுக்கு
முன்னொரு, தீவகாட்சிப்பழம், பேரிச்சம் பழம்
சொந்த வெண்ணெய், வெங்கப்பட்டை, லவங்கப்-
பத்திரி, தாளிசபத்திரி, கிச்சிலிக்கிழங்கு வகைக்கு
பலம்-2 யெடுத்துச் சூரணம் பண்ணி மேன்படி
தூவி அத்தி பண்ணின தேனுங் கூட வார்த்துக்
கிளறி லேகியம் போலெடுத்து வைத்துக் கொண்டு
ரெண்டு வேளையும் வேளைக்கு வராகனிடை
லேகியந் தின்றுவர தீரும்வியாதி- ஆம்பல்
பித்தம், வாந்தி, பிரமேகப்பயித்தியம், தலைத்திருப்பு
அஜீரணம், கண்சிறுத்தல், பாறல் யிவையெல்லாந்
தீரும்.

எலும்புருக்கி மேகத்துக்கு லேகியம்

பருத்திக் கொட்டையை யிளநீரிலூறப்-
போட்டு இடித்துப் பிழிந்து கொண்டு படிக்கு
பசுவின் பாலுங் கூட வார்த்து அத்திப்பாலுழக்கு,
சர்க்கரை-யிருநாழி யிவையுங் கூடப்போட்டுக்
கரைத்துக் காய்ச்சி பாகுபோலே வரும்போது
திற்கொற்கம்- ஏலம், லவங்கப்பட்டை,
கோஷ்டம், அதிமதுரம், சீரகம் வகைக்கு
பலம்-12 யெடுத்துச் சூரணம் பண்ணிக் கூடப்
போட்டுக் கிளறி பசுவின் நெய் நாழி கூட
வார்த்து கடுகு திரண்ட பக்குவத்தி லிறக்கிக்
கொண்டு ரெண்டு வேளையும் வேளைக்கு ஒரு
வெருகடி பிரமாணந் தொடுத்துவர உள்சூடு,
பெரும்பாடு, எலும்புருக்கி, மேகம் யிவையெல்லாந்
தீரும்.

நீரிழிவுக்கு லேகியம்

ஆவாரம் வேர்ப்பட்டை, பூ, தண்டு, யிலை,
காய் யிவை யெல்லாஞ் சமனாக உலர்த்திப்
பொடியாக வைத்துக் கொண்டு, தினையரிசி
மாவாக யிடித்து யிரண்டு பொடியுஞ் சமன்கூட்டி
முன்னை, முசுட்டை யிரண்டையும் பசுவின்
பாலிலரைத்துக் குழம்பாகக் காய்ச்சும்போது
அந்த யிரண்டு ~~பொடியும்~~ பொடியும் போட்டுக்
கிளறிக் களியாகத் தின்னவும். இணைமம்
பத்தியம் - முருங்கையிலை, காய், வாழைக்-
கச்சல், அத்திக்காய் யிவை கூட்டவும்.

மகோதரத்துக்கு காளியாங்காதி லேகியம்

அத்தித்தும்மட்டிப் பழச்சாறு - படி - 1, வெள் -
-ளைப்பூண்டுத் தயிலம் - படி - ௨, யீரவெங்காயச் -
சாறு - படி - ௨, கார்த்திரவியம், பெருங்காயம்,
சித்திச்சாரம், வெடிச்சாரம், யிந்துப்பு, பொட்டி-
லுப்பு, வளையலுப்பு, காச்சுப்பு, அன்னபேதி,
சீரகம், கருஞ்சீரகம், செவியம், கொடிவேலி,
எள்ளுப்பு, நாயுருவியுப்பு, அக்கு, திப்பலி,
திப்பலி மூலம், மிளகு வகைக்கு பலம் - 1வ லேகியஞ்
செய்து கொள்ளவும்.

உஷ்ண வாய்வுக்கு லேகியம்

தாளிசபத்திரி, மிளகு, செவியம் வகைக்கு
பலம் - ௨, ஏலம், சாதிக்காய், விளாமிச்சம்வேர்,
வெட்டிவேர் வகைக்கு பலம் - வ, லவங்கப்பட்டை,

லவங்கப்பத்திரி வகைக்கு பலம் - ௫, திப்பிலி,
திப்பிலிமூலம் வகைக்கு பலம் - 1, சுக்கு -
பலம் - 19, பழவெல்லம் - பலம் - 12 லேகியமாகச்
செய்து வைத்துக் கொண்டு சாயங்கால
மொரு வராகனெடை லேகியம் கொள்ளவும்.

ஓமம் - பலம் - 4 புடைத்தெடுத்து
எலுமிச்சம் பழச்சாற்றில் ஊறவைத்து எடுத்து
நிழலுலர்த்தி வைத்துக் கொண்டு காலையில்
தோறும் கால்பல ஓமம் மோரில் அரைத்துக்
குடிக்கவும் உஷ்ண வாய்வு தீரும்.

காண்டாதிருகத்துக்கு லேகியம்

மிளகு, காட்டுக்கிராம்பு, நாககேசரம்
வகைக்கு வராகனெடை - 5, கொத்தமல்லி,
ஜாதிக்காய், சந்தனம், திப்பிலி வகைக்கு
~~[illegible]~~ வராகனெடை - 4, அதிமதுரம்
சீரகம், ஏலரிசி, கொடுவேலி வகைக்கு
வராகனெடை - 3, திப்பிலிமூலம், லவங்கம்
சுக்கு, விளாமிச்சம்வேர் வகைக்கு வராகனெடை -
2, மூங்கிலரிசி, லவங்கப்பத்திரி, சடாமாஞ்சில்
அ. நெல்லிப்பருப்பு வகைக்கு வராகனெடை - 1,
இஞ்சி, சர்க்கரை, நெய் வகைக்கு பலம் - 10
யிதை லேகியமாகச் செய்து கொள்ளவும்.

மகா அசுவ கெந்தாதி லேகியம்

குடசப்பாலை விதை, தானிக்காய், பெருங்காயம்,
வெட்பாலை, கடுகுரோகணி, பத்திரச்சிவிதை,
திப்பாலை, நன்னாரி, வட்டத்திருப்பிவேர்,
தக்கோலம், ஜாதிபத்திரி வகைக்கு பலம் - 1

திப்பலி, சுக்கு, மிளகு வகைக்கு பலம் - 5
யிவை யெல்லாஞ் சூரணம் பண்ணிக் கொண்டு
தேன் - மூணுபடி கூட்டி லேகியம் பண்ணி
தாணிய புடத்தி லொரு மாதம் வைத்து பிறகு
யெடுத்துக் கொண்டு வேளைக்கு ரெண்டு
வராகனிடை லேகியமாக யிரண்டு நேரமுஞ்
சாப்பிடவும். யிப்படி ஒரு மண்டலங் கொள்ள
க்ஷயம், அபஸ்மாரம், யிருத்து ரோகம்,
பாண்டு, குன்மம், அரோசிகம், பூரணசூலம்,
ரெத்தகாசம், குருபுறப்பட்டதின் பேரில்
கண்ட கிராணி, சோகை, சூலை, வாதப் -
பயித்தியம் இவையெல்லாந் தீரும். பத்தியம் -
புளிப்பு, கவிச்சு, எண்ணெய், கடுகு இவை
தவிரவும்.

கிந்தாதி லேகியம்

கொம்மட்டி மாதளம்பழச்சாறு பலம் - 16
வாய் விளங்கம், சுக்கு, திப்பலி, மிளகு, ஓமம்
சீரகம், ஏலம், லவங்கப்பட்டை, லவங்கப் -
பத்திரி வகைக்கு பலம் - 1, மண்டூரம் - பலம் - 3,
தேன் - படி யிவையெல்லாம் லேகியமாகச்
செய்து கொள்ளவும்.

அரோசிகத்துக்குக் காற்பாதி லேகியம்

பருத்திப்பருப்பு - பலம் - 3½, வில்வம் வேர் -
பலம் - 3½, புங்கம் வேர், நன்னாரி வேர், விலாமிச்சம்வேர்,
வெட்டிவேர், கருவேப்பிர்க்கு, சித்தாமுட்டி வேர்,

பற்பாடகம், கோரைக்கிழங்கு, நல்லசந்தனம்
சீந்திற்கொடி, கடுக்காய் வகைக்கு - பலம் - 8
நெற்பொரி - பலம் - 32, நிலவிளாமணை - பலம் - 6
183 யிந்த மருந்தெல்லாம் எட்டு மரக்கால் தண்ணீரில்
போட்டுக் காய்ச்சிக் இருணியானவுடனே யிறுத்து
யதில் - சக்கரை - பலம் - 3௨ கூட்டிக் காய்ச்சி
பாகுபதமா யிறக்கி ஆறவிட்டு கொம்மட்டி
மாதளம் பழச் சாறு - நாழி, யிஞ்சிச்சாறு - நாழி
கூடவிட்டு பருத்திப்பருப்பு - பலம் - 2, நெற்பப்-
பொரி - பலம் - 2, அக்கி, திப்பிலி, மிளகு, முந்திரி-
கைப்பழம், பேரீச்சம்பழம், யேலம், லவங்கப்-
பத்திரி, லவங்கப்பட்டை, சிறுநாகப்பூ,
தாளிசபத்திரி, அக்கிராகாரம், சாதிக்காய், சாதிபத்திரி,
அதிமதுரம், கடுக்காய், சீரகம் வகைக்கு பலம் - 2
யிடித்துச் சூரணம் பண்ணி பாகிலே கொட்டிக்
கிளறி தேன் - பலம் - 20 விட்டு லேகியமாகப்
பண்ணி வைத்துக் கொண்டு அந்திசந்தி யிரண்டு
வராகனிடை கொள்ளவும். அகோராசிகம்,
வாய்நீரூறுகிறது, வாந்தி, வயிறு கழிச்சல்
திரிதோஷத்தில் பிறந்த அதிசார மூர்ச்சை யிவை
யெல்லாந் தீரும்.

சகல குன்ம வாய்வுக்கு மாவிலிங்கை லேகியம்

மாவிலிங்கப்பட்டை, முருங்கைப்பட்டை
சுரணைவேர், வெள்ளெருக்கன் யிவை நாலும் வகைக்கு
எலுமிச்சங்காயளவு அரைத்து சித்திர மூலம்வேர்-
பாக்களவு, சோமனாதப் பெருங்காயம் - கழஞ்சு - 1
இவை ஐந்தும் பசுவின்பாலில் வார்த்தரைத்து

மறுபடி ஊமரி பசுவின் பாலில் கரைத்துக்
இளம்பாகக் காய்ச்சி இறக்கி ஆமணக் கெண்ணெய்
விட்டுக் கலக்கி வைக்கவும். அதையெடுத்துக்
கொட்டைப் பாக்களவு எடுத்து இருவேளையும்
தின்னவும். இப்படி ஆறு நாட்கள் பத்தியத்துடனே
தின்னத் தீரும். கையாட்சி

சீதை இன்மத்துக்கும் இலேகியம்

வாழைச்சருகு, கற்றாழைச்சருகு, பலாசம்-
கொடிவேர்ப்பட்டை, நீர்பூங்கு வேர்ப்பட்டை, கொடு-
வேலி, நிலவருவி, புளியம்பட்டை, சதுரக்கள்ளி
கொடிக்கள்ளி, பாலைக்கள்ளி, சாறுவேளை
நொச்சில், எருக்கு, கொட்டைக் கரந்தை, முக்காவேளை, தாழை,
அ. வெள்ளைக் காக்கணம், மாவிலிங்க வேர்
விழுதி ஆனைவணங்காய், சிவனைவேர்
அப்காம் வேர், செங்கத்தாரி வேர்,
பிரண்டை, மருள் பாதிரி, வெட்பாலை, ~~[illegible]~~ செங்கொட்-
காட்டாமணக்கு, பெருங்களருவாய், நிலக்-
-டை, பாமியிலை, இருணி,
களருவாய் வளைக்கிச் சாம்பல், நெட்டறை
புதுச்சுண்ணாம்பு, உடைமண், இவையெல்லாம் பெரிய
வளைக்கு இருணி, கலத்தண்ணீர் வார்த்துக் கலக்கப்
பிடாவிலிட்டு
பிசைந்து ஐந்து நாட்களுறவைத்து, அந்த
அஞ்சு நாளும் தினம் அஞ்சுதரம் பிசைந்து
வைத்து ஆறாம் நாள் சாரம் வாங்கிக் கொண்டு
மத்தளை புடைவையால் வடிகட்டிக் கொண்டு
கொண்டு நாரத்தம்பழச்சாறு, எலுமிச்சம் பழச்சாறு

வெள்ளைப் பூண்டுத் தயிலம் வகைக்கு
இரண்டுபடி அதிலே வார்த்துக் காச்சி பாகுபத-
மானபாகு யவச்சாரம், சத்தியவச்சாரம்
பஞ்சலவணம், நவச்சாரம், வெண்காரம்
படிக்காரம், சவுக்காரம், பொட்டிலுப்பு,
பெருங்காயம், அன்னபேதி, சங்கச்சாரம்
சிறுகிட்டம், திரிபலை, ஓமம், கடுகுரோகணி
கழாப்பருப்பு, லோகபற்பம், தாம்பரபற்பம்
தாளகபற்பம், கெந்தகம், ரசபற்பம், சாதிலிங்-
-கம், துரிசு, துத்தம், ஆக வகைக்குப் பலமொன்று
சூரணமாக்கி பாகு போலே தொட்டுக் கிளறி
லேகியஞ் செய்து கழா பிரமாணம் உண்டை செய்து
நிழலுலர்த்தி அந்தி சந்தி சாப்பிடவும்.

பட்டாதி லேகியம்

பாதிரிவேர் - வீசை-1, பெருமரப்பட்டை வீசை-1
நிலாவரை - வீசை-1 யிவையெல்லாங் கொண்டு
வந்து நறுக்கித் தொழித்து பெரிய பானையிலே
போட்டு நாலுபடி தண்ணீர் வார்த்து அடுப்பில்
வைத்து மெதுவாய் அறுநாட்கள் காச்சி
கஷாயம் நாலொரு பங்கு யிருக்க யிறக்கி
வடிகட்டி வைத்துக் கொண்டு யிதுக்கு
பழவெல்லம் - பலம் - ௨4 கூட்டிப் போட்டுக் கரைத்து
வடிகட்டி மறுநாள் அடுப்பில் வைத்துக் காச்சி
பாகுபோலே வரும்போது யிறக்கி வைத்துக்
கொண்டு யிதுக்கு கற்பம் மருந்து - பற்பாடகம்
தாளிசபத்திரி, மிளகு, சுக்கு, சீரகம் யிவை வகைக்கு
பலம்-1, ஓமம் - பலம் - ௨, கடுக்காய் - 40, தான்றிக்-
காய் - 40, திப்பலி மூலம் - பலம்-1, கொத்தமல்லி பலம்-1

~~[illegible]~~ மாடைபாளை - அளவு எழுதுவம்

வெல்லாரப் கொண்டுவந்திடித்துச் சூரணம் பண்ணி இந்தப் பாகிலே கொட்டிக் கிளறி, இஞ்சிச் சாறு-பலம்-4, எலுமிச்சம் பழச் சாறு-பலம்-4 கூட வார்த்தடுப்பில் வைத்துக் கிளறி இறக்கி வைத்துக் கொண்டு சுத்தி பண்ணின தேன் படி-ஐ கூட வார்த்திழைத்து லேகியப் பக்குவம் பண்ணி வைத்துக் கொண்டு அந்தி சந்தி வேளைக்கு ஒரு [illegible] அளவு கொடுத்து வரத் தீரும் வியாதி - மேகம்-20 வகையும் சூலம்பல், பித்தம், பித்தவாயு பயித்தியம், தலைதிருப்பு, மூர்ச்சை, அஜீரணிகம், கண்ணெரிவு, சுரம், இருமல் மூலவாய்வு, மலபந்தம், அஸ்தி சுரம், அக்கினி-மாந்தம் சகல ரோகங்களுந் தீரும்.

பெரும்பாட்டுக்கு லேகியம்.

கருங்காலிப் பட்டை, நாவல் பட்டை, அத்திப் பட்டை, தென்னம்பாளை, வாழைக்-கட்டை இவை வகைக்கு பலம்-10 கொண்டு வந்து நருக்கித் தொழித்து பெரிய பானையில் போட்டு எட்டுப்படி தண்ணீர் வார்த்து அடுப்பில் ~~[illegible]~~ வைத்துக் காய்ச்சி கஷாயம் இரண்டுபடி யிருக்க வடிகட்டிக் கொண்டு இதுக்கு ~~[illegible]~~ ~~[illegible]~~ நாட்டுச் சக்கரை-பலம்-16 கஷாயத்-தில் போட்டுக் கரைத்து வடிகட்டி மறுகாலடுப்பில் வைத்துக் காய்ச்சி பாகுபோல் வரும்போது, இறக்கி வைத்துக் கொண்டு இதுக்கு கொம்பரக்கு-பலம்-4 கொண்டுவந்து சூரணம் பண்ணி இந்தப் பாகிலே

கொட்டிக்கிளறி சுத்தி பண்ணின தேன் னாழி
கூட வார்த்து மணைத்து லேகியம் போலெடுத்து
வைத்துக் கொண்டு வேளைமாறு கருவேனை
உள்ளங்கை இடி கொண்ட பிரமாணம்
கொடுத்து வரத் தீரும் வியாதி - ரத்தப் பித்தம்,
பெரும்பாடு, ரத்தப்பிரமியம், யோனியின் பிறக்கின்ற
வியாதியெல்லாந் தீரும்.

பெரும்பாட்டுக்கு லேகியம் REPETITION of page 696

அ. அத்திப்பட்டை, கருங்காலிப் பட்டை, தென்னம்-
பாளை, வாழைக்கட்டை, பேராமுட்டி, சித்தா-
முட்டி, இருக்கன்வேர், உத்தாமணிவேர், ~~[illegible]~~
வேப்பம் பட்டை இவை வகைக்கு பலம்-10
கொண்டு வந்து நறுக்கித் தொழுத்துப் பெரிய
பானையில் போட்டு பதினாறு படி தண்ணீர்
வார்த்து அடுப்பில் வைத்துக் காய்ச்சி கஷாயம்
இரண்டு படி யாருக்க வடிகட்டி அதில் ~~[illegible]~~
வெள்ளைச் சக்கரை - பலம்-10 போட்டுக் கரைத்து
வடிகட்டி மறுகால் அடுப்பில் வைத்துக் காய்ச்சி
பாகுபோல் வரும்போ திறக்கி வைத்துக் கொண்டு
மாதுக்கு கொம்பரக்கு பலம்-4 பொடித்துச் சூரணம்
பண்ணி பாகிலே கொட்டிக் கிளறி தேன்-உழக்கு
சுத்தி பண்ணி கூட வார்த்து லேகியம் போலே
மணைத்து வைத்துக் கொண்டு வேளைமாறு
உள்ளங்கை இடி கொண்ட பிரமாணங் கொடுத்து
வரத் தீரும் வியாதி - பெரும்பாடு, ரத்தப்பித்தம், ரத்தப்-
பிரமியம், யோனியின் பிறக்கின்ற வியாதியெல்லாந்
தீரும்.

கண்டங்கத்திரி லேகியம்

கண்டங்கத்திரி வேர் - பலம்-100, சிறுவழுதுணை
தூதுவளை, நாய்கம்பேர் யிவை வகைக்கு
பலம்-18 யிவையெல்லாந் கொண்டு வந்து
பொடிப்பொடியாய் வெட்டி நறுக்கித் தொழித்து
இரண்டு பானையிலே போட்டு தாளித் தண்ணீர்
வார்த்துக் காய்ச்சி கஷாயம் யெட்டொரு
பங்கு யிருக்க வடிகட்டிக் கொண்டு யித்துப்
பழவெல்லம் பலம்-20 உடப் போட்டுக்
கரைத்து வடிகட்டிக் கொண்டு யிதுவுடன்
நொச்சியிலைச் சாறும் பொடுதலைச் சாறும்
ஆடாதோடை யிலைச் சாறும் பிரமியிலைச்
சாறும் நாலு வகையுமாகக் கூட வார்த்துக்
காய்ச்சி பாகுபோல் வரும்போது இறக்கிவைத்துக்
கொண்டு ~~[illegible]~~
யிதுக்குக் கற்கடம் சுக்கு-
அக்கு, திப்பலி, மிளகு, கற்கடகசிங்கி, செவியம்
கடுக்காய், தான்றிக்காய், நெல்லிப் பருப்பு, கோஷ்டம்
சிறுதேக்கு, வசம்பு, பெருங்காயம், சடாமாஞ்சி
சீரகம், கருஞ்சீரகம், ஏலம், ~~[illegible]~~ சாதிக்காய்
திக்கோலம் போட்டு ஆனைத்திப்பலி, வாய்விளங்-
அரிசி யிவை வகைக்கு பலம்-2 கொண்டு
185. வந்திறுத்துச் சூரணம் பண்ணி பாகிலே தூவிக்
கிளறி சுத்தி செய்த தேன் வார்த்து லேகிய பக்குவம்
பண்ணி வைத்துக் கொண்டு இரண்டு வேளையும்
வேளைக்கு கிராகணிடை கொடுத்துவர க்ஷயம்
11 வகையும் மலி... வாதம், பாண்டு,
ஜென்மகுன்மம், சுவாசகாசம், அக்கினிமாந்தம்
யிவை யெல்லாந் தீரும்.

மகா வீரிய விர்த்திக்கு லேகியம்

சடைக் கஞ்சா - பலம் - 5, முருங்கைப் பூ - பலம் - 20, முருங்கைப் பிஞ்சு - பலம் - 20. இவற்றைச் சட்டியில் போட்டு தண்ணீர்ப்படி பசுவின் பால் வார்த்துக் காய்ச்சி தண்ணீரை அடுப்பிலிருக்க இறக்கி ஆற வைத்து இந்த மருந்தை நன்றாய் பிசைந்து வடிகட்டிக் கொண்டு இதற்கு சர்க்கரை - பலம் - 4, பசுவின் நெய் - பலம் - 4 கூட வார்த்து இந்த எண்ணெயைச் சட்டியில் வார்த்துக் காய்ச்சும் போது இதற்கு சேர்க்க மருந்து - சாதிக்காய், சாதிபத்திரி, நீர்முள்ளி விதை, இவைகள் வகைக்கு பலம் - 2 கொண்டு வந்திடித்துச் சூரணம் பண்ணி காய்கிற பாகிலே போட்டுக் கிளறி லேகிய பதத்திலே இறக்கி வைத்துக் கொண்டு அந்திமாலை வராகனிடை லேகியம் கொடுத்து வரவும் இப்படி பதினைந்து நாட்கள் கொடுத்து வர சரீரம் பொன்போலுண்டாகி இரத்தபுஷ்டி உண்டாம் வீரிய விர்த்தி உண்டாம். அக்கினிப் பலமுண்டாம். பத்தியம் - பசுவின் பாலுஞ் சோறுமாகச் சாப்பிடவும். ~~[illegible]~~ மத்தவற்றையெல்லாந் தள்ளவும் 15 நாட்கள் சென்ற பிறகு ஸ்திரி சங்கமஞ் செய்யலாம். சத்துவம் உண்டாம்.

ஆண்மைப் பட்டவர்களுக்கும் விதை வாதக் ஜெக்கும் தூதுவளை லேகியம்

தூதுவளைப் பூ, அதின் பிஞ்சு, காய், பழம், இலை இந்த ஐந்தும் சமனெடை சேர்த்து இதற்குப் பாதி மிளகு, மிளகுக்குப் பாதி உரித்த வெள்ளைப் பூண்டு,

தோல்நீக்கி சுத்தித்த

பூண்டுக்குப் பாதி கொதுணாரின்பாதி பழம்புளி,
புளித்தவிர மத்ததெல்லாம் நெய் உளற்றிப் பதமாக
கருகாமல் வறுத்து அம்மியிலிட்டு பழம்புளியும்
அ. ஆட்டுக் கூடப் போட்டு மறுபடி நெய் விட்டு
அரைமணி நேரம் மைபோல் அரைத்து லேகியம்
போலே வைத்துக் கொண்டு அரமணைப்பட்டதுக்கு
விதைஅரங்களுக்கும் அதுவளைக்காயளவு 4 நாட்கள்
5 நாட்கள், 3 நாட்கள் கொடுக்கவும். பத்திய-
மில்லை. துகையுடு சாப்பிடவும். இறைச்சி,
தயிர், மோர் கூட்டலாம். வாதஅரம் அதிகரித்து
நின்றால் சங்கோல் பிடித்துச் சாறு பிழிந்து
முறித்து - பர சாத்தின் ஒரு வராகனிடை
கோரோசனைம் பிழைத்துக் கொடுக்கவும். தீரும்.
கையாட்சி.

பறங்கிப் பட்டை லேகியம்

பறங்கிப்பட்டை - பலம்-10, கடுக்காய்,
ஏலம், அக்கி, திப்பலி, மிளகு, நெல்லிமுள்ளி
கிராம்பு, சாதிபத்திரி, லவங்கப்பட்டை, குரோ-
சாணி ஓமம், வாய்விளங்கம், ஓமம், அரத்தை
சிறுதேக்கு, செவியம், திப்பலி மூலம், கொத்தமல்லி
சீரகம், சடாமாஞ்சில், கோஷ்டம், அதிமதுரம்
விளாமிச்சம் வேர், கோரைக்கிழங்கு, நன்னாரிவேர்
சிறுநாகப்பூ, கைப்பானையரிசி, வாலுளுவையரிசி,
அரேணுகம் வகைக்கு வராகனிடை - 2-ரு
தண்ணீர்விட்டான் கிழங்கு - பலம் -1, நிலப்பனைக்-
கிழங்கு - பலம் - 2 யாவத் சரக்குகளுக்கும்

அரியடை சீனி, தேன் சேர்-1, நெய் சேர்-1
சீந்தில் சக்கரை-பலம்-4 யிவை யெல்லாம் சேர்த்துச்
செய்து தின்பட முன் தலைப்பில் சொன்ன வியாதி
யெல்லாந் தீரும்.

வில்வாதி லேகியம் (வேறு)

வில்வப்பத்திரி வேர்-பலம்-33 கொண்டு வந்து
பொடியாய் வெட்டி பெரிய பானையில் போட்டு
பதக்குத் தண்ணீர் வார்த்துக் காய்ச்சி எட்டிலொரு
பாகு யிருக்க வடிகட்டிக் கொண்டு யிதுக்குப்
பழவெல்லம்-பலம்-33 கூடப் போட்டுக் கரைத்து
வடிகட்டி மறுகால் காய்ச்சி பாகு பதத்தில் யிறக்கி
வைத்துக் கொண்டு யிதுக்கு கற்கம் மருந்து -
திப்பிலி, திப்பிலி மூலம், செவியம், தாளிசபத்திரி,
சுக்கு, மிளகு, யிந்துப்பு, ஆனைத்திப்பிலி,
வாய்விளங்கம், பச்சைக் கொடிவேலிவேர்,
பெருங்காயம், ஏலம், லவங்கப்பத்திரி, சீரகம்
36 கற்கடகசிங்கி, கடுக்காய் யிவை வகைக்கு
பலம்-2 கொண்டு வந்திடித்துச் சூரணம்
பண்ணி யிந்தப் பாகிலே கொட்டிக் கிளறி
கெட்டியப் பக்குவத்தில் சுத்தி பண்ணின தேன்-2படி
சக்கரை போட்டுக் கிளறி லேகிய பக்குவமாக
யிறக்கிக் கொண்டு யிரண்டு வேளையும்
வெண்ணைக்கு வராகனெடை லேகியம் கொடுத்து
வர தீரும் வியாதி - வாந்தி, விக்கல், பயித்திய-
குன்மம், பாண்டுரோகம், க்ஷயக்கிராணி, நெஞ்செரிவு
உட்காய்ச்சல் யிவை யெல்லாந் தீரும். பத்தியம்-
அவிச்ச . புளிப்புத் தவிரவும்.

வில்வாதி லேகியம் (வேறு)

வில்வபத்திரிவேர் - பலம் - 50 கொண்டுவந்து பொடிப்பொடியாய் வெட்டியிடித்து பெரிய பானையில் போட்டு பதக்குத் தண்ணீர் வார்த்துக் காய்ச்சி கஷாயம் நாலொருபங்கு யிருக்க வடிகட்டிக் கொண்டு யிதுக்குப் பழவெல்லம் - பலம் - 16 உடைப்போட்டுக் கரைத்து வடிகட்டி மறுக்கவுங் காய்ச்சி பாகு போலே வந்த போது யிறக்கி வைத்துக் கொண்டு யிதுக்கு கற்கம் மருந்து - கோரைக்கிழங்கு, கொத்தமல்லி, ஏலம், லவங்கம், சீரகம், நாகேசுரம், சுக்கு, திப்பிலி, மிளகு, அதிமதுரம், திராட்சிப்பழம், நெல்லிப்பருப்பு யிவை வகைக்கு பலம் - ௩ கொண்டுவந்திடித்துச் சூரணம் பண்ணி பாகிலே கொட்டிக் கிளறி லேகியம் போலே யிறக்கி வைத்துக் கொண்டு இரண்டு வேளையும் வேளைக்கு வராகனிடை லேகியமாய் கொடுத்துவரத் தீரும் வியாதி - பயித்தியவாய்வு, தலைதிருப்பு ஆம்பல் பித்தம், வாந்தி, பித்தசோகை, க்ஷயம், சுவாசம் அரோசிகம் யிவை யெல்லாந் தீரும்.

வில்வாதி லேகியம் (வேறு)

வில்வபத்திரிவேர் - பலம் - 100, சித்திரமூட்டிவேர் பேராமுட்டிவேர், சங்கம்பட்டை யிவை வகைக்கு பலம் - 25, நன்னாரிவேர், பருத்திக் கொட்டை, நெல்லிப்பருப்பு யிவை வகைக்கு பலம் - 15, பச்சைப்பயறு, தர்ப்பைப் புல்லுவேர், கோரைக்
அ. கிழங்கு, வெட்டிவேர், கொத்தமல்லி, தண்ணீர்விட்டான் -

கிழங்கு, நெருஞ்சில், நரிப்பயற்றம் வேர், சீந்தில்
முசுமுசுக்கை யிவை வகைக்கு பலம்-12, சுக்கு-
பலம்-25 [struck out] யிவையெல்லாம்
கொண்டு வந்து நறுக்கித் தொகுத்து பெரிய
பானையில் போட்டு நாற்பத்தெட்டு மரக்கால்
நீர் வார்த்து அடுப்பில் வைத்து மெதுவாய் ஏழு
நாட்கள் காய்ச்சி கஷாயம் எட்டிலொன்றா-
யிருக்க வடித்து கட்டிக் கொண்டு யிதுக்குப்
பழவெல்லம் - பலம் - 81 கஷாயத்தில் போட்டுக்
கரைத்து வடிகட்டிக் கொண்டு யிதுவும்
யிஞ்சிச்சாறு பலம்-40, நெய்-பலம்-அ, கொடு-
வெற்றிலைச்சாறு பலம்-16 கொடிமாதளம்பழச்-
சாறு யிவையுங் கூட்டி வார்த்து அடுப்பில்
வைத்து மெதுவாகக் காய்ச்சிக் குழம்பாய்ப்
பாகுபோலே வரும்போ திறக்கி வைத்துக்கொண்டு
[struck out] யிதுக்கு கற்கம் மருந்து - திப்பிலி -
பலம்-10, மிளகு-பலம்-5, குங்குமப்பூ-
பலம்-9, சுக்கு-பலம்-8, சீரகம்-பலம்-8
திப்பிலி மூலம், தான்றிக்காய், நெல்லிப்பருப்பு, ஏலம்
யிவை வகைக்கு பலம்-5, தப்பஞ்சிறி, அதிமதுரம்
தாளிசபத்திரி, லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி,
லவங்கம், நாகேசரம் யிவை வகைக்கு
பலம்-2, சாதிக்காய், சாதிபத்திரி, கோரோசனை
வாய்விளங்கம், கண்டுபாரங்கி, அரத்தை யிவை
வகைக்கு பலம்-1 யிவையெல்லாங் கொண்டுவந்-
திடித்துச் சூரணம் பண்ணிக் கொண்டு பாகிலே
கொட்டிக் கிளறி கெட்டி பக்குவத்தில்

அத்தி பண்ணினை தேன் - பலம் - 40 கூட வார்த்து
லேகியம் போலவே இழைத்து வைத்துக் கொண்டு
இரண்டு வேளையும் வேளைக்கு ஒரு மாடை
யளவு லேகியம் கொடுத்து வரத் தீரும் வியாதி -
பித்தம் நாற்பது வகையும் தீரும்.

வில்வாதி லேகியம் (வேறு)

வில்வப் பத்திரி வேர் - பலம் - 100, முக்காவேளை -
பலம் 60, சாறுவேளை வேர், நாய்வேளை வேர்,
187. சித்தாமுட்டி வேர், பேராமுட்டி வேர், வரன்முள்ளி -
வேர், பாதிரி வேர், நன்னாரி வேர் இவை வகைக்கு
பலம் - 10 கொண்டுவந்து நருக்கித் தொழுத்து
பெரிய பானைகளில் போட்டு இருபத்தெட்டு
மரக்கால் தண்ணீர் வார்த்து அடுப்பில் வைத்து
மெதுவாய் ஏழுநாட்கள் காய்ச்சி கஷாயம்
யெட்டிலொன்றா யிருக்க வடிகட்டிக்
கொண்டு இதுவுடன் பனைவெல்லம் - பலம் - 40
கஷாயத்தில் போட்டுக் கரைத்து வடிகட்டிக்
கொண்டு மறுக்கால் அடுப்பில் வைத்து
மெதுவாய்க் காய்ச்சி பாகுபோலவே வரும்போது
இறக்கி வைத்துக் கொண்டு இதுக்கு கர்க்கம்
மருந்து - லவங்கம், ஏலம், சீரகம், கொத்து-
மல்லி, அக்கி, திப்பிலி, மிளகு, லவங்கப்பட்டை
லவங்கப்பத்திரி, மஞ்சிட்டி, கண்டுபாரங்கி
அரத்தை, திப்பிலி மூலம், நாககேசரம், தபசீரி,
வெட்டி வேர், இருவேர், கிச்சிலிக்கிழங்கு, கடுக்காய்,

தானிக்காய், நெல்லிப்பருப்பு, இலவங்கம், அக்கரா-
காரம், அதிமதுரம் இவை வகைக்கு பலம் - 2,
இலுப்பைப்பூ, கோரோசனை, பச்சைக்கற்பூரம்
இவை வகைக்கு வராகனெடை - 1 இவையெல்லாம்
கொண்டு வந்திடித்துச் சூரணம் பண்ணிக் கொண்டு
இந்தப் பாகிலே கொட்டிக் கிளறி கெட்டி பக்குவத்தில்
அத்தி பண்ணின தேன் படி - 1 கூட்ட வார்த்து
லேகியம் போலே இறக்கி வைத்துக் கொண்டு
இரண்டு வேளையும் வேளைக்கு இருமாடை
இடை பாக்காரம் லேகியம் கொடுத்து வரத்
தீரும் வியாதி - அரோசிகம், அக்கினிமாந்தம்,
அவாச காசம், வாந்தி, வாத பித்த சிலேஷ்டும
விகாரம் இவையெல்லாந் தீரும்.

சிந்தாதி லேகியம்

புளியாரை - பலம் - 100, இரும்பு - பலம் - 50
கொடுவேலி வேர் பலம் - 50, சிறு தேவதாரம் -
பலம் - 25, சாறு வேளை வேர் - பலம் - 25, வட்டத்-
திருப்பி, சிந்தி, முக்காவேளை, கொத்தமல்லி
வெட்பாலைப் பட்டை இவை வகைக்கு
அ. பலம் - 16, சவ்வியம், திப்பிலி மூலம், காட்டாமணக்கு
கிழங்கு, தழுதாழை வேர், பாதிரி வேர், சிறுவழுதுணை-
வேர், சித்தாமுட்டி வேர், நென்குமிழம் வேர்,
கீழாநெல்லி, சித்தாமல்லி, பேராமல்லி, வில்வ-
பத்திரி வேர் இவை வகைக்கு பலம் - 4 இவை-
யெல்லாம் கொண்டு வந்து நறுக்கித் தொழித்து

மூணு பானையில் போட்டு புளியனையும் யிரும்பு-
மாக ஒரு பானையில் போட்டு நாற்பது படி
தண்ணீர் வார்த்து அடுப்பில் வைத்து மெதுவாக
காய்ச்சி கஷாயம் நாலிலொன்றா யிருக்க
வடிகட்டிக் கொண்டு யிதுக்கு பழவெல்லம்
பலம்-50 கஷாயத்தில் போட்டுக் கரைத்து
வடிகட்டிக் கொண்டு யிதுவும் புளியாரைச்
சாறு-படி-௨, கொடிமாதளம்பழச் சாறு படி-௨
யிவற்றையுங் கூட வைத்து அடுப்பில் வைத்துக்
காய்ச்சி பாகு போலே வரும்போது யிறக்கி
வைத்துக் கொண்டு யிதுக்கு கற்க மருந்து -
வாய்விளங்கம், சுக்கு, திப்பிலி, மிளகு, ஏலம்,
கிச்சிலிக் கிழங்கு, சன்னலவங்கப் பட்டை, தாளீச-
பத்திரி யிவை வகைக்கு பலம்-1 கொண்டுவந்து-
இடித்துச் சூரணம் பண்ணிக் கொண்டு யிதுவும்
மண்டூரம் - பலம்-2, லோகபஸ்பம் - பலம்-3
யிவையெல்லாங் கூடப் போட்டுக் கிளறி
கெட்டிப் பக்குவத்தில் சுத்தி பண்ணின தேன் படி-௨
கூட வார்த்து லேகியம் போலே யிழைத்து வைத்துக்
கொண்டு இரண்டு வேளையும் வேளைக்கு
மூணு மாடை யிடை லேகியம் கொடுத்து வரத்
தீரும் வியாதி - வீக்கம், பாண்டுவும், காமாலை
விஷப்பாண்டுவும், ஐயப் பாண்டுவும் வகையின்
பிறக்கின்ற சுவாசகாசம், பெருவயிறு பாண்டுவும்
சோகையும், மூலவாய்வும் அக்கினி மாந்தம்
யிவை யெல்லாந் தீரும்.

REPETITION
Cf P 688

நெல்லிக்காய் லேகியம்

நெல்லிக்காய்ச் சாறு படி – 8, பழவெல்லம் –
பலம் – 112 கொண்டு வந்து சாற்றில் போட்டுக்
188 கரைத்து வடிகட்டிக் கொண்டு அதுடன் பசுவின்
நெய் – நாழி, தேன் – நாழி அத்தி பண்ணின திவ்வியச்
சூரணம் பலம் – 4 இவைகளையுங் கூட்டிச் சேர்த்து
அடுப்பில் வைத்து மெதுவாய்க் காய்ச்சி பாகுபோலே
வரும் போது இறக்கி வைத்துக் கொண்டு இதுக்குக்
கற்கம் – மருந்து – ஏலம், லவங்கம், லவங்கப்
பத்திரி, நாககேசரம், வெட்டிவேர், மதுக்கம், தவசுமுருங்கை,
கருஞ்சீரகம், கண்டுபாரங்கி, நல்லசந்தனம், லாமிச்சம்
வேர், தேவதாரம், வில்வப்பழம் இவை வகைக்கு
பலம் – 1 கொண்டு வந்து இடித்துச் சூரணம் பண்ணி
அந்தப் பாகிலே கொட்டிக் கிளறி இறக்கின பக்குவமா-
யிறக்கி வைத்துக் கொண்டு அதுக்கு மேல் பொடி
மருந்து – திராட்சிப்பழம், பேரீச்சம் பழம்,
சயாந்திரவரணம், லவங்கப்பட்டை, லவங்கப்
பத்திரி, தாளிசபத்திரி, கிச்சிலிக்கிழங்கு இவை
வகைக்கு பலம் – ½ கொண்டுவந்திடித்துச் சூரணம்
பண்ணி மேல்பொடி தூவிக் கிளறிக் கொடுத்து
அத்தி பண்ணின தென்வார்த்து லேகிய பக்குவம்
பண்ணி வைத்துக் கொண்டு இரண்டு வேளையும்
வேளைக்கு வராகனிடை லேகியம் கொடுத்து வரத்
தீரும் வியாதி – சூம்பல், பித்தம், வாந்தி, ஏகாரப்-
பித்தியம், தலைசுற்று, அரோசிகம், கண்சிறுத்தை,
பாரம் இவையெல்லாந் தீரும்.

கோவின் வாதி லேகியம்.

வில்வப் பத்திரி வேர் - பலம்-30, சித்தாமுட்டி-
வேர் - பலம் - 20, சிறுவழுதிலம் வேர் - பலம் - 20
காட்டு வாழை வேர்ப்பட்டை - பலம் - 100, மயிற்-
திருப்பி வேர்ப்பட்டை - பலம் - 10, நிலக்குமிழ் வேர் -
பலம் -10, பாதிரி வேர் - பலம் -10, கண்டங்கத்திரி-
பலம் -10, நெருஞ்சில் வேர் - பலம் -10, சித்தாமல்லி-
பலம்-10, பேராமல்லி - பலம் -10 யிவையெல்லாம்
கொண்டு வந்து பொடிப்பொடியாய் வெட்டித்
தொழித்துப் பானையில் போட்டு நாலு மரக்கால்
தண்ணீர் வார்த்து அடுப்பின் வைத்துக் காச்சி
கஷாயம் நாலொன்னா யிருக்க யிறக்கி
வடிகட்டிக் கொண்டு யிதுக்கு பழவெல்லம்-
பலம் - 30 கூட்டிப் போட்டுக் கரைத்து
அ. வடிகட்டிக் கொண்டு யிதுவும் வெண்ணெய்-
வைத்தியச்சாறு - பலம் -12, யிஞ்சிச் சாறு பலம்-
12, பச்சைப் பயத்தங்காடு - பலம் -12, நல்லெண்-
ணெய் - பலம் -12 யிவைகளையுங் கூட
போட்டுக் கஷாயம் - பலம் -12 யிவற்றையுங் கூட
சேர்த்துக் காச்சி பாகுபோல் வரும்போது
வார்த்துக் காச்சி யிறக்கி வைத்துக் கொண்டு யிதுக்கு கற்கம்-
மருந்து - சுக்கு, திப்பிலி, மிளகு, சீரகம்,
கொத்துமல்லி, ஏலம், சதகுப்பை, வெட்டிவேர்,
சின்னாளச்சுரம், சாதிக்காய் பத்திரி, சந்தனம்,
லவங்கம், லவங்கப்பத்திரி, சன்னலவங்கப்
பட்டை, அரத்தை, கீழாநெல்லி, கருஞ்சீரகம்-
கன்னி யிவைகளுக்கு பலம் - 2 கொண்டு
வந்து யித்துச் சூரணம் பண்ணிக் கொண்டு
பாகிலே கொட்டிக் கிளறி அத்தி பண்ணின தேன்-
பலம் -8 கூட வார்த்துக் கிளறி லேகியம்

பக்குவம் பண்ணி வைத்துக் கொண்டு இரண்டு
வேளையும் வேளைக்கு ஒண்ணரை வராகனிடை
லேகியமாய் கொடுத்துவரத் தீரும் வியாதி - சுவாச-
காசம், பாண்டுரோகம், காமாலை, பித்தவெட்டைச்
பிரமேகம், க்ஷயம், மேனி அழுத்தமையாடிப்பு, அஸ்தி-
வாதம், மூத்திர ரோகம், நேத்திர வாய்வு, மூத்திக்
கிரிச்சரம், வாதபித்த சிலேஷ்மம், க்ஷயம், அரோ-
சிகம், அந்திர ரோகம், விஷசு வாந்தி, அஜீரணம்
முதலியவையெல்லாந் தீரும்.

சிறுபங்கு வில்வாதி லேகியம் (வேறு)

முக்காவளைவேர், வில்வப் பத்திரி வேர்-
வெள்ளைச் சங்கம்வேர் இவை வகைக்கு பலம்-20,
பேராமுட்டி வேர் - பலம்-10, சித்தாமல்லி, பேரா-
மல்லி, வரள்முள்ளி வேர், கண்டங்கத்திரிவேர்,
சாரணை வேர், குதிரைவாலி வேர், விளாமிச்சம்-
வேர், சீந்திக்கொடி, மரமஞ்சள், வட்டத்-
திருப்பி வேர், கண்டுபாரங்கி, நன்னாரி வேர்,
இவை வகைக்கு பலம்-5 கொண்டு வந்து
நறுக்கித் தொழித்துப் பெரிய பானையில் போட்டு
அறுபத்து நாலு படி தண்ணீர் வார்த்தடுப்பின்
வைத்து மெதுவாகக் காய்ச்சி கஷாயம் நாலி
லொரு பங்கு பதினாறு படி யிருக்க யிறுத்து வடி-
9. கட்டிக் கொண்டு இதுக்கு முப்பத்து இரண்டு
பலஞ் சக்கரை இட்டுப் போட்டுக் கரைத்து
வடித்து வடிகட்டிக் காய்ச்சி பாகு போலே
வரும் போது இறக்கி வைத்துக் கொண்டு இதிற்-

கற்கம் - மருந்து - ஏலம், லவங்கப் பட்டை
லவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ, சுக்கு, திப்பிலி,
மிளகு, சீரகம், கருஞ்சீரகம், தாளிசபத்திரி,
அரத்தை, ஓமம், குரோசாணி ஓமம், இந்துப்பு,
திப்பிலி மூலம், கொத்தமல்லி, ஜாதிக்காய் -
கோஷ்டம் இவை வகைக்கு பலம் - 1
கொண்டுவந்து இடித்துச் சூரணம் பண்ணி பாகில்
கொட்டிக் கிளறி யாவும் வேகவைத்தரைத்தும் -
பலம் - 1, மண்டூரம் - பலம் - 1 கூடப் போட்டுக்
கிளறி அத்தி பண்ணின தேன் - படி - 1 கூட வார்த்துக்
கிளறி லேகம் பக்குவம் பண்ணி வாய்மூடிக்
கட்டி ஒருமாதம் நெல்லுக்குள் புதைத்து வைத்-
தெடுத்துக் கொண்டு இரண்டு வேளையும்
வேளைக்கு ஒரு வராகனிடை கொள்ளவும்
நேத்திர கண்ணன் வாத அருக்கிச அருக்கு
பெண்டுக் கருவிருத்து, தகிகிரம் மீன்நாத்த-
மான நாறுகிறது யாப்பட்ட வியாதி -
யெல்லாந் தீரும்.

இதுசெட்டு சூத்திரப் பயாதி

லேகியம்

கண்டங்கத்திரி - 200, ஆடுதொடை - பலம் - 100,
சீந்தில் தண்டு, காந்த சோற்றுவாழை, முருக்கம் -
கிழங்கு, கிளாவேர், காட்டாமணக்கம் வேர்,
இன்னவேர், நொங் தொண்ணை வேர், கொடிவேலி,
மணத்தக்காளி, மந்தாரை வேர், பாதிரிவேர்,

வட்டக்கிலுகிலுப்பை வேர், யிலுப்பை வேர்,
பிநாயம் வேர், பெருங்கிழங்குருன், கருங்காலிப்-
பட்டை, அமுக்கிறாக்கிழங்கு, நிலாவாரை
சிறுமதண்டு வேர், யிலவம் வேர் காட்டுமுருக்-
அ. கம் வேர் சாங்கம் வேர், எருக்கம் வேர், நொச்-
-சில் வேர், கருநொச்சில் வேர், ஆடாதோடை-
வேர், குப்பைமேனி வேர், திருக்கள்ளி வேர், காக்-
கணான் வேர், முட்கரந்தை வேர், வெட்டி வேர்,
நன்னாரி வேர், பேய்ப்புடல், வில்வப் பத்திரி வேர்,
செம்நெருஞ்சில் வேர், காட்டுவாகை வேர்,
விஷ்ணுகிரந்தி வேர், சூரியகிராந்தி, சாறு-
வேளை வேர், வெள்ளைச் சாறுவேளை வேர்,
நிலவேம்பு, பிரண்டை, மருள்கிழங்கு, கொன்றை
வேர், கொட்டைக்கரந்தை, நாயுருவி,
செம்பை வேர், தீனை வேர், கிலுகிலுப்பை வேர்,
மாவிலிங்கம் வேர், வேப்பம் வேர், அரசம்பட்டை,
வன்னி வேர், வாதுநீ வேர், சடைச்சிலக்காய்,
நாவல் பட்டை, மரமஞ்சள், தக்காளி,
புரசம் வேர், அவரி வேர், ஆடுதின்னாப்-
பாளை வேர் இவை வகைக்கு பலம் -64
கொண்டு வந்து நறுக்கித் தொழித்து பெரிய
பானையில் போட்டு எண்பத்து நாலு மரக்கால்
தண்ணீர் வார்த்து அடுப்பில் வைத்து மெதுவா
எழுநாட்கள் காய்ச்சி கஷாயம் எட்டி-
லொன்றாய் சுருக்கி வடிகட்டிக் கொண்டு
யாதுவம் - கடுக்காய் - பலம் -100, நெல்லிப்பருப்பு-
பலம் - 50, தான்றிக்காய் - பலம் - 25 இந்த மூன்று

வகையும் கொண்டு வந்து நறுக்கி கொட்டையை
யெடுத்துப் போட்டிடித்து பானையில் போட்டு
எட்டு மரக்கால் கோமூத்திரம் வார்த்து ரெண்டு
நாளூற வைத்து பிறகு காய்ச்சி கஷாயம் எட்டி-
லொன்றாக யிருக்க வடிகட்டி ரெந்த கஷாயத்தில்
கூட வார்த்து யிதுக்கு பழவெல்லம் - பலம் - 100
யிந்தக் கஷாயத்தில் போட்டுக் கரைத்து வடி
கட்டிக் கொண்டு யிதுக்குச் சாறு வகைகள் -
செருப்படைச் சாறு, யெருக்கம் பழுப்புச் சாறு
தூதுவேளைச் சாறு, துளசிச் சாறு, முசுமுசுக்கைச்-
சாறு, பிரமியிலைச் சாறு, பொன்னாங்கண்ணிச்-
சாறு, கார்புரவள்ளிச் சாறு, கீழாநெல்லிச்சாறு,
கரிசலாங்கண்ணிச் சாறு, பச்சைமஞ்சள் சாறு,
செம நெருஞ்சில் சாறு, யிஞ்சிச் சாறு,
190 சொள்ளுக்கட்டு, நரிபயத்தஞ் சாறு, தொடிமாதளம்-
பழச் சாறு, முக்காவேளைச் சாறு யிவை வகைக்குச்
சாறு - முன்னாழி யிவற்றையும் ~~கூ~~ட வார்த்துக்
காய்ச்சி குழம்பாய்ப் பாகுபோல ~~[illegible]~~ யிருக்க யிறக்கி
வைத்துக் கொண்டு யிதுக்கு கந்தம் - மருந்து -
கண்டுபாரங்கி - பலம் - 20, திப்பலி, ஆனைத்-
திப்பிலி, திப்பலமூலம் யிவை வகைக்கு பலம் 5
சந்தனம், அகில் செக்கை, லவங்கமூலம்,
கோஷ்டம், மிளகு, சுக்கு, ~~[illegible]~~ செவியம்,
அக்கிராகாரம், சாதிபத்திரி, கோரைக்கிழங்கு,
ரேணுகம், இருவேர், எவச்சாரம், சத்திமெச்-
சாரம், வெண்காரம் யிவை வகைக்கு பலம் - 6

வாய்விளங்கம், வெங்கப் பட்டை, வெங்கப்-
பத்திரி, நாகேசரம், ஏலம், லவங்கம், தேத்தான்-
கொட்டை, ஆவாரம் விரை, சீரகம், கருஞ்சீரகம்
அரத்தை, கற்கடகசிங்கி, கண்டங்கத்திரி விரை
தூதுவளை விரை யிவை வகைக்கு பலம்-4
கொண்டுவந்திடித்துச் சூரணம் பண்ணிக் கொண்டு
யிந்தப் பாகிலே கொட்டிக் கிளறி கொட்டிப்
பக்குவமாக யிறக்கி வைத்துக் கொண்டு
அத்தி பண்ணின தேன் கிறுணி கூட வார்த்துக்
கிளறி லேகபக்குவம் பண்ணி வைத்துக்
கொண்டு யிதுக்கு மென்னபொடி மருந்து -
கஸ்தூரி, குங்குமப்பூ, கோரோசனம், குசும-
பரப்பூவு, ருத்திராட்சம் யிவை வகைக்கு
துலாம்-௨ கொண்டுவந் தரைத்துப் பொடி
செய்து லேகியத்தில் தூவிக் கிளறி மரப்பாண்ட-
த்தில் யெடுத்து வெய்க்கவும் தானிய புடத்தில்
ஒரு மாதம் வைத்தெடுத்துக் கொண்டு ரெண்டு
வேளையும் வேளைக்கு வராகனிடை
லேகியம் கொடுத்து வரத் தீரும் வியாதி - சுவாசம்
அசுவகையும் காசம் அஞ்சு வகையும்
யுதிர ரோகம் யெட்டு வகையும் சிலேட்டும
ரோகம் யிருபது வகையும் மின்னம் எட்டு
வகையும் பித்தரோகம் யிருபது வகையும்
சோகை ரோகம் பதினொரு வகையும்
ஜுரமும் பதினொரு வகையும் மேகம் யிருபது
வகையும் மூல ரோகம் ஆறு வகையும் கிராணி
நாலு வகையும் விசர்ப்ப ரோகம் இருபது வகையும்

சுரம் அறுபத்திநாலு வகையும் அதிர்வாதம்
அஜீரண வாய்வு, கிருமி ரோகம், குஷ்டரோகம்
நாகரோகம், நேத்திர ரோகம், ரத்த ரோகம்
வலிப்பலிதனாசம் இப்படிப்பட்ட வியாதியெல்-
-லாந் தீரும்.

மகா சித்திராதி லேகியம்

கண்டங்கத்திரி - பலம் - 100, ஆதண்டை,
தாதுவளை, துளசி, மணத்தக்காளி, சங்கம்பட்டை,
கையாந்தகரை, உத்தாமணி, ஆடாதொடை,
வில்வப்பத்திரி வேர், சித்தாமல்லி, பேராமல்லி,
சித்தாமுட்டி வேர் இவை வகைக்கு பலம் - 25
இவையெல்லாம் நருக்கித் தொழுத்து பெரிய
பானையில் போட்டு எட்டு மரக்கால் தண்ணீர்
வார்த்தடுப்பில் வைத்து மெதுவாய் ஏழுநாட்கள்
காச்சி கஷாயம் குறுணி இருக்க வடிகட்டி
பழவெல்லம் - பலம் - 30 கூடப் போட்டுக்
கரைத்து வடிகட்டி மறுபடி அடுப்பில் வைத்துக்
காச்சி பாகு போலே இறக்கி வைத்துக் கொண்டு
இதுக்கு - கற்கம் மருந்து - தேன் - படி இரண்டு
லவங்கப்பத்திரி, வாய்விளங்கம், கொத்தமல்லி,
தாளிசபத்திரி, மிளகு, திப்பிலி, திப்பிலிமூலம்,
அக்கி, கடுக்காய், தானிக்காய், நெல்லிப்-
பருப்பு, செங்கழுநீர், கோஷ்டம், ஏலம்,
லவங்கம், லவங்கப்பட்டை, வெட்டிவேர்,
விலாமிச்சம் வேர், நல்ல சந்தனம், பேரிச்சம்பழ
சீரகம், கருஞ்சீரகம், நாகப்பூ, சிறுநாகப்பூ-

சிறுதேக்கு, கற்கடகசிங்கி, காந்த பற்பம்,
சாலாமிசிரி, கோஷ்டம், முத்தக்காசு, சவுக்காரம்,
வெள்ளைச்சாரம், படிக்காரம், ரேணுகம் இவை
191. யெல்லாம் வகைக்கு பலம்-1 கொண்டுவந்-
திடித்துச் சூரணம் பண்ணிப் பாகிலே கொட்டிக்
கிளறி கொட்டிப் பக்குவத்தில் இறக்கி வைத்துக்
கொண்டு அத்திபண்ணின தேன் கூட வார்த்துக்
கிளறி லேகம்போ லிழைத்து வைத்துக் கொண்டு
இரண்டு வேளையும் வேளைக்கு வராகனிடை
லேகியம் கொடுத்து வரத் தீரும் வியாதி - சுவாச-
காசம், உப்புசம், பொருமல், க்ஷயரோகம்,
பக்கசூலை, இருமல், ரத்தவாயு இவை-
யெல்லாந் தீரும். பத்தியம் - பால், நெய் தவிர்க்கவும்

அப்பன்ன லேகியம்

பேய்ப்புடல், வில்வபத்திரி வேர், நன்னாரி-
வேர், சித்தாமுட்டி, சீந்தில் கொடி, சாரு-
வேளை, முன்னைவேர், சிறுவழுதிலம் வேர்,
கடுக்காய், தானிக்காய், நெல்லிப் பருப்பு,
நெருஞ்சில் வேர், சந்தனம், அகில் சக்கை,
செங்கழுநீர்க் கோஷ்டம், அமுக்கிராக்கிழங்கு
தண்ணீர்விட்டான் கிழங்கு, நிலப்பனைக் கிழங்கு,
காட்டாமணக்காங் கிழங்கு, பாதிரி வேர்
கண்ணுப்பீளை வேர் இவை வகைக்கு பலம்-10
கொண்டுவந்து பொடிபொடியாய் வெட்டித்
தொழித்துப் பானையில் போட்டு பதினாறு மரக்கால்
தண்ணீர் வார்த்து அடுப்பில் வைத்துக் காய்ச்சி

கஷாயம் நாலொரு பங்கு யாருக்க யிறுத்து
வடிகட்டிக் கொண்டு நாட்டுச் சர்க்கரை -
பலம்-100 கூடப்போட்டுக் கரைத்து வடி
கட்டிக் கொண்டு யாதுவும் நல்லெண்ணெய் -
பலம்-10, பசுவின் நெய் - பலம்-10, பனியினைச் -
சாறு - பலம் - 4, தொக்குப் பிசின் - பலம் - 4
கூட விட்டுக் காய்ச்சி பக்குவத்தி லிறக்கிக்
கொண்டு யிவற்றிற்கு கற்கம் - மருந்து - மேதை,
மகாமேதை, ஜடாதொண்டை, வெள்ளரி விதை,
சந்தனம், அக்கி, ஏலம், ஆனைக் கோரைக்
கிழங்கு, தாமரைப்பூ, நாககேசரம், தாளிசபத்திரி,
பேராமல்லி, மாதளை, கிச்சிலிக் கிழங்கு,
கோதும்பை, பற்பாடகம், பாவட்டை, கீழா-
நெல்லி, பெருங்காயம், திருப்பதி யேலம்,
வட்டத்திருப்பி, ஜீரகம், இந்துப்பூலம் யிவை
வகைக்கு பலம் - 4 கொண்டு வந்தரைத்து
யாவற்றுச் சூரணம் பண்ணி பாகிலே கொட்டிக்
கிளறி ஆறிப் பண்ணின பசுத் தேன் - பலம் - 64
கூட வார்த்துக் கிளறி லேகியம் பக்குவம்
பண்ணி வைத்துக் கொண்டு தினமோர்
உருண்டை கொண்ட இதுப்பிரமாணம்
கொடுத்து வரத் தீரும் வியாதி - வாத ரோகம் -
84 வகையும் சிலேட்டும ரோகம் - 20 வகையும்
தொந்த ரோகம் - 64 வகையும் அரம் 64 வகையும்
ரெத்தப் பிரமேயம், மேகம் - 16 வகையும் மேகம்,
இட்டம், மேக ரெணங்கள், பகந்தர ரோகம்
கிராணி, பாண்டுரோகம், யிருத்து ரோகம், மார்சோனை,
இன்பங்கள், வாயுரோகம் எண்பத்து நாலு வகையும்

யோனி ரோகம், மலடுகள் தீரும். பிள்ளையுண்டாம்
மோகக் களை யுண்டாம். ஆயுசு வர்த்திக்கும்.

கண்டங்கத்திரி லேகியம் (வேறு)

கண்டங்கத்திரி - பலம் 50 கொண்டுவந்து
நறுக்கிப் பானையில் போட்டு நாலுமரக்கால்
தண்ணீர் வார்த்துக் காய்ச்சிக் கஷாயம் நால்
தொரு பங்கு யிருக்கிற போது யிறக்கி வைத்து
கொண்டு யாதுவும் சக்கரை பலம் - 25 உம்
போட்டுக் கரைத்து வடிகட்டிக் காய்ச்சி
பாகுபதத்தி லிறக்கி வைத்துக் கொண்டு
யிதுக்கு சரக்கு - மருந்து - கடுக்காய், தான்றிக்காய்,
நெல்லிப் பருப்பு, சித்திர மூலம், அரத்தை
அக்கிராங்கண்ணி, வெள்ளைக் காக்கணாஞ்-
விரை யிவை வகைக்கு பலம் - 1 கொண்டுவந்-
திடித்துச் சூரணம் பண்ணி பாகிலே கொட்டித்
கிளறி லேகியம் போலே யிடித்து வைத்துக்
கொண்டு ரெண்டு வேளையும் வேளைக்கு
ஒண்ணரை வராகனிடை லேகியங் கொடுத்து-
வர தீரும் வியாதி - ஆம்பல், பித்தம், சுவாச-
காசம், பாண்டுவும் யிவை தீரும்.

குஞ்சாதி லேகியம்

சீரகம், கருஞ்சீரகம், செவ்வல்லி கொடும்
கொடிப் பாளைப் பட்டை, சதகுப்பை, ஆனைத்-
திப்பிலி, லவங்கம், நாவல்பூ யிவை வகைக்கு
பலம் - ௨ கொண்டு வந்திடித்துச் சூரணம் பண்ணிக்
192 கொண்டு யிந்தச் சூரணத்துக்குச் சரி சிவதை-

சேர்ச் சூரணத்துக்கு சமன் சக்கரை கூடக்கலந்து
போட்டு அத்தி பண்ணின தேன் விட்டரைத்து
லேகியப்பக்குவம் பண்ணி வைத்துக் கொண்டு
ரெண்டு வேளையும் வேளைக்கு மூணு மாடை-
யிடை லேகியங் கொடுத்து வந்தால் தீரும் வியாதி-
மூலரோகம் பன்னிரண்டு வகையும் பித்தவாய்வு,
மலபத்த வாய்வு, அக்கினி மாந்தம், சுரம், சருவ
வியாதியும் தீரும்.

சவுபாக்கியச் சுண்டி லேகியம்

நல்ல தெளிந்த தண்ணீர் - ஆழாக்கு, சக்கரை-
பலம்-50, பசுவின் பால் - படி-1½ யிவற்றை
சட்டியில் வார்த்து சக்கரை போட்டுக் கரைத்து
வடிகட்டிக் காய்ச்சி பாகு போலே வரும் போது
இறக்கி வைத்துக் கொண்டு யிதுக்கு சரக்கு-
வாய்- மருந்து - ஏலம், சோதிஷ்மதி விதை, வாய்-
விளங்கம், சுக்கு, திப்பிலி, மிளகு, சீரகம்
ஓமம், கருசிலாங் கண்ணிச் சூரணம், லவங்கம்
பாலைந்த பேரசம் யிவை வகைக்கு-பலம்-1
சதகுப்பை விதை - பலம் - 5, கொத்தமல்லி பலம்-3
சுக்கு - பலம் - 8 யிவையெல்லாங் கொண்டுவந்-
திடித்துச் சூரணம் பண்ணி அத்தி பண்ணின
தேன் படி-½ கூடவார்த்துக் கிளறி யரைத்து
லேகியம் போலே யெடுத்து வைத்துக் கொண்டு
ரெண்டு வேளையும் வேளைக்கு மூணு மாடை-
யிடை கொடுத்து வந்தால் தீரும் வியாதி - சூதிகா-
வாய்வு, சூதிகா சுரமும், சூதிகா தாகம்
சூதிகா கிராணி, சூதிகா பாண்டுவும், சூதிகா அக்கினி
மாந்தம் யிவையெல்லாந் தீரும்.

தாளிச வடக லேகியம். கையாட்சி

தாளிசபத்திரி, மிளகு, செவியம், திப்பிலிமூலம், திப்பிலி வகைக்கு பலம் -1, சுக்கு - பலம் - 3 லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, ஏலம், வெட்டிவேர், இலாமிச்சம் வேர் வகைக்கு வராகனிடை -1 இவற்றை சூரணஞ் செய்து கொண்டு இந்தச் சூரணத்துக்கு மூணு பங்கு
அ. நல்ல சுத்த வெல்லம் உடபடி யெகத்துக்கு கரைந்து ஒரு பானையில் இரண்டுபடி பால் வார்த்து மேல் சீலை ஆவி அடிப்படி வெட்டின பேரில் சூரணத்தை வைத்து மேல்சட்டி மூடி எரிய விட்டு பதத்திலிறக்கி நெய் வார்த்துப் பிசைந்து கொடுக்கவும். கொடுத்தால் பேதி நிற்கும். தீபனமாம். அக்கினி புஷ்டியுண்டாம். சிசுக்களுக்கும் நல்லது.

வீரிய விருத்திக்கு லேகியம்

நிலப்பனைக் கிழங்கு, முருங்கைவிதை, இலவம்-பிசின், புருஷரத்தினம், நீர்முள்ளிவிதை, கரு-வேம்பு வேர், ஆனைநெருஞ்சில் வேர், பூனைக்-காஞ்சொறி வேர், தண்ணீர்விட்டான் கிழங்கு நன்னாரி வேர் வகைக்கு பலம் - ௨, அக்கரகாரம் கசகசா, லவங்கம், சாதிக்காய், சாபத்திரி, மிளகு, சீரகம், சோம்பு, தாளிசபத்திரி வெளரிசி வகைக்கு பலம் - 2, அதிமதுரம் - பலம் - 3, சர்க்கரை - சேர் - 3, பசுவின்நெய் - சேர் - 2 இவற்றை லேகியஞ் செய்து வேளைக்கு மூணு வராகனிடை விழுக்காடு ஒரு மண்டலம் கொள்ளவும். இப்படி இரண்டு வேளையும் சாப்பிட மேகம் ௨௰-ம் இரணங்களுமாறி உணர்ந்து தாது புஷ்டியுண்டாகும்.

வீரிய விர்த்திக்கு கோழி முட்டை லேகியம்

கோழிமுட்டை -4 அவித்து உப்பிலே புதைத்து நாலுநாட்கள் சென்ற பிறகு யெடுத்து உடைத்து மஞ்சள் கருவை யெடுத்துக் கொண்டு யிதுக்கு சரக்கு மருந்து- சாதிக்காய் -1, லவங்கம் -4 வறுத்துப் பொடி செய்து முட்டையுங் கூட்டி தேன்விட்டரைத்து யெடுத்து வைத்துக் கொண்டு அந்தி சந்தி எட்டு நாட்கள் தின்னவும். யிதுக்குப் பத்தியம்- பகல் மாறு - வெள்ளாட்டுக் கறியும் முருங்கைப்- பிஞ்சும் உப்பு அரியலாய்க் கூட்டிக் கொள்ளவும். ~~ராமாறு~~ பசுவின் பாலுஞ் சாதம் முண்ணவும். யிதுக்குப் பலனுண்டாகும். வீரிய விர்த்தியுண்டாகும். கையாட்சி.

மூலக்கடுப்புக்கு லேகியம்

193. அரசம்பட்டை, மாம்பட்டை, நெறியம்பட்டை வகைக்கு பலம்-16 நறுக்கிப் பானையில் போட்டு நாலு மரக்கால் தண்ணீர் வார்த்து கஷாயம் ஒருபடி யிருக்க யிறக்கிக் கொண்டு பழவெல்லம்- பலம்-10 கூடப் போட்டுக் கரைத்து வடி கட்டிக் காய்ச்சி பாகுபோலே வரும்போது யிறக்கி வைத்துக் கொண்டு யிதுக்கு மருந்து யெழுபுடம் போட்ட சண்டக்கசா - பலம்-1, ஜீரகம் - பலம் -2 யிளவறுவலாய் வறுத்துக் கொள்ளவும். சாதிக்காய், சாதிபத்திரி, லவங்கம் அதிவிடையம் வகைக்கு வராகனிடை -2 யிதுவும் யிளவறுவலாய் வறுத்துக் கொண்டு யிடித்துச் சூரணம் பண்ணி பாகிலே கொட்டிக் கிளறி லேகியமாக

யெடுத்து வைத்துக் கொண்டு அந்திசந்தி இரண்டு வேளைக்கும் வேளைக்கு ஒண்ணரை வராகனிடை லேகியம் கொடுத்து வரவும். யிப்படி அரைமண்டலம் கொடுக்கவும். மூலக்கிருச்சரம், வயாற்றெரிச்சல் வயிற்றுக் கடுப்பு, இரத்தக் கடுப்பு, சீதக்கழிச்சல் யிவைகளெல்லாந் தீரும். இதுக்குப் பத்தியம் — வெள்ளாட்டுப் புக்கண்டம், வெள்ளாட்டுத்தயிர் உப்பு வறுத்துக் கூட்டிக் கொண்டு வரவும்.

வில்வக் காய் லேகியம்

வில்வக்காய் - 30, வில்வவேர்ச்சரம்பு - பலம் - 5 யிவைகளை யிடித்து பதக்குத் தண்ணீரில் விட்டு நாழியாகக் காய்ச்சி பிழிந்து வடித்து அதில் மூன்று வருஷத்து பழைய வெல்லமாவது நல்ல வெல்லமாவது பலம் - 3, இஞ்சி பலம் - 3 இதுப்படி அரைத்துச் சேர்த்துக் கொள்ளுகிற போது துளாவி யிறக்கி இதில் ~~[illegible]~~ மிளகு - பலம் - ½ செவ்வியம் - பலம் - 2 திப்பலி - பலம் - 2, சிறுநாகப்பூ - பலம் - 1 தாளிசபத்திரி - பலம் - 1, சித்திர மூலம் - பலம் - 1 திப்பலி மூலம் - பலம் - ¼, சீரகம் - ஏலம் லவங்கப் பத்திரி - பலம் - ¼, சீரகம் - பலம் - ½ இவற்றைப் பொடி செய்து போட்டு துளாவிக் காய்ச்சி சேர்த்து யிறக்கும் போது ஒரு படி தேன் விட்டு யிறக்கி வைத்துக் கொண்டு நெல்லிக்காய் பிரமாணம் சாப்பிடவும். சளைச்சத்தியும் இருத்தின் கோவம், பித்தம் சீத்துமம், காமாலை, பாண்டு, கிராணி, மேக்கின் நீர் விழுகிறது, அலாசம், அருசி, மிடறின் நோவு, விக்கல் யிவையெல்லாந் தீரும்.

வில்வாதி லேகியம் (வேறு)

வில்வம் வேர் - பலம் - 50. விளாமிச்சம்வேர்.
தாதுவேளை வேர், நன்னாரி வேர், முன்னைவேர்,
பெருவாகை வேர், சிறுவாகை வேர், பெரு
விளா வேர், சிறுவிளா வேர், பாதிரி வேர்
வெட்டி வேர், முசுமுசுக்கை வேர், தேத்-
தாம் வேர் இவை வகைக்கு பலம் - 1 இவை-
யெல்லாம் கூட்டி யிடித்து ஒரு பாண்டத்திற்
போட்டு தாணிப்பதக்கு தண்ணீர் விட்டு
யெட்டொன்றாய்க் காய்ச்சிப் பிசைந்து
வடித்து இதில் தொம்மட்டி மாதளம்பழச்-
சாறு - நாழி, எலுமிச்சம்பழச் சாறு -
நாழி, இஞ்சிச் சாறு - நாழி யாந்தப்படி
கஷாயத்தில் விட்டு இதில் சர்க்கரை - பலம் 50
போட்டுக் கரைத்துக் குழம்பாகக் காய்ச்சி
அதின் கிராம்பு, ஏலம், செண்பகப்பூ, நற்சந்தனம்,
திரிகடுகு, திரிபலை, பருத்திக் கொட்டைப் பருப்பு
வில்வம்பழம், அதிமதுரம், விளாவிதை, சடா-
மாஞ்சில், வட்டத்திருப்பி, சீரகம், கருஞ்-
சீரகம், விழலரிசி, முந்திரிகைப்பழம், இலவங்கப்-
பத்திரி, சவ்வியம், அக்கிரகாரம், தேவதாரம்,
நெய்தற்கிழங்கு, இலுப்பைப்பூ, மரமஞ்சள்
வகைக்கு பலம் -1 கூட்டி யிடித்து வஸ்திர-
காயம் பண்ணி இதைத் தூவி பசுவின் நெய்
நாழி விட்டுக் கிளறிக் காய்ச்சி பாகு தேன்
நாழி விட்டு நன்றாய்க் கிளறி யிறக்கினதைக்
கொண்டு கருவில் பிரமாணம் கொள்ளவும்.

தீரும் வியாதி – சத்தி, இளைப்பிருமல், காசசு-
வாசம், அரோசிகம், விக்கல், அ.3ம் அறுபத்து-
நாலு வகையும், அன்னத்துவேஷம், கிராணி,
அஸ்தி சுரம், அங்கதாபம், சிலேத்தும கடம்,
அதிசாரம், பாண்டு, காமாலை, ~~[illegible]~~ × மருந்தீடு
மகோதரம், பித்தம் – 40 வகையும்
மலத்தில் இரத்தம் விழுகிறது, புண்வகை, பெருவயிற்று-
ரோகம், காசசுவாசம், கெர்ப்பதாபம், கொறுக்-
கணம், உன்மாந்தை, இருமல், தெய்வதோஷம்,
உட்காய்ச்சல், உதரவாய்வு × இந்த வகை-
194. யெல்லாந் தீரும்

வில்வாதி லேகியம் (வேறு)

நரம் பிழைச்ச வில்வவேர் – பலம் – 30 – இதில்
தண்ணீர் விட்டு நாழியாகக் காய்ச்சி வடித்து
பழவெல்லம் – பலம் – 30 போட்டுக் கரைத்துக்
குழம்பாகக் காய்ச்சி அதில் சுக்கு – பலம் – 3
மிளகு – பலம் – 4, திப்பலி, சவ்வியம், தாளிச-
பத்திரி, சிறுநாகப்பூ, திப்பலி மூலம் வகைக்கு-
பலம் – 2, சித்திரமூலம் – பலம் – 1 இவற்றை
இடித்துப் பொடி பண்ணித் தூவிக் காய்ச்சிக்
கிண்டி வரும்போது நடுச்சட்டி தெரியாமல்
பதனென்றறிந்து தேன் நாழி விட்டுச் சூரக்
கிண்டி இறக்கி வைத்துக் கொண்டு ஒரு
தாணிக்காயளவு கொள்ளவும். இதுக்குத் தீரும்
வியாதி – குன்மம், பாண்டு, பிணைப்பு, மந்தாக்கினி
உதரவியாதி, ஈளை, இருமல், சுவாசம், வாந்தி,
பிரமேகம், குதானை, காமாலை, வாய்வு இவை
யெல்லாந் தீரும்.

வில்வக் கிருதம்

வில்வம் வேர் - பலம் - 32 நறுக்கி யிடித்து
பதக்கு நீர் விட்டு நாழியாகக் காய்ச்சி வடித்து
திப்பிலி - பலம் - 2, சுக்கு - பலம் - 4, மிளகு -
பலம் - 3, ஓமகப்பு - பலம் - 2, ஜாதிக்காய்
ஜாதிபத்திரி, வாய்விளங்கம், இலவங்கப் பட்டை -
பலம் - 1, இலவங்கப் பத்திரி - பலம் - 1, சீரகம் -
பலம் - 1, ஏலம் - பலம் - 1, நாகசுபத்திரி - பலம் 1,
சித்திர மூலம் - பலம் - ௨, சேவியம் - பலம் - ௨
கிராம்பு இந்நாலு வகையும் பலம் - ௭
இவற்றை இளவறுப்பாய் வறுத்துப் பொடி செய்து
வஸ்திரகாயம் பண்ணி கஷாயத்தில்
கரைத்து வெண்ணெய் - பலம் - 10 உதிர்த்துப்
போட்டுச் சேர்த்து கொதிக்கிற வேளையிலே
தேன் - நாழி விட்டுக் கிளறி சேர்ந்து பதத்தில்
இறக்கி புளியங்கொட்டை யளவு சாப்பிடவும்
சுவாச ரோகங்களும் தீரும்.

சூதக வாய்வுக்கு லேகியமுங் கிருதமும்

வெட்பாலை யரிசி, வாய்விளங்கம், சுக்கு,
திப்பிலி, மிளகு, சீரகம், ஓமம், கையாந்தகரைப்-
பொடி, கிராம்பு, கர்ப்பூரம், அதவ்வை, கொத்த-
மல்லி யிவை வகைக்கு பலம் - ௭ 1/4, கொத்தமல்லி -
பலம் - ௩ 3/4, சுக்கு - பலம் - ௨, நாட்டுச் சர்க்கரை -
பலம் - 1௨ இந்தக் கடைச் சரக்கெல்லா மிடித்து
வஸ்திரகாயம் பண்ணி இரண்டு படி பசுவின்பால்
இறுகக் காய்ச்சி பாகுபதமாய் வருகிற போது
கடைமருந்தைப் போட்டு இரும்புக்கரண்டியாலே
கிண்டி இளகம் போலே மெழுகு பதமாக யிறக்கி

டாக்குப் போலே உருண்டை உருட்டி அந்திக்-
கொரு உருண்டை காலைக்கு ஒரு உருண்டையாக
பதினொருநாட்கள் தின்னவும். உருண்டை
தின்னும் போது கியாழம் — அக்கி, திப்பலி,
திப்பலி மூலம், பெருங்காய்வேர்ப் பட்டை,
சைவியம், சித்திர மூலம், ஆரணை வேர்,
முக்காவேளை, கண்டங்கத்திரிவேர் சமூலம்
யிவைகளெல்லாஞ் சமன் சேர்த்துப் பரும்படி-
யாக யிடித்து வைத்துக் கொண்டு வேண்டிய
பிரமாணஞ் சட்டியில் போட்டு ஒரு படி
நீர் விட்டு அரைப்படியாகக் காய்ச்சி ஒரு
உருண்டை தின்னவும். இந்தக் கஷாயம்
குடிக்கவும். இதுக்குத் தீரும் வியாதி - சீதவாய்வு,
சீதக்கிராணி, சீதச்சுரம், சீதப் பொருமல்
நளிர், கைகாலெரிவு, கைகால் கடுப்பு, அக்கினி-
மாந்தம், வயிற்றுக்கட்டு, வயிற்றில் கெண்டை-
யேறுகிறாப் போலேறுகிறது, வயிற்றில் கொழிபோல்
கிடக்கிறது. சீதத்திலே வந்த அதிபாதம்
பாண்டு யிவைகளெல்லாந் தீரும். கையாட்சி.
உப்பு வறுத்து நச்சுப்புக் கூட்டவும். இளங்-
கீரை, முருங்கைப்பிஞ்சு பசுவின்-
பால், பசுவின் நெய் கூட்டவும்.

இஞ்சி லேகியம்

195. இஞ்சி மேல்புறணி போக்கி சூரணம்-பலம்-10,
மிளகு-பலம்-3, ஏலம்-பலம்-5, திப்பலிமூலம்-
பலம்-1, கொத்தமல்லி-பலம்-3, கோரைக்கிழங்கு-

பலம் - 3, தாளிசபத்திரி - பலம் - 2, அதிமதுரம் -
பலம் - 3, வாழைவேர் - பலம் - 2, உகைநீர் -
பலம் - 3, சீரகம், நன்னாரிவேர் வகைக்கு
வராகனிடை - 1 உட்பட சூரணம் பண்ணிக்
கொண்டு இந்தப் பொடி இதை நறுநெய்யில்
வறுத்து இதில் தேன் படி - ¾ விட்டு சர்க்கரை -
பலம் - 10 போட்டு லேகியம் பண்ணி வைத்துக்
கொண்டு தினம் - 3 வராகனிடை கொள்ளவும்.
வாந்தி, அரோசிகம், இருமல், இரைப்பு, அக்கினி-
மாந்தம் யாவையெல்லாந்தீரும் கையாட்சி.

சுவாச காசங்களுக்கு தேத்தாங் கொட்டை லேகியம்.

நெருப்பில் பொரித்த வெங்காரம் - பலம் - 2
திப்பிலி, மிளகு, நற்சீரகம், கிராம்பு வகைக்கு -
பலம் - 2 இவற்றை வறுத்துப் பொடி பண்ணிக்
கொண்டு ஒருசிறங்கை தேத்தான் கொட்டையை உறைந்து வறுத்து-
சட்டியில் போட்டு பசுவின் நெய் பண்ணி வைத்துக் கொண்டு
பாத்து வைத்தியமாய் பண்ணி தண்ணியுந்
அதைச்சேர் தேனும் அதைச்சேர் காய்ச்சி வரும்போது
சட்டியில் வைத்து பதமாகக் காய்ச்சி வகையும்
முற்கூறிய சூரணமும் கடைச்சுருக்கி லேகியமாகக்
பொரித்த வெங்காரமும் போட்டு கொண்டு கிழக்கே
கிண்டி யெடுத்து வைத்துக் கொண்டு முன்தனைப்பல்
காய் பிரமாணம் தின்றுவர
சொன்ன காசமெல்லாந் தீரும். புகையிலை,
கனிச்சல் தவிரவும்.

சிரபுங்கி வில்வாதி லேகியம்,

பாப்பார முள்ளிவேர், நொச்சிவேர்,
கருநொச்சிவேர், அவையார் கூந்தல் வேர்,
விளாமிச்சம் வேர், சீந்திக் கொடி, மணத்தாங்கி-
அ. வேர், நன்னாரிவேர், இவை வகைக்கு பலம்-5
இவையெல்லாஞ் சேர்த்து நைய்ய நசுக்கிப்
பானையில் போட்டு 8 மரக்கால் தண்ணீர்
வார்த்துக் காய்ச்சி குறுணியாக வடித்துக் கொண்டு
இதற்கு கடைச்சரக்கு- மரமஞ்சள், லவங்கப்-
பட்டை, லவங்கப்பத்திரி, ஜாதிக்காய், கிராம்பு,
செவியம், வாய்விளங்கம், சியாந்த லவணம்,
திப்பிலி மூலம், கொஷ்டம், தாளிச பத்திரி, அரத்தை,
ஓமம், குரோசாணி ஓமம், சீரகம், கருஞ்சீரகம்
இவை வகைக்கு பலம்-1, நாகேசரம் -வநாக-
ளிடை-1, ஏலம்-பலம்-1, பழைய வெல்லம்-பலம்-
30, தேன்-படி-1, லோகபஸ்பம்-பலம்-1
மண்டூரம்-பலம்-1 கஷாயத்தில் வெல்லம்
போட்டு பதமாகக் காய்ச்சி கடைச்சரக்குகளை
பொடித்து வடிகட்டிக் கொண்டு கூடப் போட்டுக்
கிளறி தேனும் விட்டு லோகபஸ்பமும் மண்டூ-
ரமும் போட்டுக் கிளறி லேகியமாகச் செய்து
சாப்பிடவும். சகல வியாதிகளுந் தீரும்.

சயத்துக்கும் சுவரோகத்துக்கும் இஞ்சி லேகியம்.

இஞ்சி-பலம்-16, நெய்-படி-1ஐ, கடுகு-
பலம்-1ஐ, ஏலம்-பலம்-1ஐ, இந்துப்பு-பலம்-ஐ,
கோஷ்டம்-பலம்-1, கற்கடக சிருங்கி-பலம்-1,
அரத்தை பலம்-ஐ, கஸ்தூரி மஞ்சள்-பலம்-1

வெள்ளைப் பூண்டு - பலம் - 4, அதிமதுரம் பலம் - ௨
அக்கிராகாரம் - பலம் - ௩, பச்சைக்கற்பூரம் -
வராகனிடை - 1 யிவைகளெல்லாங் காயப் போட்டு
இடித்து அரைக்கி யரச்சி அமுதரமரைத் துச்
சாறு பிழிந்து கொண்டு சட்டியிலே விட்டு
காயவிட்டு நெய்யுங் கூடவிட்டு தெண்டுநீ
காயவிட்டு காய்ந்து வரும்பொழுது பொடியைத்
தூவி லேகியமாக வந்தவுடனே யிறக்கி வைத்துக்
கொண்டு நாற்பது நாட்கள் ஒரு மண்டலங்
கொள்ளவும். பத்தியம் - உப்பு தட்டவும்
சகல வியாதிகளும் தீரும். வைகிவாய் ~~[illegible]~~
கையாட்சி.

கிரந்தி, பறங்கிப் புண்ணுக்கு செங்கொட்டை லேகியம்

செங்கொட்டை, நீரடிமுத்து, காட்டுச்சீரகம்
196. வகைக்கு பலம் - 5, கடலாத்திப் பட்டை, நற்சீரகம்,
எள் இவை வகைக்கு பலம் - 1, முட்டைவெள்ளை -
பலம் - உ௰, யிவை யெல்லா மிடித்து வைத்துக் கொண்டு
தெண்டு நேரமும் கொள்ளவும். கிரந்தி, பறங்கிப் புண்
கடுகணம் யிவை யெல்லாந் தீரும். இச்சாபத்தியம்
கையாட்சி.

சுக்கா வாய்வுக்கு சௌபாக்கிய லேகியம்

சுக்கு - பலம் - 6, திப்பிலி, மிளகு, ஏலம், சீரகம்
வகைக்கு பலம் - 2, தானிக்காய், கடுக்காய்,
சிறுதேக்கு, லவங்கம், வெள்ளைத்தோர், வாலேந்திர -
போளம், கண்டதிப்பிலி வகைக்கு பலம் - 1, வெள்ளுள்ளி
சேர் - 1௫, சக்கரை - பலம் - ௧௰, பசு வெண்ணெய் - பலம் - ௨௫
லேகியஞ் செய்து சாப்பிடவும். வேகு நேரத்திலான அவிழ்தம்.

மூலவாய்வுக்கு கருணைக் கிழங்கு லேகியம்

கருணைக்கிழங்கு - சேர் - 2, தேங்காய்த் துருவல் போலத் துருவிக் கொள்ளவும். வெங்காயம் - படி - 1 தோல் போக்கி சிறு பொடியாக அரிந்து கொள்ளவும். சீரகம் - பலம் - 4 சந்தனம் போலே அரைத்தெடுத்துக் கொள்ளவும். வெங்காயத்தைப் பொன்னிறமாக வறுத்துக் கொள்ளவும். நாட்டுச் சர்க்கரை - சேர் - 3 பாகுவைத்து மான உடனே யிந்த மருந்துகளெல்லாம் போட்டு ஒரு கொதி வந்த பிறகு பசுவின் நெய் - படி - 1 உடன் வார்த்துக் கிளறி யெடுத்து வைத்துக் கொண்டு அந்தி சந்தி கொட்டைப்பாக்களவு சாப்பிடவும். ரத்தக் கடுப்பு, மூலவாய்வு, கிராணி, ரத்த அதிசாரம், அக்கினி மாந்தம், வாய்வு, சேனாக்காடு, மூலக்கிராணி, மூலரோக வியாதி யென்பவை தீரும். யிச்சாபத்தியம்.

மதன காமேசுர லேகியம்

சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம், சீரகம், கருஞ்சீரகம், அமுக்கிராக் கிழங்கு, நிலப்பனைக் கிழங்கு, அதிமதுரம், முருங்கைப்பூ, பூனைக்காலி வேர், வாதாங் கொட்டை, கோரைக் கிழங்கு, நீர்முள்ளி வித்து வகைக்கு - வராகனெடை - 1, சாதிக்காய், சாதிபத்திரி, கோரோசனை, கஸ்தூரி, அம்பர், குங்குமப்பூ யிவை வகைக்கு வராகனெடை - 1, வெள்ளைப்பூண்டு - சேர் - 1, பால் - சேர் - 2, பசுவின் நெய் - சேர் - 1, தேன் - சேர் - 1 லேகியமாக்கிக் கொள்ளவும்.

மதனகாமேசுர லேகியம்

கொப்பரைத்தேங்காய், சாதிக்காய், சிறுலவங்கம், அபின், வெள்ளைப்பூண்டு வகைக்குத் துட்டெடை - 1, பேரிச்சங்காய் - சேர் - 2 ஆகக்கூட்டி லேகியஞ் செய்து கொள்ளவும்.

தாளிசை லேகியம்

தாளிசபத்திரி, ஜெவியம், மிளகு, திப்பலி, திப்பிலிமூலம் வகைக்கு பலம் - 1, சுக்கு - பலம் - 3 லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, ஏலம், வெட்டிவேர், விலாமிச்சம்வேர் வகைக்கு வராகனெடை - 1, நல்ல வெல்லம் - பலம் - 24 பாந்தக் கடைச் சரக்குகள் சூரணஞ் செய்து பாகு நல்லெண்ணெய் உடன் கலந்து வைத்துக் கொண்டு ஒரு பாண்டத்தின் ஒருபடி பசுவின்பாலும் அரைப்படி இளநீரும் கூட விட்டு பாண்டத்துக்கு சீலை செய்து கட்டி வெட்டியன் பேரில் அவித்தும் படாக வைத்து வெந்ததின் பிறகு இறக்கி வைத்துக் கொண்டு கையின் நெய் தடவி தேத்தான் கொட்டை பிரமாணம் உருட்டி சாப்பிடவும். அக்கினிமாந்தம், வயிற்றிரைச்சல், உப்புசம், சாதஞ் செரியாமலிருக்கிறது, வயிறு பேதி, வாதகுன்மகம், கிராணியிவை - யெல்லாந் தீரும். தீபன முண்டாம். கையாட்சி.

[illegible] வியாதிகளுக்கு லிங்காலிங்காதி லேகியம்

இலிங்கம், வெடியுப்புசாரம், நவாச்சாரம், சத்தி - வெடிசாரம், லவணம், காயம், திரிகடுகு, சீரகம், திப்பிலி, திப்பிலி மூலம் வகைக்கு வராகனெடை - 2.

197. சாதிச்சாறு, எலுமிச்சம்பழச்சாறு, உள்ளிச்சாறு வகைக்கு சாறு படி - ௩, பழவெல்லம் - பலம் - ..., விளக்கெண்ணெய் - படி - ௨, காட்டுக் கருணைக் கிழங்கு, மெருகன்கிழங்கு, சிறிய கருணைக் கிழங்கு, பிரண்டைக் கிழங்கு வகைக்கு கிழங்கு - பலம் - 1 யெல்லா மிடித்துச் சீலை வடித்து முந்தின சாத்தின் கிழம்பாகக் காய்ச்சி யத்துடன் திருநாங்காவி கடைச்சரக்கு மருந்து களும் தூள்செய்து தூவி யெல்லாம் போட்டுக் கிளறி கால்படி எண்ணெய் விட்டு பாகு வரும் போ தெடுத்து வைத்துக் கொண்டு அண்டைக் காயளவு துவட்டியன் பிரட்டி புழுங்கவும். பேதியாகும். மிஞ்சினால் மோருஞ் சோறும் உண்ணவும். முன் சொன்ன வியாதி யெல்லாந் தீரும். கையாட்சி.

விஷ்வாதி லேகியம் - கைமுறை.

சோம்பு கொட்டை - சேர் - 1, அத்தி செய்த கெந்தகம் - பலம் - ௭, பனைவெல்லம் - சேர் - 1, தேன் - படி - 1, நெய் - படி - 1 யிவற்றை லேகியஞ் செய்து அரைமண்டலம் யிச்சாபத்தியமாகச் சாப்பிடவும். சூலை, பவுத்திரம், கிரந்திகட்டின சூலை, குஷ்டம் யிவை தீரும்.

வின்வாதி லேகியம் - கையாட்சி.

நிலவாகைச் சூரணம் - பலம் - 8, எட்டுவிதை - பலம் - ௨, கன்னார் - பலம் - ௨, நாபி - வராகனெடை - 3, ஓமம் - பலம் - 4,

வெள்ளைப் பூண்டு - பலம் - 8, கொப்பரைத் தேங்காய் பலம் - 8, வெல்லம் - பலம் - ௫, பனைவெல்லம் - பலம் - 32 யாவற்றை சாராயத்திலரைத்து பனை-வெல்லஞ் சேர்த்து வேளைக்கு நெல்லிக்காயளவு பனிரண்டு நாட்கள் சாப்பிடவும். கசப்பு, புளிப்பு தவிரவும். நெய், பால், துவரம்பருப்பு யிவைகளாம். கிரந்தி, பவுத்திரம், குஷ்டம், மார்நோவு சூலை, வாய்வு யிவை முதலான வியாதியெல்லாந் தீரும்.

வில்வாதி - லையாட்சி.

சேங்கொட்டை - சேர் - 1க்கு ஓம உமி சேர் - 2, ஓம உமியை யிடித்துத் தூள் செய்து கொட்டையை முகின் வெட்டித் தண்ணீர் போட்டு யிடித்துத் தண்ணீர் சூடு போக்கி வைத்துக் கொண்டு பசுவின் நெய் - சேர் - 2, தேன் - சேர் - 2 சட்டி-யில் லேகியஞ் செய்து பீங்கானில் வைத்துக் கொண்டு ஒரு வேளைக்கு நெல்லிக்காயளவு இரண்டு நேரமும் 12 நாட்கள் சாப்பிடவும். கிரந்தி, மூலம், கட்டிகள், மேகசூலை, வாய்வு, சிலவிரணங்கள், பவுத்திரம், மார்நோவு யிவை யெல்லாந் தீரும். நெய், முருங்கைக்காய் யிவை கூட்டிக் கொள்ளவும்.

வில்வாதி லேகியம்

சேங்கொட்டை - சேர் - 1, சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம், கருஞ்சீரகம், காட்டுச்சீரகம், கடுகு-ரோகணி, வெள்ளைப்பூண்டு, அக்கிராகாரம், கோஷ்டம், நெல்லிப் பருப்பு வகைக்கு பலம் - 1,

வறுத்து என் - படி - வ யிவை யிடித்து சூரணஞ்
செய்து வேறே வைத்துக் கொண்டு வராகபடி
பசுவின் பால் ஒருபடியாகக் காய்ச்சி அந்தப்
பாலிலே இரண்டு சேர் பனை வெல்லங் கரைத்துக்
காய்ச்சி பதத்திலே சேங்கொட்டைச் சூரணமுங்
கொட்டிக் கிளறி பதமானவுடனே நெய் - சேர் - 1
தேன் - சேர் - ½ விட்டு பதத்தில் யிறக்கி வைத்துக்
கொண்டு ஒருவேளைக்கு நெல்லிக்காயளவு
1௰ நாட்கள் சாப்பிடவும். முன்முறையில்
சொன்ன வியாதியெல்லாந் தீரும்.

சூலைக் குடோரம்

நாயுருவி, பிரண்டை, கொள்ளுக்காவேளை,
வசம்பு, நிலவேம்பு, புங்கிலை, நுணாயிலை,
வாழைச் சருகு, நீர்முள்ளி, பருத்திக்கொம்பு
புளியம் வறடு, கள்ளிப் பழுப்பு, காட்டுமுருக்கு
198. எருக்கம்பழுப்பு, சிறுகுறிஞ்சான், பெருங்கிழங்கு
மஞ்சள், முக்காவேளை, அவரிச் செடி, அரசம்
பழுப்பு, நாகாயிலை யிவை வகைக்கு பலம்-5
கொண்டு வந்து பெரிய பானையில் போட்டு
அடுப்பில் வைத்து கருக்கி சாம்பலாக்கி ஆற
வைத்து குறுணித் தண்ணீர் வார்த்துக் கரைத்துத்
தெளியவிட்டு இறுத்துக் காய்ச்சிக் கஷாயபடி -
ஒருபடி யாருக்க யிறக்கி வடிகட்டிக் கொண்டு
யிதுக்கு சரக்கும் - மருந்து - சூரணம் போட்டு பண்
கொடுவேலி வேர்ப்பட்டை, சுக்கு, திப்பிலி,
மிளகு, கடுக்காய், தானிக்காய், நெல்லிப்பருப்பு
செவியம், சீரகம், பெருங்காயம், கருவேப்பிலை

செங்கழுநீர்க் கொட்டம், அக்கிராகாரம்
அதிவிடையம் யிவை வகைக்கு பலம் - ஞ 3/4
கொண்டுவந்திடித்துச் சூரணம் பண்ணிக்கொண்டு
யிந்தச் சூரணத்தின் எடை மறுகாலடிப்படி
வைத்துக் கிண்ணி யாதுபம் பஞ்சலவணம்,
வெண்காரம், யெவாச்சாரம், சத்தி யெவாச்சாரம்
அபினி, பவளம் யிவை வகைக்கு பலம் - 1
கொண்டு வந்து சுத்தி பண்ணி பொடி செய்து
கூடப் போட்டுக் கிண்டி கெட்டி பக்குவத்தில்
இறக்கி வைத்துக் கொண்டு பழுக்க எலுமிச்சம்-
பழச்சாறுங் கூட வார்த்து பழுக்கச் சக்கரையும்
கூடப் போட்டுக் கிண்டி வைத்துக் கொண்டு
இரண்டு வேளையும் வேளைக்கு மாடை-
யெடை யெடுத்து வெந்நீரிலாவது எலுமிச்சம்-
பழச்சாற்றிலாவது கொடுத்துவர ரத்த கிருமிவியாதி-
அஜீரணம், ஆம்பல், பித்தம், பக்கசூலை,
பஞ்ச குன்மம், வல்லைக் கட்டிகள், சீராணை,
சீராணைக்கட்டிகள், கொற்பசூலை, கொற்ப-
வாய்வு, அக்கினி மாந்தம், வாய்வு, புளியேப்பம்,
வயிற்றெரிச்சல் யிவையெல்லாந் தீரும்.

சூலைக் குடாரம்

அ. நாயுருவி, பிரண்டை, கொள்ளுக்காவாணை,
வசம்பு, நிலவேம்பு, புங்கிலை, நுணாயிலை,
வாழைச் சருகு, பெருங்கிழங்கு, மஞ்சள், நீர்-
முள்ளி, பருத்திக் கொம்பு, புளியம் விறகு,

கள்ளிப்பழுப்பு, காட்டு முருக்கு, எருக்கம்-
பழுப்பு, திருகுறிஞ்சான் இவை வகைக்கு
பலம்-5 கொண்டு வந்து பெரிய பானையில்
போட்டுக் காடிக் குறுணித் தண்ணீர் வார்த்துக்
கரைத்துக் காய்ச்சி கஷாயம் நாலொரு பங்கு
யிருக்க தெளிவிலே இறுத்துக் கொண்டு
இறுக்கிக் காய்ச்சும் - மருந்து - ஓமம் போட்டு
பலம் -4, கொடுவேலி வேர்ப்பட்டை, திப்பலி,
திப்பிலிமூலம், செவியம், சுக்கு, மிளகு, கடுக்காய்
சீரகம், பெருங்காயம், கருவெப்பிர்க்கு, சொற்குடு
-நீர்க்கோவட்டம், அக்கிரகாரம் இவை வகைக்கு
பலம் -7 கொண்டுவந்து பொன்னிறமாக வறுத்து
யிடித்துச் சூரணம் பண்ணி கஷாயத்தில்
கொட்டிக் கிளறி குழம்பின பக்குவத்தில் யிறக்கி
வைத்துக் கொண்டு யதுக்கு மென்பொடி-
சயிந்த லவணம், சமுத்திர லவணம், சவர்ச்ச-
லவணம், காசலவணம், விடலவணம்
வெடிக்காரம், வெங்காரம், சத்தி வெச்சாரம்
சங்கு பஸ்பம், கல்சுண்ணாம்புநீறு இவை
வகைக்கு பலம்-1 கொண்டுவந்து சுத்திபண்ணி
பொடிசெய்து மென்பொடி தூவிக் கிளறி கெட்டி
பக்குவத்தி லிறக்கி வைத்துக் கொண்டு யதில்
ஆழாக்கு எலுமிச்சம் பழச்சாறு வார்த்து
சக்கரை பலம்-5 கூடப் போட்டுக் கிளறி
வைத்துக் கொண்டு இரண்டு வேளையும்
உவ்வாக்கு மாடை;பணை
வெந்நீரில் கரைத்துக் குடித்துவரத் தீரும்.

வயாதி - அசீரணம், அசீரணக்கழிச்சல், பக்கசூலை
பக்ககுன்மம், வல்லைக்கட்டிகள், கிராணை,
சீராணை, ஆமப்பல், பித்தம், சுரம், அக்கினிமாந்தம்
மூலவாயுவு, பொய்வு யிவையெல்லாந் தீரும்.

சங்கத் திராவகம்

படிகாரம் - பலம் - 16, வெடியுப்பு - பலம் - 16
நவச்சாரம் - பலம் - 4, சமுத்திரலவணம் - பலம் - 8

199. இந்த நான்கு வகையுங் கொண்டுவந்து பொடிசெய்து
இரும்புச் சட்டியில் போட்டு சுட்டு மேலுக்குச்
சமனாக ஊறச் சுட்டு கொண்டு பிறகு புடை-
யில்லாமல் நொறுந்து மாக கொண்டு அரைத்துச்
சீலைமண் செய்து அடுப்பில் வைத்து காரத்து
மூக்கு முனையில் பீங்கான் குப்பியை வைத்து
மூட்டி அடுப்பில் தீயக்கினியாக எரித்து வரவும்.
மேல் சட்டியின் மேலே ஈரச்சீலை கொண்டு
ஈரம் கொடுத்து வரவும். இப்படி செய்து வர
காரத்து மூக்கு வழியாக திராவகம் பீங்கான்
குப்பியில் பாயும். இப்படி திராவகம் வாங்கி
வைத்துக் கொண்டு 3 களை அனுபானத்துடன்
ஒன்றுதுள் திராவகம் விட்டுப் பிசைந்து தீபத்து
அன்னத்துக்குத் தட்டாதே விழுங்கி வரவும்
இப்படி ரெண்டு வேளையும் கொடுத்து வரத்
தீரும் வியாதி - பக்ககுன்மம், கொறுபசீனை,
கொறுவாய்வு, சீதவாய்வு, பக்கசூலை, வாத-
சூலை, மார்புசூலை, மேகசூலை, மேகக்கட்டு

நீர்க்கட்டு, கல்லடைப்பு, வெள்ளைக் கட்டிகள் பிரமேகக் கட்டிகள், நீராணைக் கட்டிகள், நீரா-ணைக் கட்டிகள், வாதக் கட்டிகள், அண்டவிருத்தம் லிங்க வாதம், சோகை - வீக்கங்கள், பாண்டு-வீக்கங்கள், வாத ரோகங்கள், மகோதரம், சலக்கர்மம், பெருவயிறு, கவிசை, கீழ்க்கவிசை பக்கக்கவிசை, வாயெரிவு, வயிற்றெரிச்சல் அஜீரணம், அக்கினிமந்தம் வாய்வு யிவை-யெல்லாந் தீரும்.

யிந்தப் பஸ்பத்தை வேளைக்கு வராகனிடை யெடுத்தரைத்து தெண்ணீரில் கரைத்துக் குடித்து-வரத் தீரும் வியாதி - பாண்டு, வீக்கத்தோடு உடைய வீக்கமெல்லாந் தீரும். குன்மங்களும் சுரவ ரோகங்களும் தீரும். யிந்த திராவகத்தில் முத்து, பவழம், பலகரை யிவைகளெல்லாம்
அ. கரையும்.

மேகம் இருபதுக்கும் பச்சைக் கற்பூராதி திராவகம்.

பச்சைக் கற்பூரம் வேண்டியது கொண்டு வந்து ஒரு கலசத்தின் மேலிட்டு மேலுக்கு கரகச் சட்டியாலே மூடிச் சீலைமண் செய்யும் விபரம் - உளுந்து மாவும் சங்கு மாவுமாகச் சமன் கூட்டி தண்ணீர் வார்த்தரைத்து சட்டி பொருந்தப் படிப்பித்து யெழுசீலை மண் செய்து அடுப்பின் வைத்து மெதுவாய் விளக்குப் போல யெரித்து வரும் போது மேல்சட்டிக்கு யீரந் தோய்ந்து வரவும். திராவகம் கரகத்து மூக்காலே பாயும்.

இந்த திராவகத்தைப் பீங்கான் குப்பியில் விடுத்து வைத்துக் கொண்டு இதுக்கு அனுபானம் - திகப்பு சாராயத்தில் ஒருதுளி திராவகம் விட்டுக் கலந்துக் கொடுக்கவும். இப்படி ஏழு நாட்கள் கொடுத்துவர மேகம் இருபது வகையும் தீரும்.

திராப்கி திராவகம்

பொட்டிலுப்பு - சேர் - 1, படிக்காரம் - சேர் 1, இந்துப்பு, கல்லுப்பு, வளையலுப்பு, சவட்டுமண், நவாச்சாரம், கறியுப்பு, வெடிச்சாரம் இவை வகைக்கு - பலம் - 2 சேர்த்து கல்லுரலில் போட்டு இடித்து திராவகப் பானையில் போட்டு சீலைமண் செய்து சிறுக எரித்து வரவும். இப்படி திராவகம் இறங்கும்.

கெந்தகத் திராவகம்

நெல்லிக்காய், கெந்தகம் கொண்டு வந்து வேண்டியது பொடிசெய்து கந்தத்தோண்டியில் போட்டு மேல்சட்டி கொண்டு மூடி ஏழுசீலை மண்செய்து அடுப்பில் வைத்து மெதுவாக விளக்குப் போலே எரித்து வரவும். சட்டிமேலே நீரால் கொடுத்து வரவும். இந்தத் தயிலம் திராவகம் போல் கரகத்தின் வழியே பாயும். இதுக்கு வெள்ளைப் பீங்கான் கரக மூக்கிப் பக்கத்தில் வைத்துப் பிடிக்கவும்.
௨௦௦ இப்படி திராவகம் இறக்கினாப் போலே இறக்கி வைத்துக் கொண்டு இரண்டு வேளையும்

வேளைக்கு இரண்டு காசிடைத் தயிலம் கோதுமை
மாவினாலாவது பொரிமாவினாலாவது போட்டுக் கொடுக்கவும்.
இப்படி யிருபது நாட்கள் கொடுக்கத் தீரும் வியாதி—
வாதம்–84 வகையும், மேகம் யிருபது வகையும்
அபான ரணை, மேகரணங்கள், சதைரணங்-
களும் சலனை, சன்னிசுரம், அசீரணம், கெர்ப்பத்தில்
பிறக்கின்ற கட்டிகளையெல்லாம் கரைந்து
போகும். இரணங்களும் மாறி உலர்ந்து போம்.
பத்தியம் — பசுவின்பால், நெய், துவரம்பருப்பு,
முருங்கைப்பிஞ்சு, முருங்கைப்பூ, பீர்க்கம்பிஞ்சு,
கத்திரிப் பிஞ்சு, தூக்கணை, தித்திப்புப் பண்டங்கள்
சாப்பிடவும். அக்கினியுண்டாம், பசியுண்டாம்,
வீரியவிர்த்தி யுண்டாம், புத்தியுண்டாம். சரீர-
(சரீரம்) மொழுவு சிறக்கும். இந்தத்தயிலம்
புளித்திருக்கும். நாள்பட யிருந்தால் ஆறுந்து போம்.

ஏழு மெலிசுக் காச்சு விபரம்.

அ. கிராம்பு - பலம் -1, ஏலரிசி - பலம் -2, சதகுப்பை-
பலம் -2, பெருஞ்சீரகம் - பலம் -4, நற்சீரகம் -
பலம் -2, கொத்தமல்லி - பலம் -24, அக்கு - பலம் -2,
மெல்லிசுப் பிஞ்சு, துளசி, கஞ்சாங்கோரை,
கருந்துளசி, கொஞ்சம் வசம்பு, சாதிக்காய் - 4,
கருவாப்பட்டை - பலம் -4, குங்குமப்பூ - கொஞ்சம்
யிவையெல்லாம் பத்துப் பொட்டியள் பிராந்தியிட்டு
ஊறவைத்து லம்பிக்கையாலே காச்சி யிறக்கவும்.
சின்ன சிலரைக்கு மேனுக்குப் பூசி, உள்ளுக்கு
பத்துத்துளி தண்ணிப் பொட்டணத்தில் கலக்கிக்
கொடுக்கவும். சின்னி தீரும். சோகை விதையும் சோகை
விதையோசனம்.

கொடிமுந்திரி உப்பு - விராகனிடை - 1கு
மேத்திக்கு - நெல்லிடை 1கு வெண்ணெய்
கூட்டி வெந்நீர் விட்டுக் கரைத்து - 1/2 கிழக்கும்
பேதியாம்.

2 சோம்பு - ஜ - 1, கிரேமுத்தாரது - ஜ - 1
யிவை யிரண்டையும் யிடித்து மெல்லிய துணியா-
லரித்து வைத்துக் கொண்டு ஒரு விராகனிடை
நிறுத்து ஆண் பிள்ளைகளுக்குக் கொடுக்கவும்.
7, 8 விசை பேதியாம். வாய்வுக்கு நல்லது.

---

201. பித்தம் - 6 வகைக்கும் சீந்திற் சக்கரை

முத்தின சீந்தில் தண்டு - வீசை - 2 கொண்டு
வந்து மேல் புறணியையெல்லாம் உரித்துப் போட்டு
துண்டெல்லாம் அரிந்து உரலிலே போட்டுத்
தொழித்து வாரியெடுத்து பெரிய சாலில் போட்டு
நிரம்பத் தண்ணீர் வார்த்துப் பிசைந்து திப்பி-
யையெடுத்துப் போட்டு தென்னம் பண்ணாடையில்
மூணு முறை வடிகட்டி மறுகால் மெல்லிய
வெள்ளைப் புடவையினால் நாலுமுறை வடி
கட்டிக் கொண்டு பெரிய சட்டிகளில் வார்த்து
வெய்யிலிலே வைத்து தெளிவாலே யிறுத்துப்
போட்டு அடிக்கிடும்வெல்லாம் ஒரு சட்டியில்
வார்த்து தெளிய விட்டு மேலிட்டாப் போலே
இறுத்துப் போட்டு அடிக்கிடும்வெல்லாம்
சேர்த்து ஒத்தப் புடவையில் நாலு மடித்தையில்
வடிய விட்டு
வார்த்து தண்ணியையெல்லாம்

கட்டின்மேலே வரித்துப் போட்டு காயப்போட்-
டெடுக்க சர்க்கரையா யிருக்கும். இதையெடுத்து
வைத்துக் கொண்டு யிதுக்குப் பிரதி பாகம்-
ஏலம், அதிமதுரம், கொத்துமல்லி யிவை
சமன் கூட்டி யிடித்துச் சூரணம் பண்ணிக்
கொண்டு சீந்தில் சர்க்கரை பங்கு-நாலு, யிந்தச்-
சூரணம் பங்கு - ஒன்று யிவை இரண்டு வகையு-
மாகக் கலந்து வைத்துக் கொண்டு ரெண்டு
வேளையும் வேளைக்கொரு வராகனிடை
யெடுத்து எலுமிச்சம் பழச்சாத்தில் கலந்து
கொடுத்துவரத் தீரும் வியாதி - 2-ம் மேகம்,
பித்தம் இருவகையும் ரத்த இன்மை யிவை
யெல்லாந் தீரும்.

சீந்தில் சர்க்கரை மாத்திரம் வெள்ளைக்கு
வராகனிடை கொடுத்துவர - விஷபாண்டுவும்,
அ. வீக்கம்; உஷ்ணகாமாலை, வீக்கப்பாண்டுவும்,
மருந்துகளாலேன வந்தும் யிருக்கிற வீக்கங்கள்,
மகோதர வீக்கம் யிவை யெல்லாந் தீரும்.

சீந்தில் சர்க்கரை, வங்கபஸ்பம், சர்க்கரை
யிந்த மூணு வகையுஞ் சமன் கூட்டிக் கொடுத்து-
வரத் தீரும் வியாதி - மேகம், நீர்க்கடுப்பு
நீர்க்கட்டு, மேகவாய்வு, அக்கினி மாந்தம்,
புளியேப்பம் யிவை யெல்லாந் தீரும்.

சீந்தில் சர்க்கரை-பங்கு ஒன்று, தாளிசச்-
சூரணம்-பங்கு ரெண்டு யிந்த ரெண்டு வகையுஞ்
கலந்து கொண்டு ரெண்டு வேளையும் வேளைக்கு
வராகனிடைச் சூரணம் தேனில் கொடுத்துவரத்

தீரும் வியாதி - சுரம், இருமல், க்ஷயம், அக்-
கினிமாந்தம், மேகவாயு, பித்தக்கிறிச்சி, மது-
மேகம் பிணிகளெல்லாந் தீரும்.

பசுவின்பால் சர்க்கரை

பசுவின்பால் - படி - 2 ஒரு கின்னத்தில் வார்த்து
பெரிய அகல் சட்டியில் பாதிக்கு தண்ணீர் வார்த்து
அதுக்குள்ளே பாந்த கின்னத்தை போலவாந்-
திரமாகக் கட்டி முக்கால் கின்னம் தண்ணியில்
முழுகவிட்டு அடுப்பில் வைத்துக் காய்ச்சவும்.
பால் சுண்டகண்ட உடனே படிக்காரம் பொடி
செய்து மாவடையிட்டு யெடுத்துப் பாலில்
போட்டு சிறு தீயினாலே பாலின்
நீராவிக் கொடுத்து வரவும். சட்டியில் தண்ணீர்
சுண்டி வற்றிதென்று கண்டால் அந்த அளவுக்குத்
தண்ணீர் வார்த்து வரவும் கின்னத்துப் பாலெல்லாந்
சுண்டி சர்க்கரையாம். இந்தப் பால் சர்க்கரையை
யெடுத்து வைத்துக் கொண்டு இதுக்குப் பதிலாக
அதிமதுரம் - வராகனிடை 8, வெங்காரச் சர்க்கரை
வராகனிடை - 50 இவைகளெல்லாம் கூட்டி
202. இடித்துச் சூரணம் பண்ணி சர்க்கரை கூடக்
கலந்து வைத்துக் கொண்டு இரண்டு வேளைப்
வேளைக்கு பால் சர்க்கரை வராகனிடை - 1,
சூரணம் - வராகனிடை - ¾ யாக இரண்டு
வனையமாகக் கலந்து கொடுத்து வரத் தீரும் வியாதி -
தேகம் எங்கும் - நெருப்புப் போலே எரிவந்த
தாகம், உஷ்ணம் பிணிகளெல்லாந் தீரும்.

இரேசகமோ செய்யும் விபரம்

கரியபோளம் - பலம் - 3, இளைந்தியார் தொட்ட பலம் - 2, வாளேந்திரப் போளம் - பலம் - ௨ வெள்ளைக் குங்கிலியம் - பலம் - ௩, குங்குமப்பூ பலம் - 1 இவைகளையெல்லாம் நறுக்கி போட்டு பொட்டுது மார்ந்திச் சாராயத்தில் போட்டு நாற்பது நாட்கள் ஊறவைத்து தெளியவைத்து இருத்து பொட்டுதுகளில் நிரப்பிக் கொள்ளவும் மறுபடி அடிவண்டலில் அன்பது போட்டலில் வளைந்தி வாத்து நாற்பது நாட்கள் ஊறின பாகு தெளிய யாறுத்து பொட்டுதுகளில் நிரப்பிக் கொள்ளவும்.

1819-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் -3-ந்தேதிக்குச் செல்லும். பகுதானிய வருடம் தைமாதம் -௨௪-ந்தேதி யாந்த வயாத்திய சூத்திரம் கடைசி எழுதி முகிந்தது. புதவாரம்- காரைக்கால் படைக்கடை மாமரத்தம்பி கையால் எழுதி முடிந்தது. முற்றும்.

முதல் 45 - அருவக்கம், ௨-வது - 37 பருவக்கம்
3வது - 81, 13 - பேருபன்னை அப்புறம் -
95-வது, 104-வது ஒரு வரைக்கும் இருக்கிறது
மத்தியில் ஆறு ஒரு பன்னை. 155க்கு
அப்புறம் 2ம ஒரு இல்லை. அப்புறம் -
176 - பேரு முதல் ஆக மொத்தம் 20வ
லக்கம் வரைக்கும் இருக்கிறது. 5 முதல்
10 வரைக்கும் ஆறு ஒரு இல்லை.
20வக்கு - 39 பேருபன்னை
முதல் கணக்கு - 66க்கு 45க்கு மேல்
21 - பேரு பன்னை.
66, 37, 20வ. முன் கணக்கில் 20 பேரு
இல்லை. ஒரு 13, 6, 20 ஆக - 39.

சாருவாரி வருடம் சித்திரை மாதம் 16ந்தேதி
அக்கில் வாரம் ... பார்த்து பன்னா
திருக்கின்றது. பாப்படிக்கு சொன்னவேறு.

இக்கணப்போது, வையமோனை சிவைத்து புத்தக் [illegible]

ஒப்புரவோடு அச்சுக்கு விடுங்களாம்

[illegible]

ஸ்ரீ [illegible]

15.5.98.